# வணக்கமும்



# வாழ்த்தும்





R.T. ARASU.

தத்துவ மேதை-

# டி. கே. சீனிவாசன் எம். பி.

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

**நூலக நூல்கள்**

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

**பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை**

வளர்ந்த கனவுகளும் உதிர்ந்த நினைவுகளும் - 3

# வணக்கமும்

# வாழ்த்தும்


ஆசிரியர் :

தத்துவமேதை - டி. கே. சீனிவாசன் *M. P.*



வெளியிடுபவர்:

டி. கே. எஸ். சரஸ்வதி

P-3, லாயிட்ஸ் எஸ்டேட், சென்னை-14.

முதற் பதிப்பு : 1975

## ஆசிரியரின் பிற நூல்கள்

| | | |
|---|---|---|
| ஆடும் மாடும் | ... | 7-00 |
| வளர்ச்சியும் மலர்ச்சியும் | ... | (அச்சில்) |
| ஊர்ந்தது உயர்ந்தால் | ... | ,, |
| கிழக்கு வெளுத்தது | ... | ,, |

விலை ரூபாய் ஐந்து

குகன் பிரிண்டர்ஸ்
2, மல்லன் பொன்னப்ப முதலி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5



# பொன்னுரை

இந்த இனிய விழாவில் என்னுடைய அருமை நண்பர் தத்துவமேதை சீனிவாசன் அவர்கள் ஆற்றிய உரை... அந்த உரையின் பிற்பகுதி முழுவதும் என்னை உணர்ச்சி மயமாக ஆக்கிவிட்டது என்று சொன்னால் அது மிகையாகாது. எனக்கும் அவருக்கும் உள்ள தொடர்பை ... நட்பை ... உறவை எடுத்துச் சொல்லுவதற்கு மாத்திரமல்லாமல் என்னுடைய பெருமையை உயர்த்துவதற்காக அவற்றைச் சொல்லி யிருப்பார் என்றாலும் கூட அந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் அழைத்துச் சென்று என் மனக் கண்ணால் அந்த நிகழ்ச்சி களைக் காணச் செய்து என்னுடைய உணர்வுகளை எல்லாம் தட்டிவிட்டு என்னை பேசுவதற்குக்கூட இல்லாமல் ஆக்கி விட்டார் என்று சொன்னால் அதை மிகைப்படுத்திக் கூறுவது ஆகாது.

அவர் எதிலும் மனதில் பட்டதைச் சொல்லக்கூடிய துணிவு படைத்தவர்; எதனையும் வெளிப்படையாகச் சொல்லக் கூடியவர்; அப்படிப் பேசிப் பழக்கப்பட்டவர். அவர் சொன்னதைப் போல வசை பாடுவதாக இருந்தாலும் அதை நேராகவே செய்யக் கூடிய மன உறுதியும் தெளிவும் படைத்தவர். நேராகவே திட்டுகிறவர்களிடத்தில்...வசை பாடுகிறவர் களிடத்தில் எனக்கு எப்போதும் மரியாதையும் மதிப்பும் உண்டு. ஆனால் பின்னாலே பேசுகின்றவர்களைப் பற்றித்தான் அதிகமாக பயப்படுவேன்; மரியாதையையும் குறைவாகவே வைப்பேன்.

இவ்வளவு திட்டியும்கூட கருணாநிதி எனக்கு இவ்வளவு செய்திருக்கிறாரே என்று அவர் ஆச்சரியப்பட்டார். அவர் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அவர் களங்கம் இல்லாதவர்...எதையும் நேராகவே பேசக் கூடியவர்...புறங் கூறித் திரிபவர் அல்ல என்ற காரணத்தாலேதான் இவற்றை யெல்லாம் என்னால் இயன்ற அளவுக்குச் செய்தேனே அல்லாமல் செய்ய வேண்டியவைகளை எல்லாம் செய்து விட் டேன் என்று கூறுகிற அளவுக்குச் செய்திடவில்லை.

இதனால் நண்பர்கள் ஒரு தப்புக் கணக்குப் போட்டுவிடக் கூடாது. சரி, இவனிடத்தில் காரியம் சாதிப்பதாக இருந் தால் நேராகவே திட்டவேண்டும் என்று யாரும் அதற்கான தொடக்க விழாவினை நடத்த மாட்டார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

இன்றைக்கு இந்தக் கழகம் கடந்த 49 ஆண்டுகால வளர்ச்சிக்குப் பிறகு தார்ப் போட்ட சாலையில் நடைபோடு கிறது என்றால் அந்தத் தார் போட்ட சாலைகளை உருவாக்க எத்தனைத் தோழர்கள் அந்தத் தாரைக் காய்ச்சுவதற்கு நெருப்புக்குப் பக்கத்திலே தங்கள் உடம்பினைச் கருக்கிக் கொண்டு நின்றார்களோ அந்த வரிசையில்தான் நண்பர் டி.கே.சினிவாசன் வருகிறார்.

நானும் அவரும் ஒரே மேடையில் இணையாகப் பேசியவர் கள் தான். இன்னும் சொல்லப்போனால் என்னைவிட ஒரு நாளோ அல்லது இரண்டு நாளோ முன்னாலேயே இந்தக் கழகத்தின் பணிக்கு தன்னைத் அர்ப்பணித்துக் கொண்டவர் தான். இன்னும் சொல்லப்போனால் என்னைவிட இரண்டுநாள் முன்னாலேயே அண்ணாவுக்கு அறிமுகம் ஆனவர்தான்.

(மாயூரம் அண்ணா பகுத்தறிவு மன்றத் திறப்பு விழாவில் தமிழக முதல்வர் மாண்புமிகு. டாக்டர். கலைஞர் பேசிய பேச்சின் ஒரு பகுதி).

நன்றி: நண்பர். **கிட்டப்பா**

# முன்னுரை

அறிஞர் அண்ணவைப்பற்றி மாலை மணியிலும், தென்னகம் வார இதழ்களிலும் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு.

மாயூரம் அண்ணு பகுத்தறிவு மன்றத்தில் தமிழக முதல்வர் மான்புமிகு. டாக்டர் கலைஞர் அவர்களுடைய படத்தைத் திறந்து வைத்த போது ஆற்றிய சொற்பொழிவு

வானெலியில் 'குறளமுதம்' நிகழ்ச்சியில் பேசிய மூன்று உரைகள்.

மூன்றும் இணைந்து இந்நூலாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது.

வெளியிட்ட இதழ்களுக்கும், இசைவுதந்த மாயூரம் நண்பர்களுக்கும், வானெலிக்கும் என் நன்றி

டி. கே. சீனிவாசன்

நெருக்கடியான நேரங்களில்
என் நிலை தாழாமல் தவிர்த்த
என் நண்பரும், திராவிட முன்னேற்றக்
கழகத் தலைவரும், தமிழக முதல்வருமான
மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின்
நல்ல பண்புகளுக்கு இத்தொகுப்பைச்
சமர்ப்பிக்கிறேன்

டி. கே. சீனிவாசன்



தத்துவமேதையும், அறிஞரும்

# வரலாறு வாழ்த்துகிறது

இணைக்கப்படுகிற நிகழ்ச்சிகள் சிந்தனையால் நிர்ணயிக்கப் பட்டுப் பிறகு தொகுக்கப்படுகின்றன. தொடக்கமும் அதற்கு ஒரு தொடர்ச்சியும், தொடர்ச்சிக்கு ஒரு தோற்றமும் உருவாகும்போது அது வரலாறு ஆகிறது.

மன்னர்களை முன்னிறுத்தி வரலாற்றைப் படிக்கும்போது வேலையற்றவர்களுக்குக் கிடைக்கும் தேவையற்றவர்களின்பட்டியலாகத்தான் அது தோன்றும். மக்களுடைய எழுச்சியாகவும் வளர்ச்சியாகவும் வரலாறு எழுதப்படும் போதுதான் மதிப்புள்ளவையையும் மகத்தானவர்களையும் சமுதாயம் சந்திக்கும் நிலை ஏற்படுகிறது.

காலத்தின் அளவுகோல்களாக மதிக்கப்படுபவர்களும், ஒரு காலத்துக்கும் மறு காலத்துக்கும் இணைப்புகளாக இருந்தவர்களும் திக்குத் தெரியாது சமுதாயம் தடுமாறும் போதெல்லாம் திசை காட்டும் கருவிகளாக இருந்து உதவி இருக்கிறார்கள். வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் சமுதாயம் அப்படிப்பட்ட வழிகாட்டிகளைச் சந்திக்கிறது.

அமைதியாகச் சிந்தித்து அடக்கத்தோடு மனித குலத்தை அழைத்துச் சென்ற அவர்கள் தங்கள் மூளைகளைப் போர்க்களம் ஆக்கினார்கள். அவ்வப்போது அவற்றில் எழும் மாறுபட்டவையும் முரண்பட்டவையுமான சிந்தனைகளை ஒன்றோடொன்று மோதவிட்டனர். இறுதியாக வெற்றி பெற்றவைகளை வெளியிட்டு உலகுக்கு ஒளியூட்டினார்கள்.

அந்த ஒளி சமுதாயத்தின் விழிகளுக்கு முன் படர்ந்திருந்த இருளை விரட்டி அடித்தது - படிந்திருந்த அறியாமையை அழித்தது. சோர்ந்திருந்த பார்வைகளில் இரத்தம் சுரந்து சுறுசுறுப்பை உண்டாக்கிற்று. உணர்வுகள் உண்டாகிக் காலப்போக்கில் உணர்ச்சிகளாக உருமாற்றப்பட்டன. எத்தர்களால் தன்மேல் ஏற்றி வைக்கப்பட்ட சுமைகளை எடுத்து வீசி எறிந்தது சமுதாயம்.

மனிதன் தன்னைசெம்மைப்படுத்திக் கொள்ளவும்செழுமைப் படுத்திக் கொள்ளவும் கற்காலத்திலிருந்து நடத்திய போராட்டங்களை இரு கூறுகப் பிரிக்கலாம். அரசர்களும் அரசுகளும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட நடத்தியவை போர்கள் என்று அழைக்கப்படுகின்றன. அடித்தளத்தில் அவதிப்பட்டுக் கொண்டிருந்த மக்கள் தங்கள் கழுத்துக்களை நெரித்த கட்டுப்பாடுகளை உடைத்தெறிய உருவானவை புரட்சிகளாகும்.

நாட்டின் நிர்வாகத்துக்கும் அதற்குட்பட்டிருப்போருக்கும் இடையே இருந்து சமுதாயத்தின் உரிமைகளைக் கட்டுப் படுத்தித்தன் உயர்வையும் வாழ்வையும் ஒருங்கே காப்பாற்றிக் கொண்ட இடைத்தரகன் தான் மன்னன்.

விளைவிக்கப்பட்டவையையும் உற்பத்தி செய்யப்பட்டவை யையும் சமுதாயம் அனுபவிக்க முற்படும்போது உற்பத்தி செய்பவனுக்கும் அதைப் பயன்படுத்துபவனுக்கும் இடையில் இருந்து உண்டு கொழுக்கும் இடைத்தரகன் தான் முதலாளி.

எந்த ஒரு மனிதனும், தன்னை உருவாக்கியவனை வேண்டி வணங்கும் போதும் - தனியாக வாழும் நிலையிலிருந்து துணை யோடு இணைகிற நிலைக்கு மாறும் நேரத்திலும் - உலகுக்குத் தன்னை அளித்து விட்டுத் தங்கள் காலத்தை முடித்துக் கொண்டவர்களை நெஞ்சில் நிறுத்த முற்படும்போதும் - குறுக்கிட்டு இடைப்படுத்திக் கொண்டு, தனிப்பட்டோர் வாழ்வுக்கும் அவர்கள் நிறைவேற்றும் கடமைகளுக்கும் பரிமாற்றம் செய்யவே படைக்கப்பட்டவன் என்று உரிமை பாராட்டிப் பணம் பறித்துத்

தன் வாழ்வைப் பரிமளிக்கச் செய்து கொண்ட இடைத்தரகன் தான் புரோகிதன்.

புரோகிதன் சமுதாயத்தின் அறிவைக் கட்டுப்படுத்தினன்; மன்னன் சமுதாயத்தின் வாழ்வைக் கட்டுப்படுத்தினன்; முதலாளி சமுதாயம் வாழ உதவும் வசதிகளைக் கட்டுப்படுத்தினன்.

காலம் எதுவாக இருந்தாலும் நாடு எதுவாக இருந்தாலும் எந்தப் புரட்சிக்கும் காரணமாக இருந்தவர்கள் இந்த இடைத் தரகர் கூட்டந்தான். எழுச்சி பெற்ற சமுதாய மக்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டு இந்தக் கூட்டத்தை ஒழித்துக் கட்டினார்கள். ஆறுக ஓடிய குருதியும் அதன் ஓட்டத்தில் மிதந்து அடித்துச் செல்லப் பட்ட பிணங்களும் உருவாக்கிய விளைவுகள்...? அரசியலில் மக்களாட்சி - பொருளாதாரத்தில் பொதுவுடைமை - சமுதாயத்தில் மறுமலர்ச்சி !

இந்தியத் துணைக்கண்டம் இந்த விதிக்கு விலக்காக எப்போதும் இருந்ததில்லை. மன்னனுக்குத்தான் பரம்பரை ஆதிக்கம் இருந்தது மற்ற நாடுகளில், ஆனல் இங்கே மற்ற இடைத் தரகர்களும் பரம்பரை ஆதிக்கத்தைப் பெற்றனர் ஜாதிமுறை காரணமாக.

உழைக்கும் மக்களுக்கு வயிறே வாழ்வாக்கப்பட்டது - அதற்குமேல் எண்ணங்களை உயர்த்த வழியில்லாது போயிற்று. உழைப்பைப் பெரும்பாலோர் மேல் சுமத்தி விட்டு ஓய்வை முழுமையாக அனுபவித்தது அந்தக் கூட்டம்.

அந்த ஓய்வுநேரம் அவர்கள் தங்களைத் தாங்களே உருவாக்கிக்கொள்ள உதவிற்று. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தங்களை வலிவுபடுத்திக் கொண்டார்கள். சமுதாயத்தின் நுட்பங்களையும் நுணுக்கங்களையும் நெளிவு சுழிவுகளையும் நீக்குப்போக்குகளையும் உணர்ந்து அதோடு பக்குவமாகப் பழகவும், அதன் நேசத்தையும் பாசத்தையும் பரிபூரணமாகப் பெறவும் தேவையான தேர்ச்சியை உண்டாக்கிக் கொண்டார்

கள். எவரையும் எளிதில் தம் கட்டுக்குள் கொண்டு வந்து இயக்கும் நிலை பெற்றார்கள் அவர்கள். உடல் உழைப்புத் தேவையற்றுப் போனதால் அறிவை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பும் வசதியும் கிட்டியது அவர்களுக்கு.

அந்நியன் - வெள்ளையன் - நம்மை அடக்கி ஆண்டவன் - குபேரபுரியாக இருந்த நாட்டைக் குசேலபுரி ஆக்கியவன் - அவனுக்கு ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டது. எஜமானர்களாக இந்த நாட்டில் இருந்த அந்தக் கூட்டம் தங்களை எடுபிடிகளாக்கிக் கொள்ள விரும்பவில்லை. இந்தியர்களைக் கொண்டே நிர்வாக இயந்திரத்தை இயக்கத் தொடங்கினர். தங்களை உயர்த்திக் கொண்டவர்கள் அதில் ஒட்டிக்கொண்டார்கள். காலப்போக்கில் பரங்கியின் பாதுகாவலனாக நிர்வாகத்தோடு இணைந்திருந்தவர்கள் அதில் பங்குகேட்கும் நிலை பெற்றார்கள்.

'நிர்வாக இயந்திரத்தில் எங்களுக்குப் பங்கு வேண்டும்' - இந்தக் குரல் எப்போது - எங்கே - யாரால் முதன் முதலில் எழுப்பப்பட்டது என்பதைப் புரிந்துகொள்ளமுடிந்தவர்களுக்கு அதன் அடிப்படை உண்மை தெரியும். அவர்களுக்கு நாடெங்கும் இருந்த இணைப்பு குரலுக்கு வலிவும் வளர்ச்சியும் ஏற்பட வாய்ப்பேற்படுத்திக் கொடுத்தது. அந்தக் குரலின் தொடர்ச்சிதான் இந்திய தேசிய காங்கிரஸ்.

இதைவிட தீவிரமான குரலொன்று எழுந்தது சென்னையில், 'நிர்வாகம் முழுதுமே இந்தியர் கையில் ஒப்படைக்க வேண்டும்'. இதை எழுப்பிய ஆங்கிலேய மாது **அன்னி பெசண்ட்**. அவளுக்கு ஆதரவாக அக்கிரகாரத்திலிருந்து ஒரு அணியையே திரட்டினர்.

எழுந்தது ஒரு குரல்அப்போது. திரையிட்டு மறைக்கப்பட்டிருந்த தமிழ் படித்த அறிஞர்கள் திரையைக் கிழித்துக்கொண்டு வெளிப்பட்டனர். பண்டைய தமிழ் ஏடுகளைப் பாடிவீடுகள் ஆக்கினர். எண்ணங்களை அம்பாக்கி எத்தர்களை நோக்கி

எய்தனர். போர்க்குரல் கேட்டு விழித்தெழுந்தது தமிழகம். அதற்கு விவரங்கள் அனைத்தும் தெரிந்தன - புரிந்தன.

"இந்தியர்கள் என்றால் அந்த இடைத்தரகர்கள் மட்டுந் தானா? மற்றவர்கள்....? எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல இடங்களைப் பிரிந்துக் கொள்வோம், உங்கள் பங்கு போக மிச்சத்தை எங்களிடம் தந்து விடுங்கள்"

வாயற்ற கூட்டம் வாய்வலிக்கக் கூறியது. அப்போதும் அதற்கு வலிவேற்படவில்லை. ஒரு குறிப்பிட்ட வரம்புக்குள் இயங்கியது தென்னிந்திய நல உரிமைச் சங்கம் - நீதிக்கட்சி.

தூய்மையும் துடிப்பும் ஒன்றாக இணைந்தவர்களால் அந்தக் கட்சி உண்டாக்கப்பட்டிருந்தாலும் காலத்தை எதிர்த்து நிற்க முடியாமல் போனதால் அது வளராமல் வாடியது.

'பதவிகள்' என்று வரும் போது, அவர்கள் யாருக்காக வாதாடினார்களோ அவர்களில் ஒரு குறிப்பட்ட சிலர்தான் படித்திருந்தார்கள். சமுதாயத்தின் பெரும் பகுதி அந்தக் கட்சியின் எல்லைக் கோட்டுக்கு அப்பாலேயே நிற்கவேண்டி நேரிட்டது.

கட்சியைத் தொடங்கியவர்கள் காலமான பிறகு அவர்கள் வழிவந்தோரால் அதன் தூய்மையைக் காப்பாற்ற இயலவில்லை. மக்களோடு இணைந்து பழகாமல் அவர்களை எட்ட நிறுத்தியே பழக்கப்பட்ட பணம் படைத்தோரும், படித்த படிப்புக்கு பயன் பெறுவது ஒன்றுக்காகவே அது வகுத்த பாதையில் நடக்கத் தொடங்கியவர்களும் இணைந்ததால் பொதுநல உணர்வு அறும் நிலை ஏற்பட்டது அவர்களுக்கு.

அந்த நேரத்தில் பரவி வந்த தேசீய உணர்வு மக்களுடைய இதயங்களை எரிமலை ஆக்கி வருவதை அலட்சியப் படுத்திவிட்டு ஆட்சிபீடம் ஒன்றிலேயே கவனஞ்செலுத்தியதால் எதிர்ப்பைத் தாக்குப் பிடிக்கும் நிலையை இழந்து இறக்கும் நிலையை அடைந்தது நீதிக்கட்சி.

எவரும் எதிர்பாராத நேரத்தில் ஈரோட்டிலிருந்து ஒரு போராட்டக்குரல் ஒலிக்கத் தொடங்கியது. எந்த ஆதிக்கத் துக்கும் கட்டுப்படாமல் வளர்ந்து, அதையே தன் பிறவிக் குணமாக ஆக்கிக்கொண்ட **பெரியார்** காங்கிரஸ் கட்சியி லிருந்து வெளியேறி விடுதலை முழக்கம் செய்தார். 'சமுதாய ஏற்றத் தாழ்வுககளுக்கு எந்தவிதப் பரிகாரங்களையும் செய் யாது தேசீய இயக்கம். அவை இருந்தால்தான் தங்களால் அரசாள முடியும் என்று நினைப்போர் அதை இயக்குகின்றனர்'- இதுதான் பெரியாரின் போர்க்குரலாக ஒலித்தது. எந்தக் காரணங்களால் பெரியார் காங்கிரஸிலிருந்து வெளியேறினு ரோ அந்தக் காரணங்களைக் கருவறுப்பேன் என்று சூளுரைத் தார் அவர்.

சமுதாயத்தின் முறைகேடான அமைப்புதான் ஒரு சிலர் மட்டும் முன்னேற வழி செய்கிறது. ஒதுக்கப்பட்டோர் அனைவரும் ஒன்றுபட்டு அவர்களை ஒடுக்கி வைத்த சமுதாய அமைப்பை உடைத்தெறிந்து விட்டுப் பேதமற்ற ஒரு சமுதா யத்தை உருவாக்க முற்படுவோம்....இதுதான் சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படைகள்.

மூன்று காரணங்கள் அதன் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டை போட்டன.

யாரை எதிர்த்து போராடச் சொல்லிச் சமுதாயத்தை அவர்கள் தூண்டினுர்களோ அவர்களைத்தான் சமுதாயம் தன்னுடைய அன்ருடத் தேவைகளுக்காகச் சந்திக்க வேண்டி இருந்தது. வணிகர்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், உண வுச் சாலைகளின் உரிமையாளர்கள், புரோகிதர்கள், அரசாங்க அதிகாரிகள், பத்திரிகைகளுக்குச் சொந்தக்காரர்கள், பொது மேடையேறி வசைமாறி பொழிபவர்கள்...இவர்கள் ஒரு வலி வுள்ள பிரசார இயந்திரமாக அவர்களை எதிர்த்து இயங்கிக் கொண்டிருந்தனர்.

சமத்துவத்தை நிலைநாட்ட இயங்கக்கண்ட பெரியார், அவரோடு பணியாற்ற வந்தவர்களை தன்னுடைய 'எடுபிடிக

ளாக' மதித்தாரே தவிர, அவர்களுக்குச் 'சம அந்தஸ்து' தர முன் வரவில்லை. அது அவரால் முடியாத ஒன்றுகூட.

அடித்தளத்தில் இருந்த மக்களுக்கு ஆராய்ச்சிகள் புரியவு மில்லை...உதவவுமில்லை. அதனால் அறிவுக்கு வேலை தர வேண்டிய கட்சித் தொண்டர்கள் உணர்ச்சிகளைத் தூண்டி விடத் தொடங்கினர்.

இவற்றின் காரணமாக, 'எந்தவித ஒழுங்குக்கும் உட்படாத உதிரிகள்' என்று அவர்களை மதிப்பிட்ட சமுதாயம் தன்னுள் நுழையாமல் அவர்களைத் தடுத்து நிறுத்தியது.

அரசியல் அணி அற்றுப்போனது...சமுதாய அணி அரை யுங் குறையுமாக இருந்து தவித்தது.

அந்த நேரத்தில் பெரியார் அணியில் இணைந்தவர்தான் **அறிஞர் அண்ணா.**

எவரையும் எடை போடும் ஒருவரை எடை போடத் தொடங்கும்போது இந்த நீண்ட முன்னுரையும் விளக்க உரையும் தேவைப்படுகிறது. வரலாற்றின் வணக்கத்துக்குரிய ஒரு பரம்பரையின் வழிவந்த அந்தத் தலைவர் நிலைகுலையாமல் சமுதாயத்தின் நினைவுகளில் வாழ்ந்து வருகிறார்.

காஞ்சி மாநகரம் குறிப்பிட்ட ஒரு சிலருடைய கவனத்தைக் கவருவதாக மட்டும் எப்போதும் இருந்ததே இல்லை. மகேசு வரனுடைய ஆதிக்கத்தை அங்கிருக்கும் கோவில்களின் தலை நிமிர்ந்த கோபுரங்கள் அறிவிக்கின்றன. மன்னர்களின் ஆதிக் கத்தை அங்கிருக்கும் கல்வெட்டுகள் காணச் செய்கின்றன. மக்களுடைய ஆதிக்கத்தை உணர்த்துகிற ஒரே உருவந்தான் திரு. **காஞ்சிபுரம் நடராஜன் அண்ணாதுரை.**

**அண்ணா**...! அவருடைய பெயரின் சுருக்கம் மட்டுமல்ல; நமக்கும் அவருக்கும் இடைவெளி இல்லாமல் தவிர்க்கும் உற

வின் நெருக்கமும்கூட! இன்றைய அரசியலில் இறுதிப் புகலிடமாக எவராலும் ஏற்றுக் கொள்ளப்படும் ஒரே தலைவர்!

ஏற்றம் மிகுந்த எழுத்தாளர்...இதயங் கவரும் பேச்சாளர் ...கலையுலகுக்கு ஓர் கலங்கரை விளக்கம்...திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்...இன்றைய தமிழக அரசின் முதல்வர்! முற்றுப்புள்ளி வைக்காது தொடரும் ஒரே வாக்கியத்தில் அவரை அடைத்து வைக்கலாம் போலிருக்கிறது என்றுதான் தோன்றும் இதைப் படிக்கும்போது. ஆனால்...... இவை ஐந்தும் தலைப்புகளே தவிர உள்ளடக்கங்கள் அல்ல!

எல்லைக் கற்களை எண்ணிக் காட்டுவதாலேயே ஒரு நீண்ட பயணத்தின் முழு விளக்கத்தையும் எழுதி முடிப்பது ஆகாது. கண்களை மூடிக்கொண்டு கால்களை இயக்கினுல்கூட எவையெவையோ இடையில் தட்டுப்பட்டு நம் இதயத்தில் இடம் பெற முயற்சிக்கும். தூரத்தைக் கடக்க செலவிட்ட நேரம்...... அந்த நேரத்தில் உருவான நிகழ்ச்சிகள்.........அந்த நிகழ்ச்சிகள் உருவாக்கிய நிலைமைகள்...........நிலைமைகளுக்கேற்ப எழுந்த நினைவுகள், உருவாக்கப்பட்ட சூழ்நிலைகள், உருவாகி அமைந்த சுற்றுச் சார்புகள்.........இடையே ஏற்பட்ட இன்ப துன்பங்கள்.........ஒத்து நடந்து உடன் வந்தவர்கள்......... இடையில் அறுத்துக் கொண்டு ஓடியவர்கள்.........சூழ்ந்த சோதனைகள்...........விளைந்த வேதனைகள்...........ஆற்றிய சாதனைகள்! இதயம் படைத்தோருக்கு மட்டுமே புலப்படுகிற விவரங்கள் இவை...உருவம் மட்டும் பெற்ருேருக்கு எளிதில் புரியாத விஷயங்கள்!

அண்ணு......!

எண்ணங்களை வண்ணங்களாக்கி அவற்றைத் தன் இதயத்தில் வைத்துக் குழைத்து, எழுச்சிதரும் இலக்கியப் படைப்புகளை ஏடுகளில் உருவாக்கிய எழுத்தாளர்!

எதிரே கூடியிருப்போரைப் 'பேச்சுக் கேட்க வந்தவர்கள்' என்ற நிலையில் மட்டும் நிறுத்தாமல் 'தீர்ப்புக் கூறக்கூடியிருப்போர்' என்று மதித்துப்பேசும் பேச்சாளர்!

அரிதாரம் பூசுவோரின் குறிக்கோள் வருமானப் பெறுவது மட்டுமல்ல, சமுதாயத்தின் நிலைமாற்றி அமைப்பதுவுந்தான் என்று வழிகாட்டிய நடிகர்-நாடக ஆசிரியர்!

எழுத்து - பேச்சு - நடிப்பு! இவை மூன்றும் அவர் கையாண்ட சாதனங்களே தவிர அவருமல்ல - அவருடைய சாதனைகளும் அல்ல.

அவருடைய பொதுவாழ்வின் நுழைவாயில் நீதிக்கட்சி; தொடர்ச்சி சுயமரியாதை இயக்கம் இவை இரண்டும் இணைந்ததால் ஏற்பட்ட வளர்ச்சி திராவிடர் கழகம்-வளர்ச்சியின் முதிர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம்!

நீதிக்கட்சியை நடத்திச் செல்லும் பொறுப்பை பெரியாரிடம் அதை நடத்தியவர்கள் ஒப்படைத்தபோது அவருக்குச் சீதனமாகக் கிடைத்த சொத்துதான் அறிஞர் அண்ணா!

நீதிக்கட்சியும் சுயமரியாதை இயக்கமும் இணைந்தன; திராவிடர் கழகம் பிறந்தது. பெரியார் தலைவரானார்: அண்ணா தளபதியானார்!

பழுதுபட்ட படைவரிசை - பண்படாத பிரசார முறை - ஒத்துப்போகும் நிலைமைக்கே முரண்படும் தானைத்தலைவர் - உடைத்து நொறுக்கப்பட்டப் போர்க்கருவிகள்-ஏற்றுக் கொள்ளாமல் இருந்தால் கூடப் பரவாயில்லை, இடங்கொடுக்கக்கூட ஒத்துக்கொள்ளாத சமுதாயம் - அண்ணாவை வரவேற்ற பொது வாழ்வின் பின்னணி இவைதாம்'.

குறிக்கோளில் பெரியாரும் அண்ணாவும் ஒத்திருந்தாலும் மனப்போக்கில் மாறுபட்டனர்.

"பழமைக்குச் சாவு; புதுமைக்கு வாழ்வு" என்றார் பெரியார்.

"பயன் தருபவைக்கு வாழ்வு; பயனற்றவைக்குச் சாவு," என்றார் அண்ணா.

"அழிக்கப் பிறந்தவர்கள் நாம்" என்றார் பெரியார்.

"இல்லை, ஆக்க உழைப்பவர்கள் நாம்" என்றார் அண்ணா,

"உளி எடுப்போம்; உடைத்தெறிவோம்," என்றார் பெரியார்.

"உளி தேவை; உடைக்க வேண்டியதுதான்: ஆனால்.. கல் தச்சர்கள் பணி அல்ல நம்முடையது: அது ஒரு சிற்பியின் சாதனை," என்றார் அண்ணா.

"உடனிருப்போர் வளர்ச்சிபெற இடங்கொடுப்பது தவறு' என்றார் பெரியார்.

"அடிமைகள் அல்ல அவர்கள்; இயக்கத்தின் அச்சாணிகள்," என்றார் அண்ணா.

"வளர்த்து விட்டால் நம்மையே எதிர்க்க முற்படுவார்கள்" என்றார் பெரியார்,

"செல்வாக்குப் பெற்றால்தான் சமுதாயம் அவர்கள் சொல்வதைக் கேட்கும்", என்றார் அண்ணா.

வாய்விட்டுப் பேசிக்கொண்ட உரையாடல் அல்ல இது; இலட்சியப் பாதையில் இருவரும் இணைந்து நடந்தபோது, தனித்தனியே உணர்த்திக் காட்டிய மனோநிலைகள்!

படித்தவர்கள் படிக்கும் வாய்ப்பைப் பெற்றவர்களுக்குப் புதுப்புது விவரங்களை அளித்தனர். படிக்காத பாமரர்கள் தங்கள் இதய உணர்வுகளை அவர்களோடு பரிமாறிக்கொண்டனர். இருதரப்பாரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டனர்; உள்ளங்களை உறவாக்கிக்கொண்டனர். வரைமுறைக்கு உட்பட்ட சிந்தனைக்கு வழிவகுக்கப்பட்டது. பொதுவாழ்வுக்கோர் புதுமை சேர்க்கப்பட்டது: அத்தோடு புனிதமும் இணைக்கப்பட்டது. தேக்கத்தை உடைத்தெறிந்து தமக்கோர் ஓட்டத்தை உண்டாக்கிய அண்ணாவுக்கு இயக்கத்தைச் சார்ந்தவர்கள் தங்கள் இதயங்களில் இடங்கொடுத்தனர். இருளடர்ந்த வீட்டில் ஏற்றிவைக்கப்பட்ட விளக்கானார் அண்ணா!

அந்த நேரத்து அரசியல் சக்கரவர்த்தி ராஜகோபாலாச் சாரியார் கைகளால் இயக்கப்பட்டது. எப்போது வாய்ப்புச் சிக்கினாலும் அதைத்தன் வருணத்தார் வாழப் பயன்படுத்து பவர் அவர். ‘எதிரி வாழ்ந்தாலும் கவலையில்லை, எங்கள் இனம் இடர்ப்படக்கூடாது’-இதையே இறுதிவரைத் தன் இலட்சிய மாகக் கொண்டவர் அவர்.

‘இந்தியைப் படித்தே ஆகவேண்டும்!’ என்று உத்தரவு போட்டார் அப்போது முதல் அமைச்சராக இருந்த அவர்.

“எங்கள் தமிழுக்கு இரண்டாவது இடமா?” என்று கேட் டனர் மக்கள்.

## இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமா? எல்லோரும் வாருங்கள் தோழர்களே!

பாசறையின் போர்முரசைப் பறையடித்தார் புரட்சிக்கவி பாரதிதாசன்.

எப்போதும் பகைமையின் உள்நுழைவுதான் நாட்டின் ஒற்றுமைக்கு வழிகோலுகிறது. படையெடுப்புகள் மனஇணைப்பு களை உருவாக்கி விடுகின்றன.

பகுதி பகுதியாகப் பிரிந்திருந்த சமுதாயம் ஒரே தொகுதி யாகத் தன்னை ஒருப்படுத்திக் கொண்டது. எண்ணங்கள் உரு வாக்குபவைகளை வண்ணங்களால் வடிவமைத்துக் காட்டுபவர் கள்-காவியப் படைப்புகளால் காலங்களைச் சுற்றி வளைப்பவர் கள்-அலுவலகங்களில் அடைபட்டு அலுத்துத் தளர்ந்த ஊழி யர்கள்-ஏடுகளில் எண்ணங்களைப் புதைத்து விட்டதால் நாட் டின் நிலையை மறந்திருந்தவர்கள்-இயந்திரங்களின் இயக்கங் களுக்கும் தம் இதயங்களின் துடிப்புகளுக்கும் தொடர்பேற்படுத் திக்கொண்டவர்கள்-ஒரு ஜாண் வயிற்றையும் ஆறடிக்கட்டிலையும் மட்டுமே அவர்கள் வாழ்வாக ஆக்கிவிட்டதால் அடுப்பங்கரை களில் அடைபட்டிருந்த ஆரணங்குகள்-பரத்தைப்பற்றிய சிந்

தனைகளால் இகத்தை இகழ்ந்து பேசுவதே பேரின்பம் எனக் கொண்டவர்கள்-மாளிகைகளில் தங்கள் கேளிக்கைகளை நடத்திக்கொண்டிருந்தவர்கள்-மண் குடிசைகளில் இருளில் புதைந்து இன்னலை அனுபவித்துக் கொண்டிருந்தவர்கள்-ஒட்டு மொத்தமாகச் சமுதாயம் தன் உரத்த குரலில் ஊராள்வோரைக் கேட்டது:-

"வளமை பொங்கும் தமிழிருக்க வாழக்கூடத் தகுதியற்ற இந்திக்கு ஆளுகிற உரிமையை அளிப்பதா?''

இந்தக் கேள்விக்கு அடக்குமுறையால் பதிலளித்தனர் அப்போது ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்தவர்கள். வாழ்வின் எல்லையை நெருங்கிவிட்டதால் இறந்தகாலம் என்று மறக்கப்படும் நிலையிலிருந்தோரும், சிறைசென்ற தாய்மார்களின் இடைகளில் அமர்ந்து தங்கள் சின்னஞ்சிறு முகங்களைக் காட்டிய எதிர்கால வாரிசுகளும், நிகழ்காலத்தை அணைத்துக்கொண்டு அதன் இருபுறமும் நின்றனர். 'தள்ளாத வயது' என்று உலகம் வரையறுக்கும் வயதுள்ள பெரியாரும், காலத்தைத்தள்ளிச் செல்லும் இளமையும் புலமையும் இணைந்த அண்ணாவும் முன்னணியில் இருந்தனர்.

சிறைச்சாலைகளைப் பார்த்துச் சிரித்தது அந்தக் கூட்டம். சுழன்ற குண்டாந்தடிகள் வைக்கோல் தூசுகளாக அவர்களுக்குப் பட்டன. துப்பாக்கி முனைகள் மொழி உணர்வுக்காக விழிமூடும் பேறு பெறச் செய்பவைகளாகத் தோன்றின; இறந்தனர் இருவர்: தம்மையே இழந்து அந்தப் போராட்டத்தில் புகுந்தனர் அநேகர். மொழியைப் புகுத்த முனைந்து நின்றவர்கள் அதற்கொரு முற்றுப்புள்ளி வைக்கத் தெரியாமல் தவித்தனர்.

ஏதோ ஒரு விபத்தில் எப்படியோ சிக்கிக்கொண்டதால் பழைய நினைவுகளைப் பறிகொடுத்த மனிதன் தற்செயலாக அவனைச் சந்தித்த மறு விபத்தால் மறந்தவைகளை மனதுக்குக் கொண்டு வருவதுபோல இடைக்காலத்தில் இயங்கிய சக்திகள் பறித்துக்கொண்ட ஏற்றங்களை கட்டாய இந்தி திணிப்

பால் திரும்பத் தன் கவனத்துக்குக் கொண்டு வந்தது தமிழ் நாடு.

ஏங்கத் துவங்கிய இதயங்கள் இயங்கத் தொடங்கின. எங்கள் வாழ்வு எங்கே? நாங்கள் பெற்றிருந்த ஏற்றங்கள் எங்கே? எங்களை வாழவைத்த வளமைகள் எங்கே? எங்கள் வாழ்வைத் தழைக்கச் செய்த பண்பாடுகள் எங்கே? வள்ளுவன் குறள் எங்கே? இளங்கோவின் சிலம்பு எங்கே? இலக்கணத்துக்கு இலக்கியமான தொல்காப்பியம் எங்கே? அகத்தால் வீட்டுக்கும் புறத்தால் நாட்டுக்கும் பெருமை தேடித் தரும் பேறுகள் எல்லாம் எங்கே?

'எங்கே? எங்கே?' என்ற இந்தக் கேள்வித்தொடரை விழிவழியே வெளிப்படுத்தி விடைகளை எங்கெங்கோ தேடத் தொடங்கிய சமுதாயத்துக்கு அதன் இதயத்தைச் சுட்டிக் காட்டி, 'அங்கே!' என்று அறிவுறுத்தினர் அண்ணா.

வரலாறு அழைக்கப்படாமலே ஓடிவந்து அவருக்கு உதவியது. தத்துவங்கள் தம்மிடம் நிறைந்து இருந்தனவற்றை எல்லாம் அவரிடம் அள்ளித்தந்தன. பொருளாதாரம் பூத்து மலர்ந்து புதுமணம் பரப்பிற்று. அரசியல் அவரை அமரச் செய்யும் அரியாசனமாகத் தன்னை ஆக்கிக்கொண்டது.

'யார் இவர்?' என்று காலம் கேட்டுத்தான் ஆகவேண்டிய நிலைக்கு உயர்ந்தார். அதுவரை அது சந்தித்திராத மனிதரை உலகம் அறிமுகம் செய்து கொண்டு அவரோடு அளவளாவத் தொடங்கியது.

'தாழ்ந்த தமிழகமே!' என்று குரல் கொடுத்தார் அண்ணா.

'நிமிர்ந்துவிட்டேன் தளபதியே!' என்று பதிலளித்தது நாடு.

பொதுக்கூட்டம்-சுற்றுப்பயணம்-போராட்டம்-சிறைவாசம்! புலரும் நேரத்திலிருந்து இருள் அடரும் நேரம் வரை இவை

நான்கினுள் ஏதாவது ஒன்றில் இருக்க வேண்டிய நிலைபெற்றனர் அண்ணாவின் அணியினர். கண்ணியத்தால் மக்களைக் கவர்ந்தனர்; கனிவாக அவர்களோடு பழகினர்; கட்டுப்பாட்டுக்குள் அனைவரையும் உட்படுத்தினர். கடமை உணர்வுக்கு வித்திட்டனர்.

பலகூறுகளாகப் பிரிந்து பாழ்பட்டிருந்த சமுதாயம் ஒரே அணியாக உருப்பெற்றது. வாழ்வெல்லாம் வதைபடும் நிலை பெற்றிருந்தவர்கள் வளமை பெறும் நினைவு பெற்றனர். கடல் தாண்டிச் சென்று கண்காணாத சீமைகளில் கண்ணீர்விட்டுக் கதறும் நிலை படைத்தவர்களை உள்ளடக்கிய நாடு, 'பிறந்த மண்ணிலேயே வளமையை வளர்த்துக்கொண்டு வாழவேண்டும்,' என்று குரலெழுப்பும் நிலை பெற்றது.

உதிரிகளாக உதிர்ந்து கிடந்தவர்களை ஒன்றுக்கி, அவர்களுடைய உள்ளங்களுக்கு உரமூட்டி, அவற்றுள் உறைந்திருந்த திகைப்பை அகற்றித் தெளிவைப் புகுத்தி, பண்பாட்டில் ஒருவராகப் பகைமறைந்த மனிதராக, தங்களைச் சூழ்ந்திருப்போர் வாழ்வுக்காகச் சொந்த வாழ்வைக்கூட அர்ப்பணிப்போராக ஆக்கிய பெருமை அண்ணாவுக்கு உண்டு.

காலம் தன் கடமையைத் தவறாமல் செய்வதில் முனைந்திருந்தது. அண்ணாவுக்கும் பெரியாருக்கும் இருந்தஇணைப்பை அவ்வப்போது உருவான சில பல சூழ்நிலைகள் துண்டிக்கத் தொடங்கின. இடைவெளி வளர்ந்தது. இணைப்புத் தளர்ந்தது. பெரியார் மணமகன் ஆனார்; அண்ணா விடுதலை பெற்றார்; திராவிட முன்னேற்றக்கழகம் தன் திருமுகம் காட்டிற்று!

முப்பதுக்கும் மேற்பட்ட ஆண்டுகள்...! முனைந்து நின்றதற்கும் முடிவுகாணத் தொடர்ந்து நடப்பதற்கும் அண்ணா மேற்கொண்ட பயணத்தின் இடையே இருக்கும் எல்லைக் கற்கள். மறைந்தவையும் மலர்ந்தவையுமான சில பல நிகழ்ச்சிகள் நம் மன அரங்கில் நடமாடுகின்றன.

எந்தக் கருத்துக்களை வெட்டி வீழ்த்திவிட்டோம் என்று ஒரு சிலர் வீராப்புப் பேசினார்களோ அவை கிளைத்துத் தழைத் திருப்பதை அவர்களே கண்டார்கள். 'ஆழக் குழியில் புதைத்து விட்டோம்,' என்று ஆணவம் பேசிய அன்பர்கள் அது வளர்ந்து உயர்ந்து வானத்தையே எட்டி, அங்கே அந் தரத்தில் சுற்றிச் சுழலும் கோளங்களில் குடியேறிவிடுமோ என்று அச்சப்படும் அளவுக்கு அதற்குச் செல்வாக்கு ஏற்பட்டது.

'அகில இந்திய அரசியல்வாதிகள்' என்று சொல்லிக் கொள்ளுவதாலேயே தங்களைப் பெரியவர்கள் என்று நினைத் துக் கொண்டிருப்பவர்களால் சாதிக்க முடியாமற்போனதைச் செய்து முடித்துக் காட்டியவர் அறிஞர் அண்ணா. அரசியல் சட்டம் இயற்றப்பட்டு இருபது ஆண்டுகள் கழிந்தபிறகும் அது மக்களுக்கு அளித்த அடிப்படை உரிமைகள் கதியற்றுக் கிடந்தன. 'ஒரே கட்சியைச் சார்ந்தவர்களுக்குத்தான் ஆளு கிற வாய்ப்பு உண்டு'. என்று ஒலிபரப்பிக் கொண்டிருந்தவர் களை உருட்டித் தள்ளியவர் அறிஞர் அண்ணா ஒருவர்தான்—தென்திசையிலிருந்து உருவான, வலிவுள்ள ஒரு அரசாக அகில இந்தியாவையும் பார்த்துப் புன்னகை புரிகிறது அறி ஞர் அண்ணாவால் அமைக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக அரசு. எதிர்க்கட்சி அரசுகளை உடைத்தெறிவது ஒன் றையே தம் தொழிலாகக் கொண்டிருக்கும் தேசியத் திருவா ளர்கள் அண்ணாவின் அணியை முறைத்துப் பார்க்கக்கூட வலி வற்றவர்களாக இருந்து வருகிறார்கள்.

அண்ணாவின் அரசியல்......! கண்ணோட்டங்களுக்கு மட்டும் இடங்கொடுத்து கருத்தோட்டங்களுக்கு வழியற்று வாழ் வோர் அதை எடை போடும் போது அவர்களுக்கு எதுவும் புரி வதில்லை.

அறிவை அழைத்துச் செல்லுவது மிகவும் எளிது; உள்ளத்தை நடத்திச் செல்லுவதுதான் கடினம். வளர்ந்து வரும் அரசியலைப் புரிந்து கொள்ளும் நிலையற்ற சமுதாயத்தை வயப்படுத்தி வழி நடத்திச் செல்லுவது என்பது......?

அண்ணு ஒரு தலைவர் என்று எழுதிவிட்டுப் பேனுவை மூடி வைப்பது அரிசி சோருனது என்று சொல்லிவிட்டுச் சாப்பிடத் தொடங்குவது போலத்தான் ஆகும். பரிமாறப்பட்ட சோருக அந்த அரிசி ஆவதற்குமுன் எப்படி எப்படியெல்லாம் பரிண மித்தது என்ற விவரங்கள் விளக்கங்களாக அமையவேண்டும்.

அண்ணுவை நான் முதன்முதலில் சந்தித்த நிகழ்ச்சி என் சிந்தையில் சிலையாகப் பதிந்திருக்கிறது. அவர் யார் - எப்படிப் பட்டவர் - எந்தப் பின்னணியில் உருவாகி வளர்ந்தவர் - என்ற விவரங்கள் எல்லாம் எனக்குத் தெரிவதற்கு முன்னுலே யே அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது.

நான் கட்சியில் ஒரு பார்வையாளனுக இருந்து பணி செய் பவனுகப் பரிணமித்துக் கொண்டிருந்த நேரம் அது. பெரியா ரை விட்டால் இந்த நாட்டுக்கு வேறு வழியில்லை என்ற எண்ணம் என் இதயத்தில் எதேச்சாதிகாரம் நடத்திக்கொண் டிருந்தது. நான் மட்டுமல்ல நாடே அந்த நிலையை நாடி ஓடிக் கொண்டிருந்தது. ஏற்படுகிற எழுச்சிகளுக்கு வளர்ச்சி உண் டானுல் அதன் தொடர்ச்சி எதை நோக்கிப் பாயும் என்பதை உணர்த்துகிற நிகழ்ச்சிகள் நிகழத் தொடங்கின. அறிவே ஒரு உணர்ச்சியாகிச் சூழ்நிலைக்குச் சூடேற்றிக் கொண்டிருந்தது. பகுத்தறிவு இயக்கத்தின் கருத்துக்கள் படையணிகளாக முரசு கொட்டத்தொடங்கின. பெரியார் என்ருல் அவரை அறியா தார் எவராவது இருக்கமுடியுமா என்று ஒருவரை ஒருவர் பார்த்து எல்லோருமே கேட்டுக்கொண்டிருந்தனர்.

அந்தச் சூழ்நிலையில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்ருல்தான் அண்ணு என் நெஞ்சை வென்ருர் - நினைவுகளில் தங்கி நிலைத் திருக்கும் நிலையையும் பெற்ருர்.

வடக்கே அப்போது வளர்ச்சி பெற்றிருந்த இந்து மகாசபை யின் தலைவர் திரு. சியாம்பிரசாத் முகர்ஜி பெரியாரைச் சந்திக்க தமிழ்நாட்டுக்கு வந்திருந்தார். அத்தச் சந்திப்பு திருச்சி வழக் கறிஞர் திரு. தி. பொ. வேதாசலம் அவர்கள் வீட்டில் நடந்தது.

அப்போது இந்து மகா சபைக்குத் தமிழ்நாட்டுத் தலைவராக இருந்தவர் டாக்டர். திரு. வரதராஜுலு நாயுடு. பெரியாரும் நாயுடுவும் தனி வாழ்விலும் பொது வாழ்விலும் இணைந்து பழகியவர்கள்.

குறிப்பிடத் தக்க சிலர்தான் அப்போது அங்கே இருக்க அனுமதிக்கப்பட்டனர். அந்த ஒரு சிலரில் நானும் ஒருவன் என்ற பெருமையும் எனக்குண்டு.

பெரியார், அண்ணன் பட்டுக்கோட்டை அழகிரிசாமி, வழக்கறிஞர் திரு. தி. பொ. வேதாசலம் ஆகியோர் திரு. முகர்ஜியையும், டாக்டர் வரதராஜுலு நாயுடுவையும் வரவேற்று உரையாடிக் கொண்டிருந்தனர்.

அப்போது குள்ளமான ஒரு உருவம் வந்ததும் தெரியாமல் உட்கார்ந்ததும் தெரியாமல் வேகம் வேகமாக நடந்து வந்து அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தது. உடனே டாக்டர் வரதராஜுலுநாயுடு வந்த உருவத்தை திரு. முகர்ஜிக்கு சுட்டிக் காட்டி :-

''He is Mr Annadurai, the brain of the party,'' (இவர் திரு. அண்ணாதுரை, இந்தக் கட்சியின் மூளை) என்றார்.

அந்தச் சொற்கள் என் உள்ளத்தில் புகுந்து உள்ளே செருகிக் கொண்டன. அதற்குப்பிறகு நடந்த நிகழ்ச்சிகளில் என் கவனம் செல்லவே இல்லை. அந்தச் சொற்களையே சுற்றிச், சுற்றி வந்து கொண்டிருந்தேன்.

ஒரு கட்சித் தலைவரை அருகிலேயே உட்கார வைத்துக் கொண்டு அவரைச் சந்திக்க வந்த அடுத்த கட்சி தலைவரிடம், அந்தத் தலைவரோடு நெருங்கிப் பழகிய ஒருவர் அந்தத் தலைவருக்குத் தளபதியாக இருப்பவரைச் சுட்டிக் காட்டி, இவர்தான் இந்த கட்சிக்கு மூளை, என்று குறிப்பிடுகிறார் என்றால்......

அது மட்டுமல்ல. தலைமைப் பதவியில் உருவான தகராறு கூட பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறியதற்கான காரணங்

களில் ஒன்ருகும். அவருக்கு அங்கே அந்த நாற்காலிதான் கிடைத்ததே தவிர அதற்குள்ள மதிப்புத் தரப்படவில்லே. ஆகையால்தான் கட்சியில் தன்னளவுக்கு யாராவது வளர்ந்து விடுவார்கள் போலத் தெரிந்தால் உடனே எதையாவது கூறி அவர்களே வெளியே விரட்டி விடுவார். அப்படிப்பட்ட மனநிலே பெற்றவரை அருகில் வைத்துக் கொண்டு, 'மூளே இந்த உருவில் இல்லே: அதற்கருகில் இருக்கிறது என்று சுட்டிக் காட்டினுல்.........

அன்றிலிருந்து என் சிந்தனேயில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. அண்ணு எங்கே இருந்தாலும் என்ன செய்து கொண்டிருந் தாலும் அதைக் கவனிப்பதை என் கடமைகளில் ஒன்ருக ஆக்கிக் கொண்டேன். அவர் எனக்குத் தலேவராக மட்டுமில்லே ... பரிசோதிக்கும் பொருளாகவும் பரிசீலிக்கும் பிரச்னேயாகவும் இருந்து வந்நார்.

சென்னே அண்ணு சாலேயில் அண்ணுவின் சிலேயொன்று மண்ணில் நின்று கொண்டு ஒரு கையை விண்ணே நோக்கிக் காட்டிக் கொண்டிருப்பதை எல்லோரும் பார்த்திருப்பார்கள்.

அந்தச் சிலேயைத் திறந்து வைத்தவர் சர். ஏ. இராமசாமி முதலியார். அப்படிப்பட்டதொரு பெயர்ச்சொல் இருப்பது இப்போது அரசியலில் இருப்பவர்களில் பெரும்பாலோருக்குத் தெரியாது. நீதிக் கட்சியின் தூண்களில் ஒருவராக இருந்து பிறகு அதையே ஏணியாக்கிக் கொண்டு ஏறி நிம்மதியாக ஒரு ஏற்றத்தில் வாழ்ந்து வந்தவர். சென்னேப் பல்கலேக் கழக துணேவேந்தராக நீண்டகாலம் தொடர்ந்திருந்து விலகியவரும் அனேத்துலக மருத்துவத் துறையினர் அனேவராலும் மதிப் போடு பின்பற்றபபட்டவரும் ஆன டாக்டர் ஏ. இலட்சுமண சாமி முதலியாரின் உடன்பிறப்புதான் இந்த இராமசாமி முதலியார். இருவரும் இரட்டையர்களாகப் பிறந்தவர்கள்.

பொது வாழ்வின் நுழைவாயிலே மட்டும் கடந்து அண்ணு முன் தாழ்வாரத்தை நோக்கி நடந்து கொண்டிருந்த நேரம். ஒருமுறை திரு. இராமசாமி முதலியாரை அண்ணு சந்திக்க

நேர்ந்தது. அவர் இவரிடம், ''பொதுசேவை, பொதுசேவை என்று புலம்பி உன்னைக் கெடுத்துக் கொள்ளாதே. அடுத்தவர்களுக்காக உழைப்பது எப்போதும் ஆதாயம் தராத விவகாரம். அரசாங்கத்தில் உனக்கு ஒரு உயர்ந்த பதவி கிடைக்கும்படிச் செய்கிறேன். நீ உன்னுடைய நிலையை உயர்த்திக் கொள்ளலாம், '' என்று உபதேசம் செய்தார்.

அந்த நேரத்தில் அரசியலை அனுபவித்துக் கொண்டிருந்தவர் இந்த இராமசாமி முதலியார். அழகான ஆங்கிலப் பேச்சு இவருடைய முதலாக இருந்து அரசியல் ஆதாயத்துக்கு வழிகோலியது. பொதுக்கூட்டங்களில் பேசி உள்ளத்தைக் கொள்ளைக் கொள்ளுபவர்களைப் பொதுத் தொண்டில் புதிதாக ஈடுபடுபவர்கள், புனிதமான மனிதர்களாக நினைத்து மதிப்பிடுவது எங்கேயும் எப்போதும் நடப்பதுதான். உதடுகளில் உள்ளம் இருப்பதாக நினைப்பவர்கள் ஒருவித மயக்கத்துக்கு ஆளாகிறார்கள். பொதுவாழ்வில் மட்டுமல்ல தனிவாழ்விலும் கூட. இந்த நிலைதான் அண்ணாவை இராமசாமி முதலியாரிடம் ஈடுபாடு கொள்ளச் செய்தது.

அவருடைய அன்றைய அறிவுரை அண்ணாவை இன்னொரு நிகழ்ச்சிக்கு இழுத்துச் சென்றது. ஊருக்குழைத்த உத்தமர்கள் பலர் அவருடைய வாழ்வில் குறுக்கிட்டிருந்தனர். அவர்களில் ஒருவர் டாக்டர் நடேச முதலியார். கட்சிக்காகவும் கொள்கைக்காகவும் தன்னுடைய உடைமைகள் அனைத்தையும் தாரைவார்த்துக் கொடுத்தவர் அவர். திருவல்லிக்கேணி நெடுஞ்சாலைக்குத் தொடர்ச்சியாக உள்ள சாலைக்கு அவருடைய பெயரைச் சூட்டி டாக்டர் நடேசன் சாலை என்று அழைக்கிறார்கள்.

அண்ணா ஒருமுறை அவரைச் சந்தித்தபோது அவர் அண்ணாவிடம் கூறினார்: ''வீழ்ந்துபோன ஒரு சமுதாயத்தின் விழிப்புக்கும் வாழ்வுக்கும் உழைத்தே எல்லாவற்றையும் இழந்து ஏழையானவன் நான்: இருந்தும் என் தொண்டைத் துண்டித்துக் கொள்ளவில்லை. எத்தனை இன்னல்களும் இக்

கட்டுகளும் உன்னைச் சூழ்ந்தாலும் உன் பொதுப்பணியைத் தொடர்ந்து நடத்த வேண்டும்."

எல்லாவற்றையும் இழந்த நடேச முதலியார் பணியை இடையில் விட்டுவிடாதிருக்கக் கேட்டுக் கொண்டார். எதை எதையோ பெற்றிருந்த இராமசாமி முதலியார் பணி புரிவதை முடித்துக் கொண்டு பதவிக்குப் போக வழி காட்டினர்

எந்த இராமசாமி முதலியார் பொதுவாழ்வு அண்ணாவைக் கெடுத்துவிடும், வளர்த்து விடாது என்று உபதேசம் செய் தாரோ, அவரே அண்ணாவின் சிலையைத் திறந்துவைக்க அழைக்கப்பட்டு, தன்னுடைய புகழுரைகளால் பொது வாழ்வில் அண்ணாவுக்குக் கிடைத்த செல்வாக்கைப் போற்றி வர்ணித்தார்.

வாயிற்கதவுகளை அகலத் திறந்து வைத்துக் கொண்டு ஆயிரக்கணக்கிலே வருமானத்தைத் தரும் வாழ்வு அண்ணாவை வரவேற்றபோது கூட அதைத் துச்சமாக மதித்து, நூற்றுக்கும் குறைவான ஊதியத்தைப் பெற்றுப் பெரியாரோடு சுற்றிக் கொண்டிருந்தார் அவர்.

தடாகத்தைப் பற்றி நினைக்கும்போது ஒரு தாமரை இதழ் விரித்துத் தன்னைக் காட்டுகிறது-விண்ணைப்பற்றி எண்ணினால் நிலவின் குளிர்முகம் தெரிகிறது - பொதுவுடைமையைப் பற்றிய சிந்தனைகள் கார்ல் மார்க்ஸை நினைவுபடுத்துகின்றன - காந்தி யாரிடம் நம் கவனம் திரும்பும்போது அகிம்சையின் குரல் ஒலிக்கிறது - நேருவின் நினைவுகள் மலர்ந்ததொரு ரோஜாவை நம் மனதில் பதியவைக்கின்றன - அண்ணாவைப் பற்றி எண்ணும்போது ஒரு இதயம் தன்னுருவை நமக்குக் காட்டு கிறது.

அதிகாரத்தோடு வாழ்ந்தவர்கள் - ஆதிக்கம் புரிந்த வர்கள்—ஆட்டிப் படைக்கும் ஆற்றல் பெற்றவர்கள் ஆண்டவனை அடைய வழிகாட்டியவர்கள் - அறநெறிகளை வளர்த்தவர்கள் - அதிசயங்களைப் புரிந்தவர்கள் - ஆதாயங்

களைத் தேடித் திரிந்தவர்கள் - இப்படிப்பட்ட அடைமொழி களைப் பெற்றிருந்தவர்களை வரலாறு ஏராளமாகப் பெற்றிருக் கிறது.

இதயம் என்றதொரு பொருளைப் பெற்றிருந்தார் என்ப தைத் தனித்ததொரு சிறப்பாக்கி உலகம் இதுவரை எவருக்கும் வழங்கவில்லை - அண்ணாவைத் தவிர! அவர் பட்டம் பெற்றிருந் தார்; பதவிகளை நிர்வகித்தார்; உற்றதொரு கூட்டத்தை உரு வாக்கி உலகுக்கு அளித்தார். இவை எல்லாவற்றையும்விட அவர் பெற்றிருந்த இதயந்தான் பெருமைக்குரியதாகத் திகழ்கிறது.

இதயத்தின் ஆதிக்கம் அண்ணாவின் வாழ்வில் உச்சத்தில் இருந்ததால்தான் அவர் அனைவரையும் தன் தம்பிகளாக்கிக் கொண்டார். தன்னுடைய வலிவுள்ள மூளையை இதயத்தின் மென்மையான உணர்வுகளுக்குக் கட்டுப்படுத்தி வைத் திருந்தார் அவர். எத்தனையோ தடவைகளில் அண்ணாவின் இதயமே அவருடைய மூளையைத் தோற்கடித்திருக்கிறது. எதையும் தாங்கித் தீரவேண்டிய சூழ்நிலைகளுக்கு ஆளானது தான் அவர் இதயம்!

கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு! இவை மூன்றும் இதயத்துக்கே உரித்தான சொற்கள்!

சுற்றுப்பயணம் செய்ய அண்ணா தனக்கொரு வாகனத் தைப் பெற்றிராத காலம் அது. நான் அப்போதுதான் கட்சித் தொடர்புகளைப் பொருத்தவரை படிப்படியாக முன்னேறி வந் தேன். அண்ணா வந்துவிட்டால் அவரை விட்டு அசையவே மாட்டேன். கூட்டம் முடிந்ததும் இரவு புறப்படும் துரித வண்டி யில்தான் அவர் ஊர் திரும்பவேண்டும். வண்டி நின்றதும் எல்லோரும் முண்டியடித்துக்கொண்டு வண்டிக்குள் நுழையும் முயற்சியில் ஈடுபட்டிருப்பார்கள். இவரோ......? எல்லோருக் கும் கடைசியில் நின்றுகொண்டு அவர்கள் வண்டிக்குள் நுழை வதைப் பார்த்துக்கொண்டு நிற்பார். நான்தான் வண்டி வந்து நின்றதும் ஜன்னல் வழியாக உள்ளே குதித்து அதன் அருகிலே

யே உட்கார்ந்து கொள்ளுவேன். இவர் வந்ததும் எழுந்து அந்த இடத்தில் அவரை உட்காரச் செய்துவிட்டு வந்த வழியாகவே வெளியே குதிப்பேன்.

"இப்படியே இருந்தால் எங்கேயும் இடம் கிடைக்காது; நின்றுகொண்டே போகவேண்டியதுதான்!'' என்று ஒருநாள் வேடிக்கையாகக் கூறினேன்.

"In politics you must learn to wait until your turn comes'' (அரசியலில் உன்னுடைய முறை வரும்வரைக் காத்திருக்க நீ கற்றுக்கொள்ள வேண்டும்) - இது தான் எனக்கு அவரளித்த பதில்.

அவர் காத்திருந்தார்; கால்கடுக்கும் நிலைகள் ஏற்பட்ட போதெல்லாங்கூட அவர் காத்திருந்தார்; முண்டியடித்துக் கொண்டு இடங்களைக் கைப்பற்ற அவர் முயற்சிக்கவே இல்லை. சூழ்நிலைகள் தாம் கட்டாயப்படுத்தி எல்லாவற்றையும் அவர் மேல் சுமத்தின. நிர்வாகம் அவரை நெருங்கியபோது ......? இருந்து நீடிக்காமல் மறைந்து மண்ணுக்குள் புதைந்து விட்டார்.

நான், சட்டமன்ற உறுப்பினராக இருந்த நண்பர் நாக சுந்தரம், முத்துக்குமரன், ஜம்பு ஆகியோர் திருச்சி மலைக் கோட்டையில் திராவிட வாலிபர் கழகம் என்ற அமைப்பை - கட்சியின் பெயரை அப்படி மாற்றுவதற்கு முன்பே - நீதிக் கட்சியின் கிளையாக ஏற்படுத்திப் பணியாற்றிக் கொண்டிருந்தோம். நான்தான் அதன் செயலாளர்.

இரண்டு கூட்டங்கள் அவரைக்கொண்டு திருச்சி டவுன் ஹாலில் நடத்த அண்ணாவிடம் அனுமதி பெற்றேன். முதல் நாள் கூட்டம் தமிழில்; இரண்டாம் நாள் கூட்டம் ஆங்கிலத்தில். இரண்டு கூட்டங்களும் நல்ல முறையில் விளம்பரப் படுத்தப்பட்டன. முதன் முதலாக அப்போதுதான் ஆங்கிலத்தில் அண்ணா திருச்சியில் பேச இருந்ததால் ஆங்கிலம் அறியாதவர்கள்கூட அது எப்படி இருக்கும் என்பதைக்

கேட்கும் ஆர்வத்தோடு இருந்தனர். அந்த வாய்ப்புக்காக எங்களுக்கு வாழ்த்துக்கள் கூடக் கிடைத்தன.

நாங்கள் எங்கள் கூட்டங்களை விளம்பரப்படுத்திய பிறகு, கட்சிக்கு எதிர்ப்பாக இருந்த சிலர் அண்ணா ஆங்கிலத்தில் பேச இருந்த அன்று திருச்சி முனிசிபல் பப்ளிக் ஹாலில் (இப்போது தேவர் ஹால்) நாவலர் சோமசுந்தர பாரதியார் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்து விளம்பரப்படுத்தினர்.

முதல் நாள் கூட்டத்துக்கு வரும்போதே மறுநாள் நடக்க இருக்கும் இரண்டு கூட்டங்களுக்கான சுவரொட்டிகளைப் பார்த்துவிட்டு வந்திருந்தார் அண்ணா. வந்ததும் என்னைக் கூப்பிட்டு, " நாளைய கூட்டம் இல்லை என்று அறிவித்துவிடு," என்றார்.

அது ஒரு தாக்குதலைப் போலத்தான் எனக்குத் தோன்றியது.

" விளம்பரம் செய்தாகிவிட்டது. எல்லோரும் உங்களுடைய தமிழ்ப் பேச்சைவிட ஆங்கிலப் பேச்சைத்தான் எதிர் பார்க்கிறார்கள். அதை எப்படி நிறுத்தமுடியும்?" என்று என்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்தேன் நான்

" பாரதியார் கூட்டம் நடக்கும்போது நாம் கூட்டம் போடுவது முறையல்ல, நிறுத்திவிடு," என்றார்

நான் என்னையே மறந்து விட்டேன். அந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் கேட்க மக்களே இல்லாமல் தவிக்க வேண்டும் என்ற என் விருப்பம் தகர்க்கப்பட்டால்......

" நாங்கள் விளம்பரம் செய்த பிறகுதான் அவர்கள் அந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தார்கள். அந்தக் கூட்டத்துக்கு யாருமே போகமாட்டார்கள். நமக்குத்தான் கூட்டம் வரும். நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்?" என்று உணர்ச்சி வயப்பட்ட நிலையில் உரத்துக் கூவினேன் நான்.

"நானும் அதனால்தான் இந்தக் கூட்டத்தை நிறுத்தச் சொல்லுகிறேன். பாரதியார் கூட்டத்துக்கு யாரும் போகாமலிருப்பது அவருக்கு ஏற்படுத்தும் அவமானமல்லவா? கட்சியைப் பரப்புவதைவிடப் பெரியவர்களை மதிப்பதுதான் முக்கியம். நீ சொல்லாவிட்டால் நானே நாளைக்குக் கூட்டம் இல்லை என்று பேசும்போது தெரிவித்து விடுவேன்'' என்று கண்டிப்பாகச் சொன்னார் அவர்.

வேறு வழியே இல்லாமல் போனதால் அடுத்தநாள் கூட்டம் நடக்காது என்று நானே எதிரிருந்த மக்களிடம் அறிவித்தேன்.

இன்னொரு நிகழ்ச்சி என் கவனத்துக்கு வருகிறது.

தஞ்சை மாவட்டத்தில் கட்சியை வளர்த்த பலரில் திரு. கே. கே. நீலமேகமும் ஒருவர். அவருக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வேறுபாடு, அவரால் கட்சிப் பணிகள் மட்டும் நடக்கவில்லை - கட்சிக்கு ஒரு மரியாதையும் ஏற்பட்டது. வணிகர் - வெகுளி - எதையும் இதய பூர்வமாகச் செய்பவர் - அவருக்கிருந்த மரியாதையையும் செல்வாக்கையும் கட்சிக்கும் ஏற்படுத்தவேண்டும் என்ற அடிப்படையில் பணியாற்றியவர். அவரால் கட்சிக்கு ஏற்பட்ட வளர்ச்சி கட்சியால் அவருக்கு ஏற்படவில்லை. எல்லோரும் அவரை முழுப்பெயர் சொல்லி அழைக்கமாட்டார்கள் - கே. கே. என். என்றுதான் குறிப்பிடுவார்கள்.

அவருக்கு அண்ணாவிடம் நல்ல ஈடுபாடு.

அவருக்கு ஆங்கிலம் அவ்வளவாகத் தெரியாது. ஆனால் ஆங்கிலம் படித்தவர்களோடு பேசும்போது அவரையும்அறியாமலே அந்த மொழிச் சொற்கள் கலந்துவரும்.

அண்ணா ஒருமுறை குடந்தைக்கு வந்திருந்தபோது ஒரு கூட்டமாக உட்கார்ந்து திரு. கே. கே. நீலமேகம் வீட்டில் உரையாடிக் கொண்டிருந்தோம். உள்ளே இருந்து எதையோ அண்ணாவிடம் கேட்கவந்த கே.கே.என். "அண்ணா! 28ந் தேதி

என்ன டேட் (date)'' என்று கேட்டார். எல்லோரும் சிரித்துவிட்டார்கள்.

date (டேட்) என்ருல் ஆங்கிலத்தில் தேதி என்பதுதான் பொருள். என்ன கிழமை என்று கேட்பதற்கு வந்தவர் தனக்குத் தெரிந்த ஆங்கிலச் சொல்லைப் பயன்படுத்தி விட்டார்! அதனுல்தான் அந்தச் சிரிப்பு!

அண்ணு மட்டும் சிரிக்கவில்லை - தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டார். காதில் விழாததைப் போல, ''என்ன சொன்னீர் கள்?'' என்று அவரைப் பார்த்துக் கேட்டார். பிறகு அவராகவே புரிந்துகொண்டு, ''செவ்வாய்க்கிழமை'' என்று பதிலளித்தார்!

அவரைவிட வயதில் மூத்தவர்கள்கூட அவரை 'அண்ணு' என்றழைத்ததற்குக் காரணமே அவருடைய இந்தப் பண்பாடு தான்!

'விடுதலை' இதழிலே அண்ணு பணியாற்றிக்கொண்டிருந்த போது நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி இன்னும் என் நெஞ்சில் நிலைத் திருக்கிறது.

ராஜா. சர். அண்ணுமலைக் செட்டியார். இப்போது இருக் கும் ராஜா. சர். முத்தையாச் செட்டியாருடைய தந்தையார்— கோடீசுவரர்—அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தையும் அதே சிதம்பரத்தில் இருக்கும் உயர்நிலைப் பள்ளியையும் நிறுவியவர். தமிழகத்தில் அவர் காலத்தில் நடந்த அத்தனை மாத-வார- நாள் ஏடுகள் அனைத்தும் அவரால் இயக்கப்பட்டன. அரசி யல் தலைவர்கள் அனைவரும் அவரிடம் தொடர்பு வைத்திருந் தார்கள்.

அவருக்கு அறுபதுக்கு அறுபது திருமணம் நடக்க இருந் தது. ஆர்ப்பாட்டமான ஏற்பாடு. அத்துணைப் பத்திரிக்கை களிலும் அதை விளம்பரப்படுத்தி செய்திகள் உருவிலேயே வெளியிட்டிருந்தார்கள். அவரும் பத்திரிகைகள் அனைத் துக்கும் இயன்ற அளவுக்குப் பணம் அனுப்பி வைத்தார்.

ஆனல்...? 'விடுதலை' இதழுக்கு பணம் அனுப்பப்படவில்லை. பெரியாருக்கு ஆத்திரம் தாங்கமுடியவில்லை. பணம் மட்டும் அதற்குக் காரணமல்ல, 'வஞ்சத்தை நெஞ்சில் வைத்துக்கொண்டு வாங்குகிற காசுக்காக வாழ்த்துகிற கூட்டம் அவர் நினைவில் இருக்கிறது; நம்மவர் என்பதால் அவர் உயர் நிலையில் இருக்கவேண்டும் என்று நெஞ்சாற நினைப்பவர்களை மறக்கமுடிகிறது' - இதுதான் காரணம்.

அண்ணவைக் கூப்பிட்டனுப்பினர். நிகழ்ச்சியையும் நிகழ்ச்சிக்குரியவரையும் தாக்கி எழுதும்படி கூறினர்.

அண்ணவுக்கு ஒரே ஆனந்தம். அவர் நீதிக் கட்சியிலே இருந்தபோது இப்படிப்பட்ட சீமான்களை ஏராளமாகச் சந்தித்தவர்—அவர்கள் மனப்போக்கு அவருக்கு மனப்பாடம்—எதிர்க்க இயலாமல் போனதால் அவர்களுடைய அலட்சியங்கள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டவர். குறிக்கோளை முன்னிறுத்துபவர்கள் குளிர்ச்சிதான் வேண்டும் என்று குரலெழுப்ப மாட்டார்கள்—கொதிப்பையும் ஏற்றுக்கொள்ளுவார்கள் அந்த நிலைக்குப் பக்குவப் பட்டவர் என்பதால் எந்த இன்னலுக்கும் ஈடு கொடுக்கும் வலிவு பெற்றிருந்தது அண்ணவின் உள்ளம்.

இப்போது ஒரு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது அவருக்கு. எடுத்தார் பேனவை—எழுதினர்—ஏடுகள் எண்ணங்களால் நிரப்பப்பட்டன—ஈரமற்ற நெஞ்சங்கள் சமுதாயத்தின் சத்துக்களையும் சக்திகளையும் உறிஞ்சிக் கொண்டு அதை எப்படிச் சாரமற்றுப் போகச் செய்கின்றன என்பதற்கான விளக்கங்களைப் பல பக்கங்களில் நிரப்பினர்.

அந்தக் கட்டுரை அச்சாகிக் கொண்டிருக்கும்போதே செய்தி ராஜா சர். அண்ணமலைச் செட்டியாருக்கு எப்படியோ எட்டிவிட்டது. உடனே தந்தியும் அதைத் தொடர்ந்து பணமும் 'விடுதலை' இதழுக்கு நன்கொடையாக அனுப்பினர் அவர்.

பெரியார் என்ன நினைத்தாரோ தெரியவில்லை; அண்ணாவைக் கூப்பிட்டனுப்பினார். அச்சான இதழ்களை நிறுத்தி விட்டு செட்டியாரைப் பாராட்டி ஒரு கட்டுரை எழுதச் சொன்னார்.

“என்னுடைய இந்தப் பேனா அந்தக் காரியத்தைச் செய்யாது,” என்று சொல்லிப் பேனாவைப் பையில் போட்டுக் கொண்டு காஞ்சிபுரத்துக்குப் போய்விட்டார் அண்ணா. அந்தக் காலத்தில் இப்படிப்பட்ட ஊடல்களும் கூடல்களும் அவர்கள் இருவருக்கும் இடையே சாதாரணமானவை.

ஆனால்...! பர்மாவில் குடியேறி அங்கே பணம் சம்பாதித்தவர்கள் சொத்துக்களைப் பறிமுதல் செய்தது பர்மீய சர்க்கார். அதிலே பெரும்பங்கு இழப்பு ராஜா சர். அண்ணாமலைச் செட்டியாருக்குத்தான். அதைக் கண்டித்து ஒரு அனைத்துக் கட்சிக் கூட்டம் சென்னையில் நடந்தது. இவர் மட்டுமல்ல உழைத்துப் பிழைத்தவர்கள் பலருடைய உடைமைகளும் பறிபோனதால் அண்ணா அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்—எவ்வளவு தீவிரமாகக் கண்டிக்க முடியுமோ அவ்வளவு தீவிரமாகக் கண்டித்தார்.

பட்டுக்கோட்டை அஞ்சாநெஞ்சன் கே. வி. அழகிரிசாமி! அந்தக் காலத்தில் இவரை அறியாதவர்கள் தமிழ்நாட்டு அரசியலில் எவரும் இருந்திருக்க மாட்டார்கள். அடித்துப் பேசுவார்—எவராலும் எதிர்த்துப் பேச முடியாது. அவர் சிரித்தால்கூட அது ஒரு சிங்கத்தின் கர்ஜனையாகத் தோன்றும். நாட்டையே தன் வீடாக எண்ணி இயங்கியதால் அவருடைய வீடு காடாகிப் போனது. தன்னையே ஒரு பிரசார இயந்திரமாக ஆக்கிக் கொண்டு பட்டி தொட்டிகள் எல்லாம் பகுத்தறிவுப் பகலவனாக ஒளி வீசியவர்.

அவருக்கென்று ஒரு தனித்த பெருமை உண்டு. பெரியாருடைய அணியில் எப்போதெப்போதோ எப்படி எப்படியோ

இருந்தவர்கள் அனைவரும் நினைக்கக்கூடத் துணியாத ஒன்றை அவர் மிக மிகச் சாதாரணமாகச் செய்வார். அவரை 'தோழர் இராமசாமி' என்றும் 'தோழர் பெரியார்' என்றும் அழகிரி ஒருவர்தான் பொது மேடைகளிலும் மாநாடுகளிலும் அழைப்பார். வேளைக்குச் சாப்பிடாமல், நேரத்துக்குத் தூங்காமல், தேவைக்குத் தேடிக்கொள்ளாமல் உடல் களைக்க, தொண்டை காய, நா உலற நாள்தோறும் மக்களைச் சந்தித்தவர். எலும்புருக்கி நோய் அவர் உயிருக்கு எதிரியாக அவருடைய உடலில் புகுந்தது—பலியானர்—படுத்த படுக்கையானர்—அவர் வளர்த்த கட்சி மட்டும் அவரைப் பற்றித் துளிக்கூட கவலைப்படாமல் தன் வாழ்வை வளமாக நடத்திக் கொண்டிருந்தது—காரணம் அவர் அப்போது பெரியாருக்குக் கசந்துபோனதுதான்!

எதிர்க்கவும் முடியவில்லை—மனத்தவிப்பை அடக்கவும் முடியவில்லை அண்ணுவுக்கு.

அண்ணுவின் வாழ்வுக்கான வருமானத்தை எப்போதும் அவருடைய எழுத்தும் பேச்சுந்தான் தந்துகொண்டிருந்தன. அவை இரண்டையும் எதிர்பார்ப்போரும் ஏராளமாக இருந்தனர். அவர் பேசுவதாக இருந்தால் நன்கொடை தருவதாக உறுதியளிக்கும் மாற்றுக் கட்சிக்காரர்களே எல்லா ஊர்களில் இருந்தனர். கொடுக்கத் தேதி இல்லாததால் பல கூட்டங்கள் காத்திருந்தன.

"எவராக இருந்தாலும் சரி, யார் நோய்வாய்ப் பட்டுள்ள அழகிரியின் முகவரிக்கு நூறு ரூபாய்களை அனுப்பிவிட்டு எனக்கு அந்த பண ஓலைச் சான்றை அனுப்பி வைக்கிருர்களோ அவர்களுடைய அழைப்பை மட்டுந்தான் ஏற்றுக் கொள்ளுவேன்'' என்று கட்சி தோழர்களுக்கு அறிவித்தார் அண்ணு.

நூறு நூறு ரூபாய்களாகப் பறந்தன மாவீரன் அழகிரியின் முகவரிக்கு. மற்றவர் என்று அதுவரை அண்ணுவை நினைத்திருந்த அழகிரிக்கு அவர் ஒருவர்தான் உற்றவர் என்று புரிந்தது. ஆனல்...இருந்து குணமாகி மனம் திறந்து பேசாமல் அந்த நோயாலேயே இறந்துபோனர்.

பெரியாரின் திருமண ஏற்பாடு திராவிடர் கழகத்திலிருந்து பெரும்பாலோரை விலகச் செய்துவிட்டது. கண்டனக் கணைகள் பயனற்றுப் போனதால் கண்ணீர்த் துளிகள் பெருகி வழிந்தன. அழுத கண்கள் தமக்கொரு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டன. திராவிட முன்னேற்றக் கழகம் உதயசூரியனாகத் தன் உருவத்தைக் காட்டி உயர்ந்தது. ஒன்றுபட்டிருக்க எதை எதை எப்படி எப்படிச் செய்ய வேண்டுமோ அனைத்தையும் செய்து பார்த்து, செய்தவைக்கான விவரங்களை அவ்வப்போது அடித்தளத்திலிருந்த தொண்டர்களில் இருந்து அனைவருக்கும் தெரிவித்து, எடுக்க வேண்டிய முடிவுக்கு எத்தனை பேர் ஒத்து வருவார்கள் என்ற கணக்கைப் பெற்று, இறுதியாகத் தனித்து வந்ததுதான் திராவிட முன்னேற்றக் கழகம்.

தலைவர் என்ற சொல்லை தன்னுடைய தனி உடைமையாக ஆக்கி வைத்திருந்த பெரியாருக்கு அப்படி அவரை அழைத்தவர்கள் பெருமளவு குறைந்து போனதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எரிச்சலால் தனக்குள்ள புகழையும் பெருமையையும் எரித்துக் கொள்ளுவதில் ஈடுபட்டார். கட்டுப்படுத்த முடியாத மன உணர்வுகளால் தூண்டப்பட்டுக் காதில் விழக்கூடாத சொற்களை எல்லாம் மேடைதோறும் வாரியிறைக்கத் தொடங்கினர். அவரிடம் கொண்ட ஈடுபாடு ஒன்றினாலேயே அவரிடம் ஒட்டிக்கொண்டிருந்தவர்கள், அவர் வாரியிறைத்த அனைத்தையும் திரட்டியெடுத்து மக்களுக்கு வழங்கத் தொடங்கினர்.

ஆபாசம் என்பது ஒன்றே அறிவு விளக்கப் பிரசாரமாக திராவிடர் கழக மேடைகளில் நிறைந்து வழிந்தது. அண்ணாவின் பிறப்பிலிருந்து அவருடைய பிழைப்பு வரைக் கீழ்த்தரமான முறையில் கேட்போர் மனம் புண்ணாகும்படி மேடைதோறும் விமர்சிக்கப்பட்டது. தமிழக அரசியலில் ஒரு தலைவர் அவருக்குத் தலைவராக இருந்தவராலேயே தரக் குறைவான பேச்சுக்களால் தாக்கப்பட்டார் என்றால் அது அண்ணா ஒருவருக்கே பொருந்தும். நடைபாதையிலிருந்து பொதுமேடை வரை நுகரச் சகிக்காத முடை நாற்றம் வீசிக்கொண்டிருந்தது.

அந்த நேரத்தில் சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் திரா விட முன்னேற்றக் கழகத்தின் முதலாவது பொது மாநாடு கூடியது. அண்ணுதான் மாநாட்டுத் தலைவர். தலைவரை முன் மொழிந்தும் வழி மொழிந்தும் மாவட்டச் செயலாளர்கள் அனை வரும் பேசி மாலைகளை அணிவித்து முடித்தனர். தலைவர் முன் னுரை தொடங்கியது. அண்ணுவின் அன்றைய பேச்சைக் கேட்க ஆவலோடு காத்திருந்த மக்கள் அதற்கேற்றவாறு அமைதி காத்தனர். மாநாட்டுக்கு வந்திருந்தோர் அனைவரை யும் ஒவ்வொரு பிரிவினராகக் குறிப்பிட்டு வரவேற்றுப் பேசிக் கொண்டே வந்தார் அண்ணு. அப்போது தவிர்க்க முடியாத நினைவொன்று அவரைத் தாக்கியது. “இந்த நேரத்தில் நம்மையெல்லாம் உருவாக்கி ஆளாக்கிய பெரியார்...'' பேச்சு அறுந்துவிட்டது—அதற்குமேல் நகர மறுத்து விட்டது.

ஒரே ஒரு நிமிடந்தான்......! அவரும் பெரியாரும் ஒன்ருன நேரத்திலிருந்து இப்போது இரண்டான காலம் வரை நிகழ்ந்த ஓராயிரம் நிகழ்ச்சிகள் உருவாகி அந்த இதயத்தை வதை புரியத் தொடங்கின. பேச்சின் தொடர்ச்சியை ஆவலோடு எதிர்பார்த்த கூட்டத்தினர் அந்த நெஞ்சுருக்கும் நிலையைத் தாங்க முடியாது தவித்தனர். அடுத்து வெளிவர வேண்டிய சொற்கள்...? உள்ளம் வேலை நிறுத்தம் செய்த பிறகு ஒலி பெருக்கியால் என்ன செய்துவிட முடியும்? கலங்கிய இரு விழிகளிலும் மல்கிய கண்ணீர்த் துளிகளை அவர் துடைத்துக் கொண்டபோது எதிரிருந்தோர் இதயங்கள் எல்லாம் இரத்தம் கசிந்தன.

“ஈனப் பிறவிகள்'' என்று ஏசிப் பேசிய ஒரு தலைவர், தான் ஒரு தானைத் தலைவர் ஆகும் நேரத்தில் அருகில் இல்லையே என்பதை எண்ணி அழுது எதிரிருந்தோர் இதயங் களை எல்லாம் கசக்கிப் பிழிந்த தலைவனை வரலாறு எப்போ தாவது சந்திக்குமா என்பது சந்தேகத்துக்குரியதுதான்.

“என் அரசியல் வாழ்வைத் தொடக்கிவைத்தவர் அண்ணு தான்,'' என்று இறுமாந்து பேசிவந்த நண்பர். சம்பத் இடர்

விளைவிக்கத் தொடங்கினர். தனக்கே கட்டுப்பட்டவராக அண்ணா இருக்க வேண்டும் என்ற ஆதிக்க உணர்வு அவர் எல்லோருக்கும் சொந்தமானபோது எரிச்சலாக உருமாறி எதிர்ப்பாக வடிவெடுத்தது. தொல்லைகளைத் தொடங்கினர் அவர். ஈரோட்டிலிருந்து அவருடைய எதிர்ப்பு அறிக்கைகள் வெளி வரும்; ஒவ்வொன்றிலும் குற்றச்சாட்டுகளைக் குவிப்பார். அவற்றைப் படித்த கட்சிக்காரர்களுக்கு அவர்மேல் ஏற்படும் ஆத்திரத்தைக் காஞ்சிபுரத்திலிருந்து அண்ணா கட்டுப் படுத்துவார்.

அறிக்கைகள் — விளக்கங்கள் — பொதுக்கூட்டங்கள் — இப்படி அணிஅணியாக அமைத்துக் காட்டினர் நண்பர் சம்பத். அண்ணாவோடு உறவாடிக் கொண்டிருந்தவர்களை ஒதுக்கித் தள்ளுவதையே தன் குறிக்கோளாகக் கொண்டு கணைகளை வீசினர். பொதுவாழ்வில் அவரோடு இணைந்திருந் தவர்களைப் புழுதிகளாக்கும்படி அண்ணாவைத் தூண்டினால்... எப்படிச் சமாளிப்பது என்பது புரியாமல் தவித்தார் அண்ணா.

எதுவும் பலிக்காது என்பதைத் தெரிந்துகொண்ட நண்பர் சம்பத் உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினர்.

வேதனை அண்ணாவின் இதயத்தை வெட்டி முறித்தது. வளரும்போதிருந்தே அண்ணாவின் வாழ்வில் படர்ந்திருந் தவர் நண்பர் சம்பத். அவர் பண்பட்டதும் பக்குவமடைந் ததும் அண்ணா கற்றுக் கொடுத்த பாடங்களால்தான். எடுத்து இடுப்பிலே வைத்து இதயத்தோடு இணைத்து வளர்க்கப்பட்ட குழந்தை எதையும் சாப்பிட மறுக்கிறது என்றால்... விளம்பரப் படுத்திக்கொண்டு சம்பத் உண்ணாவிரதம் இருந்தார்; வெளிக்குத் தெரியாமல் அண்ணா பட்டினி கிடந்தார்.

அரசியல் கண்ணோட்டங்களிலும் அடிப்படைக் கருத்துக் களிலும் எவ்வளவுதான் நான் நண்பர் சம்பத்தோடு முரண்பட் டாலும்அவருடைய கனிவான வரவேற்பையும் இனியபழக்கத் தையும் என்னால் ஒதுக்கமுடிந்ததே இல்லை. அந்த உண்ணாவிர தத்தையும் அதன் காரணங்களையும்என்னால் ஒத்துக்கொள்ள

முடியவில்லையே தவிர அவர் பட்டினி கிடப்பதை சகித்துக் கொள்ளமுடியவில்லை. அண்ணாவோடுதான் நான் இருந்தாலும் அன்றாடம் சம்பத்தைப் போய்ப் பார்க்கத் தவறவில்லை. பார்த்துவிட்டு அண்ணா அப்போது தங்கியிருந்த அவருடைய நண்பர் தேவராஜன் வீட்டுக்கு வருவேன். வந்தவுடன் அண்ணா என்னைப் பார்த்து, "சம்பத் எப்படி இருக்கிறான்?" என்று கவலையோடும் கண்ணீரோடும் கேட்பார்.

இறுதியில் ஒரு செய்தி வெளிவந்தது. இனி சம்பத் தன் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தால் அது அவருடைய உயிருக்கே ஆபத்தை உண்டாக்கிவிடும் என்பதுதான் அது. உண்ணாவிரதத்தை எவர் தொடங்கினாலும் குடலில் அதற்கு முன் எஞ்சியிருப்பது எதுவும் தங்கியிராமல் குடலைச் சுத்தப் படுத்திக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் எதுவும் அகப்படாததால் தன்னிடம் எஞ்சி இருப்பதையே குடல் ஜீரணிக்கத் தொடங்கிவிடும். விளைவு...? இரத்தத்தை விஷமாக்கி உயிரைக் குடித்துவிடும். குடலைச் சுத்தம் செய்து கொள்ளாமலே சம்பத் உண்ணாவிரதத்தைத் தொடங்கி விட்டார்.

இந்தச் செய்தி அண்ணாவை எட்டியது. அதற்கு மேல் அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. சம்பத் உண்ணா விரதம் இருந்த இடத்தை நோக்கிப் புறப்பட்டார். "நீ சொல்வதையெல்லாம் ஒத்துக்கொள்ளுகிறேன்; உண்ணாவிரதத்தை நிறுத்துவிடு," என்று காலில் விழாத குறையாக மன்றாடி அந்த உண்ணாவிரதத்தை நிறுத்தினார்.

"எல்லாவற்றையும் இழப்பதற்குக்கூட நான் தயார்; எப்படியாவது நீ உயிரோடிருந்தால் போதும்" என்று தன் தம்பியிடம் அண்ணன் மண்டியிட்டதை சில தனிப்பட்ட குடும்பங்களின் நிகழ்ச்சிகளில் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால்...அரசியல் வரலாறு அதை எப்போதாவது தன் அத்தியாயங்களில் ஒன்றாக ஆக்கியிருக்கிறதா என்பது புரியவில்லை.

இந்திதான் இந்தியாவின் நிர்வாக மொழி என்று அரசியல் சட்டத்திலே குறிப்பிட்டு, அதற்கான மாற்றத்துக்கு கால வரையறை நிர்ணயித்திருந்தார்கள் அரசியல் சட்டத்தை நிறைவேற்றியவர்கள். அந்த வரையறை முடிவடையும் நேரம். இறுதித் தீர்ப்புக்காக இந்தி பிரச்னையை பாராளு மன்றத்துக்கு முன் கொண்டுவர ஏற்பாடுகள் நடத்துகொண் டிருந்தன. தமிழக மக்களும் மாணவர்களும் இந்தி கூடாது என்ற எண்ணத்தையும் அதில் தங்களுக்குள்ள எதிர்ப்பையும் மத்திய சர்க்காருக்கு தெரிவிக்க நினைத்தனர். அப்போது தமிழக முதல்வராக இருந்தவர் திரு. பக்தவத்சலம். தமிழகத் தின் குரலை மக்களாட்சி முறைப்படி மத்திய சர்க்காருக்குத் தெரிவிக்க வேண்டிய இடத்தில் இருந்தவர்.

அவரைச் சந்தித்து தங்கள் எதிர்ப்பை மத்திய சர்க்காருக் குத் தெரிவிக்கும்படிக் கேட்டுக்கொள்ள ஒரு சந்திப்புக்கு அனுமதி கேட்டனர் மாணவர்கள். முகத்தில்கூட விழிக்க முடியாது என்று அனுமதி மறுத்து அவர்கள் மனதை முறித்து அனுப்பிவிட்டார் திரு. பக்தவத்சலம்.

அவர்கள் மாணவர்கள்—அதற்குமேல் பொறுக்க முடி யாதவர்கள். குரல் போகாவிட்டாலும் தங்கள் மனக்குமுற லாவது போகட்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டனர். உணர்ச்சி எழுச்சி ஆனது—எழுச்சி கிளர்ச்சி ஆனது—கிளர்ச்சி புரட்சி ஆனது. தமிழ்நாட்டுக் காவல் துறையினரால் நிலைமை யைச் சமாளிக்க முடியவில்லை; பக்தவத்சலத்துக்கு கட்டுப் படுத்தும் திறமை இல்லை; இராணுவத்தை அனுப்பும்படி டில்லிக்குச் சொல்லி அனுப்பினார். இராணுவம் வந்தது. வெடித்த துப்பாக்கிகள் யார்யாரோ பெற்ற செல்வங்களைப் பிணங்களாக்கியது. சுட்டுக்கொண்டே இருந்தார்கள்—செத்துக் கொண்டே இருந்தார்கள்.

அந்த நேரத்தில் யாரை என்ன செய்யலாம்? எவர்மேல் பழி போடலாம்? இப்படித்தான் சிந்தித்தார் திரு. பக்தவத் சலம். இன்றைய முதல்வர் டாக்டர்-கலைஞர் அவர் நினை

வுக்கு வந்தார். உடனே அவரைக் கைது செய்து பாளையங் கோட்டையில் கள்ளியும் முள்ளியும் கடும் விஷம் நிறைந்த ஜந்துக்களும் மண்டிக் கிடந்த சிறையில் தன்னந்தனியாகப் பூட்டி வைத்தார். பல மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். அண்ணுமலைப் பல்கலைக் கழக மாணவன் ராஜேந்திரன் கொல்லப்பட்டான். வெடித்த துப்பாக்கிகள் குடித்த உயிர் களின் கணக்கு இதற்குமேல் எத்தனை என்பது எவருக்கும் தெரியவில்லை.

''இதயத்தை இரும்பாக்கி வைத்திருந்தவர்,'' என்று டில்லி ஒரு பட்டம் கொடுத்தது திரு பக்தவச்சலத்துக்கு.

அன்ருட வாழ்வைத் தவிர வேறு எதுவும் அறியாத மனிதனிலிருந்து அரசியலை வளர்க்கும் தலைவர்கள் வரை அத்தனைபேரும் இந்த அக்கிரமத்தைக் கண்டித்தனர்.

அண்ணு..... அவருடைய கருத்து மட்டும் வெளியிடப் படவில்லை.

உடனே அவரைச் சந்தித்தேன். என் உள்ளத்தில் நிறைந்திருந்த உணர்ச்சிகளை எல்லாம் அப்படியே அவர்முன் கொட்டினேன்.

அவர் தந்த பதில்...

''இப்போது சுடுவது போலீசாரல்ல; இராணுவம். போலீசார் சுடுவதற்கும் இராணுவம் சுடுவதற்கும் வேறுபாடு உண்டு. போலீசார் சுடுவதற்கு முன் அனுமதி பெற வேண்டும்; சுட்டபின் காரணம் சொல்லவேண்டும்; அதற்குப் பிறகு நீதி விசாரணை கோரலாம்; ஆகையால் எச்சரிக்கை யோடு தங்களைக் கட்டுப்படுத்திக்கொண்டு துப்பாக்கிகளைக் கையாளுவார்கள். ஆனல்... இராணுவத்துக்கு இந்த நியதிகள் எல்லாம் கிடையாது. சுட்டுக்கொண்டே இருப்பார்கள்; மக்கள் செத்துக்கொண்டே இருப்பார்கள். எந்தவித விளக் கங்களுக்கும் விசாரணைகளுக்கும் இடமே கிடையாது. அவர்

களாக மனம் விரும்பி சுடுவதை நிறுத்தினால்தான் சாவது நிற்கும். இப்போது கண்டன அறிக்கைகளை வெளியிட்டுக் கட்சிக்கு ஆள் சேர்ப்பது முக்கியமல்ல. சுடுவதை எப்படி யாவது நிறுத்த வேண்டும்; சாவது தவிர்க்கப்பட வேண்டும்.''

மனித உருவங்களைப் பார்த்திருக்கிறேன்; அவர்களுடைய உளுத்துப்போன உள்ளங்களைச் சந்தித்திருக்கிறேன். இதோ ஒரு இதயம்... அரசியலில் ஏற்பட இருக்கும் ஆதாயங்களைக் கணக்குப் போட்டுக் காரியங்களைச் செய்துகொண்டிருக்கும் எல்லோரும் அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கும் போது பிணங்களாகும் மாணவர்களை நினைத்து அழுது புலம்பிக் கொண்டிருக்கிறது.

மரணத்தை மாலையாக்கி ஒவ்வொரு மாணவனுக்கும் அணி வித்த பக்தவச்சலத்துக்கும் அண்ணுவுக்கும் உள்ள வேறுபாடு ஒரு நிகழ்ச்சியால் அதை எடுத்துக்காட்ட நினைக்கிறேன். தன்னை மதிக்க மறுத்த மாணவர்களிடங்கூட அண்ணுவுக்கு ஒரு பிடிப்பு இருந்தது.

அண்ணு முதலமைச்சராக இருந்தபோது ஒரு முறை மாணவர்கள் போராட்டம் நடத்தினர். அந்தப் போராட்டத் துக்கு ஆதரவு காட்ட மருத்துவக்கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு மருத்துவ மனைகளில் பயிற்சி பெறும் மாணவர்களும் அவர்களோடு இணைந்தனர். வாழ்வுக்கும் சாவுக்கும் இடை யிலும், நலிவுக்கும் வலிவுக்கும் இடையிலும் அவர்களை நம்பிக் காத்திருக்கும் நோயாளிகளின் நிலை நிர்க்கதியானது. அவர் களுக்குக் கைகொடுக்கும் பொறுப்பை முதலமைச்சராக இருந்த அண்ணு உணர்ந்தார்.

ஆளை அனுப்பி அந்த மருத்துவர்களை அழைத்துவரச் சொல்லவில்லை அவர்; நேரடியாக அவர்கள் தங்கியிருந்த இடத்துக்குச் சென்றார். அவரை மதிக்காவிட்டாலும் அவர் ஏற்றிருந்த பொறுப்புக்கு மரியாதை தந்திருக்கலாம்; அதையும் செய்யவில்லை அவர்கள். வரவேற்கவில்லை என்பதுமட்டுமல்ல. தேடி வந்தவரை மனம் நொந்து போகும் அளவுக்கு நடத்தி

ஞர்கள். தாகத்துக்குக் குடிக்கத் தண்ணீர் கேட்டார் அண்ணு; அதையும் தர மறுத்து விட்டார்கள், பிணிபோக்கப் பணி யாற்ற வேண்டிய அவர்கள். அதையும் பொறுத்துக்கொண்டு அவர்களோடு உரையாடினுர். வீட்டுக்கு வந்த பிறகே தண்ணீர்க் குடித்துத் தன் தாகத்தைத் தணித்துக் கொண்டார். கனியாக வேண்டிய அந்த மொக்குகள் மலர மறுத்து விட்டனவே என்பதைத் தவிர வேறு எந்தவித மனவருத்தமும் ஏற்படவில்லை அண்ணுவுக்கு.

தஞ்சையில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் அண்ணுவோடு சேர்ந்துபேச நான் அழைக்கப்பட்டிருந்தேன். அப்போது சென்னையில்தான் இருந்தேன் நான். இடையில் ஒருநாள் அவரை நான் சந்தித்தபோது தன்னுடன் தஞ்சைக்குப் பயணம் செய்யும்படி கேட்டுக்கொண்டார் அவர். அவரோடு செல்லுகிற பெருமை மட்டும் எனக்குத் தோன்றவில்லை அப்போது; வழிச் செலவையும் மிச்சப்படுத்திவிட முடிகிறது என்ற மகிழ்ச்சியும் ஏற்பட்டது. அப்போது என் நிலை அப்படி.

இரவு வண்டிக்கு இரண்டு முதல் வகுப்பு டிக்கட்டுகளை வாங்கி வைத்திருந்தார் அவர். இருவரும் வண்டியில் ஏறிக் கொண்டோம். வண்டி புறப்பட்டதும் வழக்கம்போல அவர் ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினுர், எனக்குத் தூக்கம் வந்தது.

"உனக்குத் தூக்கம் வருகிறதா?" என்று படித்துக்கொண்டிருந்த அண்ணு என்னைப் பார்த்துக் கேட்டார்.

எப்போது இதை அவர் கேட்பார் என்று ஆவலோடு எதிர் பார்த்திருந்த நான், "ஆமாம்" என்று சொல்லித் தலையையும் ஆட்டினேன்.

"சரி, நீ மேல்தட்டில் ஏறித் தூங்கு" என்று சொல்லி விட்டுப் படிப்பதைத் தொடர்ந்தார்.

நான் மேல்தட்டில் ஏறினேன். அங்கே என் பையும் அண்ணு போர்த்திக்கொள்ளக் கொண்டுவந்திருந்த கம்பளியும் இருந்தன. பைமேல் அந்தக் கம்பளியை எடுத்துத் தலைக்கு அணையாக வைத்துக்கொண்டுத் தூங்கிவிட்டேன். ஆழ்ந்த உறக்கம் என்னைத் தன்வயப்படுத்திக்கொண்டது. உறக்கம் நீங்கி நான் கண்விழித்தபோது காலை மணி மூன்றிருக்கும். இயற்கையின் நிர்ப்பந்தத்தைத் தவிர்த்துக்கொள்ள கீழே இறங்கினேன்.

அண்ணு...அப்போது...கடுங்குளிரைத் தாங்க முடியாமல் இரு கைகளாலும் தன் உடலை இறுக அணைத்துக்கொண்டு தூங்கிக்கொண்டிருந்தார்;

என் தலையின் கீழ் இருந்த அவருடைய கம்பளியை அவரே எடுத்துக்கொண்டிருக்கலாம்; அல்லது என்னை எழுப்பிக் கேட்டிருக்கலாம். அப்படிச் செய்தால் என்னுடைய தூக்கம்கெட்டுப் போய்விடுமே என்ற எண்ணத்தால் தன் இரு கைகளையும் போர்வையாக ஆக்கிக்கொண்டு அவர்...உடனே கம்பளியை எடுத்து அவர்மேல் போர்த்தினேன். அந்த அன்பால் உருக்கப் பட்ட என் இதயம் கண்கள் வழியே கசிந்ததை என்னுல் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது.

காலத்தையும் பூகோளத்தையும் எதிர்ப்பக்கமாகச்சுழற்றிப் பார்க்கவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது இப்போது. பிரஞ்சு நாட்டில் எழுத்துலக வேந்தனுகத் திகழ்ந்தவன் எமிலி ஜோலா (Emlie Zola). அவன் காலத்தில் அந்தச் சமுதாயம் எப்படிச் சாக்கடையாகி வழிந்தது என்பதைக் கதைகள் உருவிலே காட்சிகளாகக் காட்டியவன்.

அவன் எழுதிக்குவித்தவன் மட்டுமல்ல—மன உறுதி படைத்தவன் கூட.

டிரெய்பஸ் (Dreyfus) என்ற தளபதியின் மீதுஅந்த நாட்டு சர்க்காருக்குக் கோபம் பிறந்தது. அவன் செய்யாதகுற்றங்களை அவன்மேல் சுமத்திச் சிறையிலே அடைத்தார்கள். நீதி கூறு பவர்களும் அதை நிறைவேற்றி வைப்பவர்களும் ஒருவருக் கொருவர் உடன்பட்டுப் போனதால் அநியாயத்துக்குப் பலி யானுன் அவன்.

எதிர்த்துக் கேட்க எவருக்கும் துணிவில்லை—எமிலி ஜோலா ஒருவனைத் தவிர. ஏடுகளைத் துப்பாக்கி ஆக்கினுன்—எண்ணங்களைக் குண்டுகளாக்கி அரசாங்கத்தைக் குறிவைத்துச் சுட்டான் அந்த ஜோலா. அவனைச் சிறைக்குள் தள்ளினுர்

கள். தண்டனைகாலம் முடிந்துவெளியே வந்தான்—தொடர்ந்து விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தான். அதை எதிர்த்துத் தாக்குப் பிடிக்க முடியாத அரசாங்கம் அந்தத் தளபதியை விடுவித்தது. விடுதலை பெற்று வெளியே வந்த அவன், "எனக்காக வாதாடி என்னை வெளியே கொணர்ந்த அந்த ஜோலா எங்கே? அவனைப் பார்க்கவேண்டும்," என்று கேட்டான். ஜோலா...செத்துவிட்டான் அப்போது. அவனுடைய பிணத்தைத்தான் பார்க்கமுடிந்தது அந்தத் தளபதியால்.

ஜோலாவை டிரெய்பஸ் பார்த்ததில்லை; டிரெய்பஸ்ஜோலோ என்றால் யார் என்றே தெரியாதவன். அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை இருவருமே அறிந்தவர்கள் அல்ல. உணர்வுகள்தான் இருவரையும் இணைத்தனவே தவிர உருவங்களோ உறவுகளோ அல்ல. அதிகாரம் அவனைச் சிறைப்படுத்திற்று—அனுதாபம் ஜோலாவைப் போராடத் தூண்டிற்று.

கடந்துபோன காலத்தை இனியும் கட்டுப்படுத்தி வைக்காமல் இந்தக் கட்டுரையின் காலத்துக்கு இனி வருவோம். அதைப்போன்ற நிகழ்ச்சி ஒன்றில் அண்ணு கதாநாயகனுக இருந்தார்.

விடுதலைப் போராட்டத்தின் விளைவாக இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து முதலில் வெளியேறியவன் ஆங்கிலேய நாட்டவன். அதிகாரம் கைமாறிய பிறகு தொடர்பு துண்டிக்கப்பட்டவன் பிரஞ்சு நாட்டான். அதற்கு அப்பாலும் போக மறுத்தவன் போர்ச்சுகல் நாட்டான்—கோவா, டையூ, டாமன் என்ற இந்திய நிலப்பரப்பில் இருந்த மூன்று புள்ளிகளில் தன்னைப் புகுத்திக் கொண்டிருந்தவன். வெப்பத்தின் எல்லைக்குள் இல்லாத காரணத்தால் இரும்பு உருகிய பிறகுகூட அந்தத் துரும்பு துள்ளிக்கொண்டிருந்தது.

எழுச்சி பிறந்தது—கிளர்ச்சி வலுத்தது—எண்ணற்றோர் தங்கள் எதிர்காலத்தைத் தத்தம் செய்ய முன் வந்தனர். அந்த எழுச்சிக்கு வித்திட்டவர்களில் ஒருவர்தான் ரானடே (Ranade). அவனைக் கைது செய்து போர்ச்சுக்கல் நாட்டுச் சிறைக்குள்ளே அடைத்தனர் போர்ச்சுக்கீசிய ஆக்கிரமிப்பாளர்கள்.

டில்லியிலிருந்து இராணுவம் புறப்பட்டு கோவா போய்ச் சேருவதற்கும் அங்கிருந்த போர்ச்சுகீசியர் புறப்பட்ட கலங்கள் காத தூரத்துக்குமேல் கடந்து சென்றதற்கும் நேரம் ஒத்திருந்தது. ஆனல் ரானடே....விண்ணப்பங்களும் வேண்டுகோள்களும் அவன் கைவிலங்குகளை உடைக்கச் சக்தியற்றுச் சிதறின.

அமெரிக்க நாட்டு யேல் பல்கலைக் கழகத்திலிருந்து (Yale University) அண்ணாவைப் பாராட்டவும், அவரோடு கலந்து உரையாடவும், அவருக்கு சப் பெல்லோஷிப் '(Chubb follow-ship) என்ற பட்டத்தை அளிக்கவும் அழைப்பு வந்தது. அழைப்பை ஏற்றுக்கொண்டு புறப்பட்டார் அண்ணா.

தனக்காக காத்திருக்கும் விருது அவருக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. உரிமைக்காகப் போரிட்ட வீரன் ஒருவன் அது அவனுக்கு மட்டும் கிடைக்காமல் சிறைப்பட்டிருக்கிறானே என்பதைத்தான் அவர் எண்ணினார். அவனை அவருக்குத் தெரியாது; இவரை அவன் பார்த்ததில்லை. எல்லையிலிருந்து கொள்கைவரை எண்ணற்ற வேற்றுமைகள் உண்டு அவர்கள் இருவருக்கும். உரிமை உணர்வினால் மட்டுமே ஒட்டப்பட்டிருந்தன அவர்கள் இருவர் உள்ளங்களும்.

நேராக அமெரிக்கா செல்லாமல் ரோம் (Rome) நாட்டுக்குப் போய், வாடிகன் (Vatican) நகரத்திலிருந்த கத்தோலிக்க மதத் தலைவர் போப்பாண்டவரைச் சந்தித்து அவருடைய செல்வாக்கைப் பயன்படுத்தி அவனை விடுவிக்க ஏற்பாடு செய்யும்படி வேண்டிக் கொண்டார் அண்ணா; அவரும் இசைந்தார். நீண்ட நாட்கள் கழித்து ரானடே விடுவிக்கப்பட்டான். அந்நிய மண்ணை விட்டு இந்திய எல்லையில் கால் வைத்தான். 'எனக்காககடல் கடந்து போய் காரியமாற்றக்கூடிய ஒருவரிடம் வேண்டிக்கொண்ட அந்த மனிதர் எங்கே?'' என்று கேட்டான். ஆனால்... அண்ணா... அதற்குமேல் என்னால் எழுத முடியவில்லை. வங்கக் கடற்கரையோரம் பொங்கி அழுகிறது என்று அரபிக்கடல் அவனுக்கு அறிவித்தது.

முதல்அமைச்சராகி ஓராண்டுக்குப் பிறகு அண்ணாவுக்குப் புற்றுநோய் வந்தது. புதைகுழிக்கு முன் பக்கத்தின் கடைசி வரிதான் புற்றுநோய் என்பது. அது எப்படி ஏற்படுகிறது என்பதை மருத்துவர்கள் இன்னும் நிர்ணயிக்கவில்லை; அதனால் தான் அதை எப்படிப் போக்குவது என்பது அவர்களுக்குப் புரியவில்லை. இயன்றவரை அடுத்த பக்கத்தைப் புரட்டாமல் தடுக்கவோ தவிர்க்கவோ முயற்சிப்பார்கள்.

சென்னையில் குணப்படுத்த முயற்சித்து முடியாமல் அமெரிக்கா சென்றார். அவரோடு நண்பர் செழியனும் இப்போதைய மாண்புமிகு அமைச்சர் நண்பர் இராஜாராம் அவர்களும் துணைக்குச் சென்றனர்.

அண்ணா அமெரிக்காவில் நோயோடு போராடிக் கொண்டிருந்தபோது ...

கொலைக் குற்றத்துக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி தன் நாட்களை எண்ணிக்கொண்டிருந்தான். காலம் கொஞ்சங் கொஞ்சமாகக் காலாவதி ஆகிக்கொண்டு வந்தது அவனுக்கு. மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக்க அரசாங்கத்தை வேண்டினர் சிலர். அதில் நானும் ஒருவன்.


கொடுமையானதொரு கொலையைச் செய்தான் அவன் என்பதற்காக அவன் உயிரைப் போக்குவதில் தவறேதும் இல்லை. ஆனால்...அந்தத் தண்டனை அவனோடு மட்டும்நின்று விடுவதில்லை. அவனை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கும் அவன் மனைவி ..குழந்தைகள்...? உயிரோடு இருந்தால் எட்டாத தூரத்தில்இருக்கும் தங்கள் எதிர்காலம் எப்போதாவது கிட்டும் என்ற நம்பிக்கையாவது இருக்கும். அவன் கொல்லப்பட்டால் அவள் விதவையாவாள்; அவனுடைய குழந்தைகள் அனாதைகளாக ஆகும். குற்றம் செய்த ஒருவனுக்காக குற்றம் செய்யாதவர்களைச் சித்திரவதை செய்வது என்பது...

இதற்குத் தொடர்புள்ள அமைச்சர்கள் எவரும் எங்களுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதி முயற்சியாக அமெரிக்காவில் இருந்த அண்ணாவோடு தொலை பேசி வழியாகப் பேசினேம். அங்கிருந்து அவனை ஆயுள் கைதி ஆக்கும்படி தந்தி கொடுத்தார் அண்ணா. அந்தக் குடும்பம் காப்பாற்றப்பட்டது.

வற்றிய இதயங்கள் உயிரின் தொடர்பே இல்லாத வெறும் மெய்யெழுத்துக்கள்; முற்றிய இதயங்கள் முடிந்து போனவைக்கு அமையும் முற்றுப்புள்ளிகள்; ஈரங் குறையாது நிலைத்து நீடிப்பவைதாம் சாரம் மிகுந்த சரித்திரங்களைப் படைப்பவை.

உலகத்தை வென்றவர்கள் வீரர்களாகிறார்கள்; அதன் உள்ளத்தை வென்றவர்கள் அதைத் தம் கோவிலாக்கிக் கொண்டு குடியேறுகிறார்கள்; காலத்தை வென்றவர்கள் அதன் கர்த்தாக்கள் ஆகிறார்கள்.

இவை ஒவ்வொன்றாகவும் திகழ்ந்தவர்—இவை எல்லாமாகவும் இருந்தவர் அண்ணா. வையகம் வாழ்த்துகிற அந்த மனிதரை வரலாறும் வாழ்த்துகிறது.



தத்துவமேதையும் கலைஞரும்

# வாழ்த்துக்கள் வாழ்பவை

(மாயூரம் அண்ணு பகுத்தறிவு மன்றத் திறப்பு விழாவில் மாண்புமிகு. டாக்டர் கலைஞர் படத்தைத் திறந்து வைத்தபோது, பேசிய பேச்சு. அவருடைய பொதுவாழ்வுக்கு ஒரு முழு உருவம் கொடுப்பதற்காகச் சிலபல நிகழ்ச்சிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன இந்தக் கட்டுரையில்)

அண்ணு பகுத்தறிவு மன்றத்துக்கு ஒரு கட்டிடத்தை உருவாக்கி அதில் மாண்புமிகு டாக்டர். கலைஞர் கருணுநிதி அவர்கள் திருவுருவப் படத்தைத் திறந்துவைக்கும் வாய்ப்பை எனக்களித்தனர் மாயூரம் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள். மாயூரத்தைப் பொறுத்தவரை எனக்கு நண்பர். கிட்டப்பாவைப் பற்றி மிக நன்ருகவே தெரியும்—அவர் எந்தக் காரியத்தைச் செய்தாலும்—நல்லதாக இருந்தாலும் பொல்லாததாக இருந்தாலும்—எதையும் சிறிய அளவிலே செய்யாமல் பெரிய அளவிலேயே செய்து பழக்கப்பட்டவர். அப்படிப்பட்ட நண்பர். கிட்டப்பாவும் அவரோடு இணைந்து பணியாற்றும் மாயூரம் நண்பர்களும் இந்த விழாவினைச் சிறப்பாகவும் செழிப்பாகவும் பெரிய அளவிலேயே செய்திருக்கிருர்கள். சத்தமோ சந்தடியோ இல்லாது அமைதியாக நிகழ்ச்சிகளைக் கவனிக்கும் இவ்வளவு பெரிய கூட்டத்தை இங்கே கூட்டி யிருக்கிருர்கள்.

நான் டாக்டர். கலைஞர் படத்தைத் திறந்து வைப்பது பலருக்கு ஆச்சரியத்தையும் ஐயப்பாட்டினையும் அளித்

திருக்கக்கூடும். அவர்கள் அனைவரும் என் இதயத்தின் ஒரு பக்கத்தைப் பார்த்தவர்கள்; மறு பக்கத்தைப் பார்க்காதவர்கள். மறு பக்கத்தைப் பார்க்காத காரணத்தால் ஒருவித மயக்கம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும்.

எனக்கும் டாக்டர். கலைஞருக்கும் ஏற்பட்ட நெருக்கம் இன்றோ நேற்றோ ஏற்பட்டதல்ல. 'நேற்று முன்னுளில் வந்த உறவன்றடி; இது நெடும் பண்டைக்கால முதல் இருந்திட்டதாம்,' என்ற தேசியகவி பாரதியின் கவிதை வரிகள் எங்கள் தொடர்புக்கு ஒரு தோற்றம் தருபவை. அவர் தமிழகத்தின் முதல்வர் ஆவதற்கு முன்னுல்— டாக்டர் ஆவதற்கு முன்னுல்—கலைஞர் ஆவதற்குக் கூட முன்னுல் தஞ்சை நகரத்தின் தெருக்களும் திருவாரூர் வீதிகளும் எங்கள் இருவரையும் இணைந்தே சந்தித்திருக்கின்றன.

அவருடைய இல்லத்தில் நாட்கணக்கிலே கூட நான் தங்கி இருந்திருக்கிறேன். உதிரிகளாகவும் எதிரிகளாகவும் நம் இயக்கத்தைச் சார்ந்தவர்களைக் கருதி வந்த சமுதாயம் தெளிவு பெற்று நம்மோடு உறவு கொள்ளத் தொடங்கிய காலம் அது. தஞ்சை மாவட்டத்தில் எங்கள் இருவருடைய குரல்களும் இணைந்து ஒலிக்காத இடம் மனிதர் எவரும் வசிக்காத இடமாகத்தான் இருந்திருக்கும். அவர் எழுதிய நாடகங்கள் சிலவற்றில் கதாநாயகனுக அவரும், வில்லனுக நானும் நடித்திருக்கிறோம்.

திராவிடர் கழகத் தலைவர் பெரியார் தன்னுடைய தள்ளாத வயதில் பொருத்தமற்ற திருமணத்துக்கு ஏற்பாடு செய்ததால் கட்சியில் புகைச்சலும் புலம்பலும் ஏற்பட்டன. எண்ணற்ற கட்சித் தொண்டர்களின் இதயங்கள் குமுறின. கண்ணீர்த் துளிகள் பெருகின. அப்போது நானும் டாக்டர் கலைஞருந்தான் எங்கள் எதிர்ப்பை ஒரே கடிதத்தில் எழுதித் தெரிவித்துக் கையெழுத்துப் போட்டு அனுப்பி வைத்தோம். அண்ணு இரண்டு கடிதங்களாக அதைப் பிரித்து 'திராவிடநாடு' இதழில் வெளியிட்டார்.

திருவாரூரில் அவருடைய திருமணம் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. அண்ணுதான் அந்த நிகழ்ச்சிக்குத் தலை வர்; நான் வாழ்த்துக் கூறச் சென்றிருந்தேன். அண்ணு வரவில்லை. அடுத்து ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந் தார் டாக்டர். கலைஞர். இந்தித் திணிப்பை எதிர்த்து அவர் படித்த பள்ளிக்கூடத்துக்கு முன்பாக மறியல்—அதில் இரு வருமே கலந்து கொண்டோம். மறியல் முடிந்து வீடு திரும்பியபோதும் அண்ணு வரவில்லை. எவரும் தலைமை வகிக்காமலே அவர் திருமணத்தை நடத்தி விடுவது என்று நாங்கள் இருவருமே கலந்து முடிவெடுத்தோம். அவரவர் எழுந்து அவரவர் கடமைகளைச் செய்தோம். எந்தவித அறிவிப்பும் இல்லாமல் மணமக்கள் மாலை மாற்றிக்கொண் டார்கள்; எவரும் என்னைக் கேட்டுக் கொள்ளாமலே நான் எழுந்து வாழ்த்துக் கூறினேன்.

பார்த்தால் சித்திரமாகவும் பழகினுல் சிலையாகவும் எதிர்ப்படும் இதயங்களில் தன்னைப் பதித்துவிடும் தோற்ற மும் ஆற்றலும் பெற்றவர் அவர். தன் உள்ளத்தில் உரு வாகும் உணர்ச்சிகளை எழுத்துக்களாலும் பேச்சுக்களாலும் உணர்ச்சிகள் உருவிலேயே எவருடைய உள்ளத்திலும் புகுத்திவிடும் திறமை அவருக்குண்டு. எப்படித் தங்களை இழந்தோம் என்பது புரியாமல் இயங்கியவர்களும் இப் போதும் இயங்குபவர்களும் எண்ணற்ருேர். உருக்கிவிட்டு உருவம் அமைப்பவர் அவர்; அதனுல்தான் உறுதி குறை யாமலும் குலையாமலும் அவரால் உருவாக்கப்பட்டவை நீடிக்கின்றன.

ஒருமுறை தஞ்சைக்கு அருகே உள்ள திருவையாற்றில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் நாங்கள் இருவரும் பேசி ேனும். தனக்கிருந்த கடுமையான நெஞ்சுவலியையும் பொருட்படுத்தாமல் அவர் அந்தக் கூட்டத்துக்கு வந்திருந் தார். எதிரே கூடியிருந்தோர் எண்ணிக்கை அவருடைய பேச்சை நீட்டிவிட்டது; இறுதியில் மயக்கம் ஏற்பட்டு மேடையிலேயே விழுந்து விட்டார். அவர் பேச்சினுல் உரு

வான உருக்கம் காரணமாக அவர் தெளிவடையும் வரை எவரும் நகரவில்லை. குணமடைந்த பிறகுதான் மனங் குளிர்ந்து அந்தக் கூட்டம் கலைந்தது.

அண்ணன் சிந்தனைச் சிற்பி திரு. சி. பி. சிற்றரசு அவர்கள் ஒருமுறை இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து விட்டுத் திரும்பியபோது ஒரு விவரத்தைத் தெரிவித்தார். இலங்கைவாழ் சிங்களவர்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் என்றால் இன்னதென்றே புரிந்துகொள்ள முடிந்த தில்லை. ஏற்பாடு செய்யப்பட்ட எண்ணற்ற பொதுக்கூட் டங்களும் ஏடுகள் தெரிவித்த விளக்கங்களும் விவரங்களும் அவர்களிடம் எந்தவித உணர்வையும் அறிவையும் உண் டாக்க இயலாமல் தவித்தன. கலைஞர் வசனம் எழுதிய 'பராசக்தி' என்ற திரைப்படம் திரையைக் கிழித்து அவர் களுக்குக் கழகத்தைப் பற்றிய தெளிவை உண்டாக்கிற்று. கட்சிக்கே 'பராசக்திக் கட்சி' என்று பெயரிட்டு அழைத் தார்கள். அந்தப் பெயரில் குறிப்பிட்டால்தான் அவர் களுக்கு நம்மைப் புரிந்துகொள்ள முடிந்தது; சொந்தப் பெயரோ வேறு எந்தப் பெயரோ பயன்தரவில்லை.

சக்கரவர்த்தி திரு. இராஜகோபாலாச்சாரியார் இந்தி யத் துணைக்கண்டத்தின் கவர்னர் ஜெனரலாக இருந்த போது, திருவையாற்றில் நடந்த தியாகய்யர் உற்சவத்தில் கலந்துகொள்ள வந்திருந்தார். அந்த நேரம் தமிழக மக் கள் உணவுக்கு ஆளாகப் பறந்த நேரம். உண்ண உண வில்லாமல் எண்ணற்றோர் வயிறு காயக் காயக் கலங்கிக் கொண்டிருந்தனர். எதுவும் கிடைக்காவிட்டால் இலை தழைகளைச் சாப்பிடுங்கள் என்று ஆட்சிபீடத்தில் இருந்த காங்கிரஸ் தலைவர்கள் மக்களுக்கு அறிவுரை கூறினர்.

ஆச்சாரியாருக்குக் கருப்புக்கொடி காட்டித் தங்கள் கவலைகளையும் கருத்துக்களையும் தெரிவிப்பது என்று திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்தது. தஞ்சை யில்தான் அந்த நிகழ்ச்சி நடத்தியாக வேண்டும். அந்த

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தவர் டாக்டர் கலைஞர். காவல் துறையினர் ஆளே இல்லாத ஒரு இடத்தைக் குறிப்பிட்டு அங்கு நின்றுதான் கருப்புக்கொடி காட்டவேண்டும் என்று கட்டுப்படுத்திவிட்டனர். அப்போது ஒரு சுவரொட்டி தஞ்சை நகர வீதிகளில் தோற்றமளித்தது. 'பசியால் துடிக்கிறோம்; பாட்டுக் கேட்க வருகிறார்.' எளிமையும் எந்த இதயத்திலும் பதியக்கூடிய வலிமையும் நிறைந்த அந்த வாசகங்கள் எவரெவர் இதயங்களில் என்னென்ன செய்தனவோ தெரியவில்லை, நிற்பதற்கு இடங்கூடப் போதாமல் மக்கள் நிறைந்தனர் அங்கே.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் நடந்த எந்தப் போராட்டமாக இருந்தாலும் அதைத் தன் சொந்தப் போராட்டமாக மதித்து நடந்தவர் டாக்டர். கலைஞர். அவருடைய குரல் மக்களை அழைக்கும் குரலாகவும் போராட்டத்துக்கு இழுக்கும் குரலாகவும் முரசொலித்திருக்கிறது. எவராயிருந்தாலும் அவர்கள் முகத்தைப் பார்க்கும் போதே அகத்தை ஆராய்ந்துவிடும் ஆற்றல் அறிஞர் அண்ணாவைப் போலவே இவருக்கும் உண்டு. என்ன செய்யப் போகிறார் என்று மாற்றார் புரிந்து கொள்ள முயற்சிக்கும் போதே எல்லாவற்றையும் செய்து முடித்து விடுவார். அதனால்தான் கழகத் தோழர்கள் முடிவுகளுக்காக அறிஞர் அண்ணாவையும் அவற்றின் விளைவுகளுக்காக டாக்டர். கலைஞரையும் எதிர்பார்ப்பார்கள். இருக்கிற சூழ்நிலைகளை நிரப்பி விடுவார்; கிடைக்கிற வாய்ப்புகளை வளைத்துக் கொள்ளுவார்.

அவருடைய வாழ்வின் எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும் ஒரு அடிப்படை உண்மை தன் உருவத்தைக் காட்டும். கட்சியில் நிகழ்ந்த எந்த நிகழ்ச்சியில் அவர் கலந்து கொண்டிருந்தாலும் 'அவரும் இருந்தார்' என்று தோன்றாது; 'அவர்தான் இருந்தார்' என்ற முத்திரை எப்படியாவது விழுந்திருக்கும். எந்த ஒரு பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டாலும் தன்னுடைய மற்ற

அனைத்தையும் ஒதுக்கி விட்டு அது ஒன்றிலேயே ஆழ்ந்து விடுவார்; அதனுல் தான் எந்த ஒரு நிகழ்ச்சியிலும் அவர் ஒருவரே நிறைந்து விடும் நிலை உருவாகி விடுகிறது. அதனுல்தான் எந்த நிகழ்ச்சியிலும் 'அவரும்' இருப்ப தில்லை; 'அவர்தான்' இருக்கிருர்.

கல்லக்குடி என்ற சிற்றூர் ஒரு முறை போர்க்களம் ஆனது. டால்மியா என்ற வடநாட்டு முதலாளி அங்கே ஒரு சிமண்ட் தொழிற்சாலை நடத்தியதால் அந்த ஊருக்கே அவன் பெயரைச் சூட்டி அதை இந்திய சர்க்காரும் ஏற்றுக் கொண்டு அந்த ஊர்ப் புகைவண்டி நிலையத்துக்கும் டால்மியாபுரம் என்று பெயர் வைத்து அழைத்தது. ஒரு தமிழ்ப் பெயர் மறைந்தது என்பது மட்டுமல்ல—ஒரு முதலாளி—அதுவும் வடநாட்டான்—அவன் பெயர் நிலைத்துவிட்டது.

அதை எதிர்த்துப் போராடும் பொறுப்பை டாக்டர். கலைஞர் ஏற்றுக் கொண்டார். போனவர் சும்மா போகாமல் அப்போது இரயில்வேயில் பணியாற்றிய என்னையும், 'வா, கல்லக்குடிக்கு', என்று தன் காரிலேயே ஏற்றிச் சென்ருர். இவர் போவதற்கும் நான் போவதற்கும் வேறுபாடு இருந் தது. இவர் அந்தப் போராட்டத்தை நடத்தப் போனவர்; நான் போராட்டத்தை வேடிக்கை பார்க்கப் போனவன். காரணம், நான் அப்போது இரயில்வேயில் பணியாற்றிக் கொண்டிருந்தேன்; போராட்டத்தில் கலந்துகொண்டால் என் வாழ்க்கை ஒரு போராட்டமாக ஆகிவிடும்.

போராட்டம் தொடங்குவதற்கு முதல்நாள் இரவு சூடான செய்திகள் எங்களுக்குக் கிடைத்தன. அதே நேரத்தில் நடந்த மும்முனைப் போராட்டத்தின் மற்ற இரு முனைகளிலும் கலந்துகொள்ள இருந்தவர்கள் கைது செய் யப்பட்டார்கள். அண்ணுவிலே தொடங்கி அடுத் திருந்தோர் அனைவரும் சிறைப்படுத்தப்பட்டனர் என்பது தான் அந்தச் செய்தி.

அந்தச் சூடு அடுத்துக் கிடைத்த செய்தி ஒன்றினுல் சுவைகுன்றிப் போனது. கல்லக்குடிப் போராட்டத்தில் கலந்து கொள்வோரை சர்க்கார் கைது செய்யப் போவ தில்லே. எழுச்சி பெற்றிருந்தோரை இடுப்பொடியச் செய் தது இந்தச் செய்தி.

கலேஞர் செயலற்றுப் போனுர். கைது செய்யாமல் போனுல் போராட்டம் பிசுபிசுத்துவிட்டது என்று மாற்றுக் கட்சி ஏடுகள் எழுதிவிடும். எந்தப் போராட்டத்தை? தமிழனின் மான அவமானப் போராட்டத்தை! வீர மற வர்கள் என்று மதிக்கப்பட்டவர்கள் வெட்கங்கெட்ட உருவங்களாகக் கருதப்படுவார்கள். ஆகவேதான் ஓடுகிற இரயில் வண்டி தன் கழுத்தைத் துண்டித்தாலும் கவலே யில்லே என்று தண்டவாளத்தில் தன் அணித் தோழர் களோடு தலேவைத்துப் படுத்தார் கலேஞர்; அதற்காகக் கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்து காரைக்குடி இராம. சுப்பையா...கவிஞர் கண்ணதாசன்...துப்பாக்கிச் சூடுகள்...இரு உயிர்கள் பலி யாகின...ஏராளமானவர்கள் கைது செய்யப்பட்டனர்... எதிர்த்து நின்றவர்களுக்கு தடியடி...இயக்கியவர்கள்மீது வழக்குகள்...அன்று வடிக்கப்பட்ட செந்நீரும் கண்ணீரும் இன்று 'கல்லக்குடி—பழங்கானத்தம்' என்ற புகைவண்டி நிலேயப் பெயர்ப்பலகையாக இருந்து காட்சியளிக்கின்றன.

தஞ்சையில் எஸ். எம். டி பஸ் கம்பெனி ஊழியர்கள் தங்கள் குறைகளேப் போக்கிக் கொள்ள நிர்வாகத்தோடு சமரசம் பேசித் தோற்றுப் போனதால் போராடத் தொடங் கினர். மக்களுக்குப் போராடும் தொழிலாளர்களிடம் அக்கரையும் அனுதாபமும் ஏற்படுத்த அனேத்துக் கட்சி பிரசாரக் குழு அமைக்கப்பட்டது. அதிகாரத்தில் இருந்த வர்களும் அந்தஸ்தோடு வாழ்ந்தவர்களும் நிர்வாகத்தின் கையாட்களாக இருந்து எதிர்ப்புப் பிரசாரம் செய்தார்கள். அதனுல் பொதுக்கூட்டங்கள் விறுவிறுப்பாக இருந்தனவே தவிர போராட்டம் மெதுவாகத்தான் நகர்ந்தது. ஊக்கம்

கொஞ்சங்கொஞ்சமாகக் குறைந்து ஒரு தேக்கம் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சங்கூட ஏற்பட்டது எங்களுக்கு.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு அதில் அக்கரையும் ஆர்வமும் உண்டாக ஒரு காரணம் இருந்தது. போராட்டத்தை நடத்தியவர்கள் தொழிற்சங்கத் தலைவராக இருந்த திருச்சி. எம். எஸ். மணியும் அவருடைய நண்பர்களும். நகர திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள்தான் அவர்களுக்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் செய்து வந்தனர். தஞ்சை நகரப் பொது மக்கள் அதை ஒரு கழக நிகழ்ச்சியாகவே கவனித்து வந்தனர். தோற்றுப்போனால் கட்சிக்கிருந்த ஏற்றத்துக்கு ஏதாவது நேர்ந்து விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது எங்களுக்கு. அதனால் திராவிட முன்னேற்றக் கழகப் போராட்டக் குழு என்ற தனி அமைப்பொன்றைத் தொடங்கி அந்தத் தொழிலாளர் பிரச்னையைக் கழகத்தின் அலுவல்களில் ஒன்றாகவே ஆக்கினோம். நான் அந்த அமைப்புக்குச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

அதுவரை அரசியல் நடவடிக்கைகளுக்காக என்னை எப்படி தண்டிப்பது என்று புரியாமல் தவித்த இரயில்வே நிர்வாகத்துக்கு இது ஒரு வாய்ப்பாகக் கிடைத்தது. என்னை வேலையிலிருந்து நீக்கி விட்டனர். நான் விடுதலை பெற்றேன்—அதற்கான விலையையும் பின்னால் நான் கொடுத்துத் தீரவேண்டி இருந்தது.

கழகம் நேரிடையாகப் போராட்டத்தில் ஈடுபட்ட பிறகு தனிப்பட்ட சூடு பிடித்தது. பொறிகளாகப் பறந்து கொண்டிருந்த அந்தப் போராட்டம் தணலாக மாறி அழலாக எரியத் தொடங்கிற்று. தஞ்சை நகரத்தில் மட்டும் என்றில்லாமல் மாவட்டம் முழுதுமே போராட்டத்தில் ஈடுபட்டது. எங்கெங்கு எஸ். எம். டி. பஸ்கள் ஓடினவோ அங்கெங்கெல்லாம் மறியல் செய்வது என்று முடிவெடுத்தோம். ஏறத்தாழ ஆயிரத்துக்கு மேற்பட்ட கழகத் தொண்

டர்கள் மறியலில் சிறைப்படுத்தப்பட்டனர். இப்போது என் நினைவில் இருப்பவர்கள் தஞ்சை. எஸ். பெத்தண்ணன், மயூரநாதன், மாயூரம் கிட்டப்பா, பேராவூறணி அடைக் கலம், இன்னும்...உட்கார்ந்து சிந்தித்தால் அந்தப் பெயர் களை எழுதவோ பேசவோ இப்போதிருக்கிற நேரம் போதாது.

உறுதி குறையாமல் உற்சாகம் குலையாமல் விறுவிறுப்பு விட்டுப் போகாமல் அந்தப் போராட்டம் நாற்பத்தைந்து நாட்களுக்கு மேலேயே நடந்தது.

அடுத்து என்ன செய்வது என்பதை அண்ணாவோடு கலந்து ஆலோசிக்க நான் சென்னை சென்றேன். அவர், ''கருணாநிதி மறியலில் கலந்து கொள்ளுவதாகக் கூறுகிறார். அவருக்கிருக்கும் பல அலுவல்கள் பாதிக்கப்படும் என்ப தால் நான் தடுத்துக் கொண்டிருக்கிறேன். அவரையும் சந்தித்துப் பேசு,'' என்றார்.

நான் கலைஞரை தேடிப்போனேன். அண்ணா சொன் னதை எல்லாம் அவரிடம் சொன்னேன். அவருடைய தாயார்—என்னுடைய மதிப்புக்குரிய அன்னை—அஞ்சுகம் அம்மையாரில் தொடங்கி அச்சகத்தில் பணியாற்றுகிற தோழர்கள் வரை என்னைச் சந்திக்கச் செய்து, ''அது வரை அவர் செய்யவேண்டிய வேலைகள் அனைத்தும் முடிந்துவிட்டன; போராட்டத்துக்குப் புறப்பட வேண்டி யது ஒன்றுதான் காத்திருக்கிறது,'' என்று ஒவ்வொரு வரையும் சொல்லச் செய்து, நானே அண்ணாவிடம் அவர் போராட்டத்தில் கலந்து கொள்ளச் சிபாரிசு செய்கிற அள வுக்கு மாற்றிவிட்டார்.

'எதையும் நினைப்பதை நீங்கள் செய்யுங்கள்; எல்லா வற்றையும் நிறைவேற்றுவதை என்னிடம் ஒப்படையுங் கள்' என்பது ஒன்றே அவருடைய கோரிக்கையாக என் றென்றும் இருந்து வருகிறது. எழுத்தாளர்களும் பேச் சாளர்களுமாக திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒவ்

வொருவரும் நிரப்பிக்கொண்டிருந்தபோது செயலாற்றுபவ ராகத் தன்னை ஆக்கிக்கொண்ட ஒரே மனிதர் டாக்டர் கலைஞர்தான். அதனால்தான் அடித்தளத்திலிருந்த தொண் டர்களின் அன்புக்கு அவர் பாத்திரமாக முடிந்தது.

எந்தத் திட்டத்துக்கும் உருக்கொடுப்பவராக அண்ணா இருந்தார்; அதற்கு உயிர் கொடுப்பவராக டாக்டர் கலைஞர் தன்னை ஆக்கிக் கொண்டார். மற்றவர்கள் அனைவரும் உடனிருப்பவர்களாகவே இருந்து விட்டார்கள்.

காலமும் கருத்துக்களும் இணைந்து திராவிட முன்னேற் றக் கழகத்தை வளர்த்தன. இயக்கத்தில் இருந்த எல்லா அணிகளுக்கும் பணிகள் இருந்தன. பசியையும் தாகத்தை யும் கட்டுப்படுத்திக் கொண்டு பம்பரமாகச் சுழன்றனர் செயல்வீரர்கள். பட்டி தொட்டிகளில்கூட பாடி வீடுகளும் படை வரிசைகளும் உருவாகின. கொடி பறக்காத இட மில்லை—கோட்டை ஆகாத ஊரில்லை—இயங்காத இளைஞன் இல்லை—வணங்காத அறிஞர் இல்லை—வாழ்த்தாத முதி யோர் இல்லை—வசைபாடாத எதிர்க்கட்சிக்காரர் இல்லை! இப்படித்தான் வளருகிறது என்ற நமக்குத் தெரிந்த உண்மையைப் புரிந்துகொள்ள முடியாததால் எப்படியோ வளருகிறது என்று ஏங்கிற்று நம்மை ஏசிப் பேசி வந்த கூட்டம். அந்த ஏக்கம் எரிச்சலாக உருவெடுத்தது. எதையாவது செய்து நம்மை உருவழித்தால் தவிர இருக் கிற இடங்களைக் கூட இழக்கவேண்டி நேரிடும் என்ற எண் ணம் ஏற்பட்டது அவர்களுக்கு.

தொண்டர்கள் தாக்கப்பட்டனர்; அவர்களுக்குத் துணை நின்றோர் விரட்டப்பட்டனர்; எதிர்த்து நின்றவர்களை இரக்கம் இல்லாமல் வெட்டி வீழ்த்தினர்; புத்தி புதை யுண்டு போனதால் கத்தி தன் காரியத்தைச் செய்து கொண்டிருந்தது.

இறுதியில்.........ஒரு முடிவுக்கு வந்தனர் எதிர்க்கட்சித் தோழர்கள். எரிவதை இழுத்துவிட்டால் கொதிப்பது

நின்றுபோகும். எரிவது எங்கே இருக்கிறது என்று தேடி னார்கள்! அவர்களுடைய கருத்துக்குப்பட்டவர் டாக்டர் கலைஞர். அவரை ஒழித்துவிட்டால்......? சமுதாயத்தால் மட்டந் தட்டப்பட்டவர்கள் சதிக்குத் திட்டமிட்டார்கள்.

இந்த அனுபவம் ஏற்கனவே பாண்டிச்சேரியில் டாக் டர். கலைஞருக்கு ஏற்பட்டிருக்கிறது. திராவிடர் கழகம் பாண்டிச்சேரியில் உருவாகாமல் கருவாக இருந்த நேரம் அது. தொடர்ந்து கலைஞர் எழுதி நடித்த நாடகங்கள் அங்கே நடந்து கொண்டிருந்தன. பழமையை தனக் கிருந்த புலமையால் பாழ்படுத்திக்கொண்டிருந்தார் கலை ஞர் அந்த நாடகங்களில். வசனங்கள் வாளாகிச் சுழன் றன. துருப்பிடித்திருந்த நம்பிக்கைகள் தூள்தூளாகிச் சிதறின. வைதீகம் தன் வாழ்வை இழந்து கதறிற்று. எதிர்நின்று போராடுவதை எப்போதுமே தன் வழக்க மாகக் கொள்ளாததால் திரைமறைவில் அது இயங்கியது. எப்படியாவது இவரை ஒழித்துவிட்டால்........?

அந்த நேரத்தில் அங்கே கூடிற்று திராவிடர் கழக மாநாடு. ஏற்கனவே அங்கே இருந்து அனுபவித்துக் கொண்டிருந்த அரசியல் கட்சிக்காரர்களுக்கு இது ஒரு எரிச்சலை ஏற்படுத்திற்று. பழமை அவர்களைப் பயன்படுத் திக் கொண்டது. அடியாட்கள் திரட்டப்பட்டனர்—புட்டி களைத் திறந்து போதை வெறியாகும் அளவுக்கு அவர் களுக்கு ஊட்டப்பட்டது. காக்கை பறந்தாலும் அது கருப் பாக இருப்பதால் விரட்டிக் கொண்டு ஓடினார்கள் அவர்கள்.

கருணாநிதி........! எப்படியும் அவரைத் தீர்த்துக்கட்டி விடுவது என்று எதிர்பார்த்துக் காத்திருந்தது அந்த அடியாட்கள் கூட்டம். வெளியே வந்தவரை விரட்டிக் கொண்டு ஓடினார்கள். அவரால் ஓட முடியவில்லை - ஓடா மல் நின்றாலோ வாழ முடியாமற் போகும். ஒன்றும் புரியாத நிலையில் அவருடைய மூளையே அவரை நிறுத்திவிட்டது. அடித்தார்கள்—தடிகள் உடைகிறவரை அடித்தார்கள்—

மண்டை உடைந்தது—சதை கன்றிப்போனது—இரத்தம் கட்டிக் கொண்டது—மூச்சு இழுக்கத் தொடங்கியது—உணர்வு அற்றுப்போனது—ஆனாலும் அடித்துக்கொண்டே இருந்தார்கள். இனி இந்த மனிதனுக்கு உலக வாழ்வு இல்லை என்று அவர்களுக்கு நம்பிக்கை வரும்வரை அடித்தார்கள். ஆனால்......! விரட்டி விட்டோம் புதுமையை என்று நம்பி மகிழ்ந்திருந்த வைதீகத்தை உடல் தேறிவந்து மறுபடியும் துரத்தத் தொடங்கினார் டாக்டர் கலைஞர்.

கருணாநிதி ஒழிந்துவிட்டால் கட்சி காணாமல் போகும். இங்கே இருக்கிற காங்கிரஸ்காரர்களுக்கு ஏற்பட்டது. 1967ம் ஆண்டுத் தேர்தல் நேரம்—ஒரு திருமண வீட்டில் கூடி முடிவெடுத்தனர். சென்னையை ஒட்டிய கோட்டூரில் ஒரு கூட்டம் பேச இருந்தார் டாக்டர். கலைஞர். முடிந்து திரும்பும்போது அவரை முடித்துவிடுவது என்று திட்டம் தீட்டினர் காங்கிரஸ்காரர்கள். எவராலும் எட்ட முடியாத பட்டி தொட்டிகளில் இதுபோன்ற காரியங்களைச் செய்ய எவருக்கும் துணிவேற்படும். தலைநகருக்கு அருகில்—காவல் துறையின் தலைமை அலுவலகம் இருக்கும் இடத்துக்கு மிக மிக அருகில்—உடனடியாக உலகுக்குச் செய்திகளைக் கொடுக்கும் நாள் இதழ்கள் அச்சாகிற இடத்தில்—எதுவும் நடந்து முடிந்த சில மணி நேரத்துக்குள்ளேயே எட்டுத் திசைகளுக்கும் அதை எட்டச்செய்யும் சாதனங்கள் இருக்கும் நகரில்—இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யும் துணிவு அவர்களுக்கு ஏற்பட்டிருந்ததென்றால்...........புகைச்சலும் எரிச்சலும் எந்த அளவுக்குப் போதையைப் புகுத்தி இருக்க வேண்டும்.

கூட்டம் முடிந்தது. அவர் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அவர் ஏறி வந்த கார் சூழ்ந்து கொண்ட கூட்டத்தால் நிறுத்தப்பட்டது. இறங்கி ஓடினார்—விரட்டித் துரத்தினார்கள். ஒளி மறைகிற தூரத்துக்கு ஓடினார். இருள் அவரை ஏந்தி இழுத்து அணைத்துக்கொண்டது. ஏமாற்றத்துக்கு இரையானது அந்தக் கூட்டம். இட்ட கட்டளையை

நிறைவேற்றும் எடுபிடிகளாக இருந்த அந்தக் கூட்டத்துக்கு அடுத்து செய்யவேண்டியது என்ன என்பது அவர்களுக்குப் புரியவில்லை. அந்த வட்டாரத்தையே வலைவீசித் துளவிவிட்டு சிக்காத அந்தப் பொருளைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டே திரும்பிச் சென்றனர்.

கருணாநிதி ஒழிந்துவிட்டால் கட்சி காணாமல் போகும். இந்தக் குரல் இப்போதும் தொடர்ந்து ஒலிக்கிறது. பிற்பகுதியைச் சொல்ல முடியாததால் முற்பகுதியை மட்டும் சொல்லி வருகிறார்கள். கருணாநிதி ஒழியவேண்டும்—பதவியிலிருந்து இறக்கப்பட வேண்டும்—அவர் தலைமை தவிர்க்கப்பட வேண்டும். வைதீகம் கூறித் தோற்றது; ஆட்சி பீடத்தைக் குத்தகைக்கு எடுத்து வாழ்ந்தோர் கூறித் தோற்றார்கள்; இப்போது......வருமான வரி இலாகா சிலரைச் சொல்லத் தூண்டுகிறது.

இது ஒரு தொடக்கமல்ல—தொடர்ச்சிதான். எடுபிடிகள் எங்கேயும் இருக்கிறார்கள்— கிடைக்கிறார்கள். 'கருணாநிதி ஒழிந்து விட்டால்'......தொடக்கம் தமிழ் நாட்டில்; 'கட்சி காணாமல் போகும்'......முடிவு டில்லியில் அந்த முடிவுக்குதான் இந்தத் தொடக்கம்.

நடிக நண்பர் எம். ஜி. இராமச்சந்திரனை நான் பார்த்தது கருணாநிதியால்—அவரோடு பழக நேர்ந்தது அறிஞர் அண்ணாவால். எனக்கு நிதி திரட்டிக் கொள்ள அண்ணா அவரை அழைக்கச் சொன்னார். சில பல நேரங்களில் அவரிடம் உதவிகள் கூடப் பெற்றிருக்கிறேன்.

1953ம் ஆண்டு சேலத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள டாக்டர் கலைஞர் என்னை அழைத்திருந்தார். அப்போது அவர் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் வசனம் எழுதுபவராகப் பணி ஆற்றிக்கொண்டிருந்தார். நான் கலைஞர் வீட்டில்தான் அன்று தங்கி இருந்தேன்.

அப்போது அங்கே ஒரு படத்தில் நடித்துக்கொண்டிருந்தார், நண்பர் எம். ஜி. ஆர். என்னை அவருக்கு அப்போது அறிமுகம் செய்து வைத்தார் டாக்டர் கலைஞர்.

அப்போது நண்பர் எம். ஜி. ஆருக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. கலைஞர் அவருக்கு ஏற்கனவே அறிமுகம் ஆனவர்; அவருக்குப் பிறகு நண்பர் தில்லை வில்லாளனை அவர் பார்த்திருக்கிறார்; அப்போது நான் போயிருந்தேன். இதைக் கொண்டு அவர் ஒரு முடிவுக்கு வந்திருந்தார்.

‘‘உங்கள் கட்சியில் உள்ளவர்கள் அனைவரும் குள்ளமாகத்தான் இருப்பார்களா?’’ என்று கேட்டார் அவர்.

அவ்வளவு தொடர்பு அவருக்குக் கட்சியோடு அப்போது. இப்போது.........? அண்ணாவைக் கொடியிலும் தன்னைக் கோபுரத்திலும் வைத்துக் கொண்டு வலமாகவும் இடமாகவும் தமிழ்நாட்டைச் சுற்றிவருகிறார். கொடி கோபுரத்துக்குக் கட்டுப்பட்டதே தவிர கோபுரம் கொடிக்குக் கட்டுப்பட்டதல்ல என்பது புரியாத சில பாமரர்கள் ஏதோ ஒரு ஆசையாலும் போதையாலும் அவருக்கு ஆதரவு காட்டுகிறார்கள்.

தீட்டிய மரத்திலேயே கூர் பார்ப்பது......இதுபழமொழிதானே தவிர நடைமுறை அல்ல; எல்லோரும் அதைத்தான் செய்வார்கள். ஆனால்......கற்றுக்கொடுத்த ஆசிரியரையே காலை வாரி விடுவது......கண்ணியமுள்ளவர்கள் எண்ணிப் பார்ப்பதற்குக் கூடத் தயங்குவார்கள்.

டாக்டர் கலைஞர் அண்ணாவை ஒரு தொடக்கமாகவும் அதற்குத் தொடர்ச்சியாகத் தன்னையும் ஆக்கிக்கொண்டு உருவானவர். காலப்போக்கில் அண்ணாவே அதை ஏற்றுக் கொண்டு இயங்கினார். அவருக்கு இணையானவர்கள் பலர் இருந்தனர்; ஆனால்......அவர்கள் இணைப்புகளாகத் தங்களை ஆக்கிக்கொள்ளவில்லை. மணி மாலையாக இல்லாமல் மலர் மாலையாக உதிர்ந்தார்கள்.

முதன் முறையாக டாக்டர் கலைஞரின் பிறந்தநாள் விழாவினை அவருடைய நண்பர்கள் ஏற்பாடு செய்தார்கள். அந்த நிகழ்ச்சியில் அண்ணா கலந்துகொண்டு அவரை வாழ்த்த இசைவு தந்தார். இது பலருக்கு ஏமாற்றத்தைத்

தந்ததால் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். விருந்தினர்களைப் போல வேளா வேளைக்குச் சந்திப்பதும் வேலை முடிந்த பிறகு வீடு திரும்புவதுமாக இருந்த அவர்களின் எதிர்ப்பை அண்ணா அலட்சியம் செய்து விட்டார்.

''எத்தனையோபேரில் எதையும் செய்து முடிப்பவராகக் கருணாநிதி ஒருவர்தானே இருக்கிறார். அப்படி உழைக்கும் அவருக்கு இது கூடச் செய்யக் கூடாதா?'' என்று அவர்களுடைய எதிர்ப்பைக் கட்டுப்படுத்திவிட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

எனக்கு முன்னால் பேசிய நண்பர் செங்குட்டுவன் தன்னையும் ஒரு தலைவராக மதித்து இங்கே பேச அழைத்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டு நன்றி கூறினார். அவையடக்கத்துக்காக அவர் அப்படிக் கூறி இருப்பார் என்று நினைக்கிறேன்.

இதைப்பற்றி நான் பேசவேண்டி நேரிட்டதற்குக் காரணம், இதேபோன்ற பிரச்னை ஒன்று சில பல நாட்களுக்கு முன்னால் உருவானது. அண்ணாவின் காலத்துக்குப் பின்னால் கட்சியில் கூட்டுத் தலைமைதான் இருக்கவேண்டும் என்ற கோரிக்கையைச் சிலநண்பர்கள் வெளியிட்டார்கள். உலகத்தில் இல்லாத புதுமையை உருவாக்க நினைத்த அந்த நண்பர்களிடம் அப்போது எனக்கு அனுதாபந்தான் ஏற்பட்டது. அரசியல் அமைப்புகளைக் கூட்டுறவுப் பண்டக சாலையாக ஆக்க நினைக்கிறார்கள்; கூட்டுறவு சாலைகளில் கூட முடிவுகளை நிறைவேற்றும் அதிகாரம் தனி மனிதர் ஒருவருக்குத்தான் தரப்படுகிறது. எல்லோரும் கையெழுத்திட்டு அனுப்புவது மனுவாக ஆகுமே தவிர உத்தரவோ கட்டளையோ ஆகாது.

நான் இங்கே கூடியுள்ள அத்தனை பேருக்கும்—அவர்கள் கட்சியிலே பழைய ஆட்களாக இருந்தாலும் சரி, புதிய ஆட்களாக இருந்தாலும் சரி—நீண்ட நாட்களாக உழைத்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்குள்ள அலுவல்

காரணமாக அனுதாபத்தோடு இருந்தவர்களானாலும் சரி— வரவாயிருந்தாலும் சரி, செலவாக இருந்தாலும் சரி— ஒன்றே ஒன்று சொல்லுகிறேன். ஒரு கட்சிக்கு ஒரு தலைவர்தான் இருக்க முடியும்; பல தலைவர்கள் இருக்க முடியாது. யாராவது ஒரு கட்சித் தொண்டனைப் பார்த்து 'உன் கட்சிக்கு எத்தனைத் தலைவர்கள்?' என்று கேட்பது ஒரு பெண்ணைப் பார்த்து 'உனக்கு எத்தனைக்கணவர்கள்?' என்று கேட்பது போலத்தான் ஆகும். எப்படி ஒரு பெண்ணுக்குப் பல கணவர்கள் இருக்கமாட்டார்களோ அப்படித் தான் ஒரு கட்சிக்குப் பலதலைவர்கள் இருக்க மாட்டார்கள்.

எந்த அரசியல் அமைப்பிலும் ஒரு தலைவர் மறைந்து விட்டால் அவரோடிருந்தவர்கள் ஒதுங்கிவிடுவார்கள்; அல்லது அடுத்து வரும் தலைவனுக்கு உட்படுத்திக்கொள்ளுவார்கள். ஆலோசகர்கள் இருப்பார்கள்; தளபதிகள் இருப்பார்கள்; ஆனல் தலைவர் ஒருவர்தான் இருப்பாரே தவிர இருக்கிற அனைவரும் பங்காளிகளாக மாறி தலைமைப் பதவியில் பங்கு கேட்க மாட்டார்கள்.

ஆகையால் இந்த நிலையிலும் சரி, வேறு எந்த நிலையிலும் சரி திராவிட முன்னேற்றக் கழகத்துக்குத் தலைவர் டாக்டர். கலைஞர்தானே தவிர வேறு எவருமல்ல.

கழகத் தலைவர் டாக்டர் கலைஞரைப்பற்றி எனக்குள்ள கருத்தைத் திட்டவட்டமாக இந்தக் கூட்டத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஏறத்தாழ நாற்பது நாற்பத்தைந்து ஆண்டுகாலத் தமிழக வரலாற்றில் மக்கள் நினைவுகளிலே தங்கிய தலைவர்கள் மூவர். பெரியார்—அண்ணா—கலைஞர்! கள்ளி காளான்கள் படர்ந்து கட்டாந்தரையாக இருந்த தமிழகத்தை ஒழுங்குபடுத்தி அதற்கொரு உயர்வு தந்தவர் பெரியார்; அந்த நிலத்தில் எப்படிப்பட்ட கட்டிடம் அமையவேண்டும் என்று திட்டமிட்டவர் அண்ணா; திட்டமிடப்பட்ட அந்தக் கட்டிடத்தைக் கட்டி முடித்தவர் டாக்டர் கலைஞர்.

அந்தக் கட்டிடத்தைக் கட்டி முடித்தவர் டாக்டர் கலைஞர் என்று நான் சொல்லும்போது எந்த அடிப்படையில் அதைச் சொல்லுகிறீர்கள் என்று பலருக்குக் கேட்கத் தோன்றும்.

அண்ணா திட்டமிட்டிருந்தபோது அந்த நிலத்தில் ஆகாதவர்களும் வேண்டாதவர்களும், எப்படி எப்படி இடம் பிடிக்கலாம் என்று நினைத்தவர்களும், எப்போது குடிசை போடலாம் என்று கணக்குப் போட்டவர்களும் அங்கே இருந்தார்கள். கட்டிடத்தைக் கட்டி ஒரு காம் பௌண்டு சுவரை எழுப்பிய பிறகு இல்லாத ஆசைகளையெல்லாம் வளர்த்துக்கொண்டு வாழ்ந்த அத்தனை எத்தர்களும் இருந்த இடம் தெரியாமல் காணாமல் போய்விட்டனர். ஆகையால்தான் நிலத்தை ஒழுங்குபடுத்திய பெரியாரையும், அந்த நிலத்தில் கட்டிடம் நிர்மாணிக்கத் திட்டமிட்ட அண்ணாவையும், கட்டிடத்தைக் கட்டி முடித்த டாக்டர் கலைஞரையும் வரிசையாக ஒழுங்குபடுத்திக் கூறினேன்.

இயக்குகிற தலைவராக மட்டுமல்ல இணையற்ற முதல்வராகவும் தன்னை ஆக்கிக் காட்டியவர் டாக்டர் கலைஞர். இடர் எந்த உருவிலே நாட்டுக்கு ஏற்பட்டாலும் உடனடியாக அவற்றைப் போக்க எதையும் செய்வதற்கு முன்வருபவர். சென்னையில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டது. ஒரே இரவில் ஊர் முழுவதும் இறைக்கும் குழாய்களைப் பொருத்தி அதன் கொடுமையைக் குறைத்துக் காட்டினார். வறட்சி நிலை வளர்ந்து தமிழக மக்களுக்கு வாட்டமேற்பட்டபோது, தன்னுடைய உதவி கோரி எதிர்பார்த்த திருமதி இந்திரா காந்தி அம்மையாரை நேரில் வரவழைத்துக் காட்டி இருபது கோடி ரூபாய்களை மானியமாகப் பெற்றார். அடுத்த மாநிலக்காரர்கள் இதுகண்டு ஆத்திரப்பட்டனர்; அரசியல் கட்சித் தலைவர்கள் பொறாமையால் பொருமினர். இயற்கை தமிழகத்தை சிலபல நேரங்களில் வஞ்சித்தபோது இயன்றதையெல்லாம் செய்து முடிந்த அளவுக்கு ஒவ்வொன்றை

யும் பகிர்ந்து கொடுத்தாரே எவருக்கும் பாரபட்சம் காட்ட வில்லை

ஊனமுள்ளவர்கள் வாழ்வுக்கு உத்தரவாதம் தந்தவர் நம் முதல்வர். உடலில் ஊனமேற்பட்டவர்கள்—உடல் நலத் துக்கு ஊனம் உண்டானவர்கள் – வாழ்வில் ஏற்பட்ட வறட் சியால் ஊனம் அடைந்தவர்கள்—பொது வாழ்வில் ஈடுபட்டு உழைத்ததால் ஊனத்துக்கு ஆளானவர்கள்—சமுதாய அமைப்பால் ஊனப்படுத்தப்பட்டவர்கள்—பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் ஊனங்களுக்குப் பலியானவர்கள்—விலைவாசி ஏற்றத்தால் அன்றாட வாழ்வில் ஊனப்படுத்தப் பட்டவர்கள்—இந்தப் பிரிவினர் அனைவரும் அவரால் ஆதா யம் பெற்றிருக்கின்றனர்.

ஆனால்.........சோதனைகள் பல அவரைச் சுற்றிச் சுழலு கின்றன. சாதனைகள் பலருடைய வேதனைகளைத் தணித் திருக்கும்போது இந்தச் சோதனைகளுக்கு எப்படி இடம் ஏற் பட்டது? ஏதோ ஒரு பின்னணி கங்கணம் கட்டிக்கொண்டு அவருக்கு எதிராக இயங்கிக் கொண்டிருந்தது.

வரையறுக்கப்பட்ட கருத்துக்களுக்கு எதிராக சிந்தித் தவர்களை ஒரு காலத்தில் வாட்டி வதைத்திருக்கிறது வைதீக உலகம். எரிக்கப்பட்டவர்கள்—கழுவேற்றப்பட்ட வர்கள்—உயிரோடு புதைக்கப்பட்டவர்கள்—மூளைக்கு வேலை கொடுத்தால் வாழ்வுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப் படும் என்ற காலம் ஒன்றிருந்தது. தொடர்ந்த போராட் டங்கள் அந்த நிலையை மாற்றிவிட்டன. எண்ணுகிற உரிமை எல்லோருக்கும் கிடைத்தது. இன்றைய சமு தாயத்தில்.........எவராவது ஒருவருக்கு எதிராக ஒரு அணி உருவாகி வருகிறது என்றால் அந்த மனிதர் எதையும் எண் ணிக்கொண்டு மட்டும் இல்லை, தன் எண்ணத்துக்கேற்ப இயங்கிக் கொண்டிருக்கிறார் என்பதுதான் அதன் பொருள். எண்ணங்கள் உலகில் மனிதன் முறையாகச் சிந்திக்கத் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை ஏராளமாகக்

குவிந்து அத்தனையும் ஏடுகளாக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை எடுத்துப் படிப்போர் யாரோ சிலர்தான்; அவற்றிலேயே மனம் இணைந்திருப்போர் எண்ணிக்கையை எளிதில் எண்ணிக் காட்டிவிடலாம். கருத்துக்களைப் பொருத்தவரை அவைக்கு விமர்சகர்கள் இருப்பார்களே தவிர விரோதிகள் உருவாகமாட்டார்கள். எல்லாக் கருத்துக்களையும் எவரும் ஏற்றுக்கொள்ளுவார்கள்; ஆனால் அவைக்கேற்ப இயங்கமாட்டார்கள். கருத்துக்கள் அனைத்தும் ஒத்தவை அல்ல—மாறுபடுபவை—முரண்படுபவை—மனமாச்சரியங்களை உருவாக்குபவை—ஆனால் வாதங்களை உண்டாக்குபவையே தவிர விரோதங்களை உருவாக்குபவை அல்ல.

ஆனால் செயல்கள்.........! அத்தனை பேரையும் சந்தித்தாக வேண்டிய நிலைக்குக் கவர்ந்துவிடுகின்றன அவை. எப்போதோ—எங்கேயோ—ஆனால், எப்படியும் எவரும் அவைக்கு இடைப்பட்டு விடுகிறார்கள். இவையெல்லாம் ஏற்படக்கூடாது என்று வேண்டிக் கொண்டவர்கள் கண் முன்னாலேயே அவை இயங்கத்தொடங்கினால் ஏமாற்றமும் எரிச்சலும் கலந்து அவர்களை இயங்கத் தூண்டுகின்றன. ஆள் சேர்க்கிறார்கள்—அணி அமைக்கிறார்கள்—ஆதரவு தேடுகிறார்கள்—ஏடுகளைத் துணையாக்கிக்கொண்டு எதிர்ப்பைப் பரப்புகிறார்கள்—ஏமாளிகளை எளிதில் கவர்ந்துவிடுகிறார்கள்—ஆசையிலிருந்து அச்சம்வரை உணர்ச்சிகள் அனைத்தையும் ஆயுதங்களாக்கிப் பயன்படுத்தி அனைவரையும் தம் கட்டுக்குள் வளைத்துவிடும் முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். வயிற்றிலிருந்து வாழ்வுவரை வலிவில்லாமலும் வளர்ச்சியில்லாமலும் இருக்கும் மக்கள் அவர்களுக்கு எளிதில் பலியாகிவிடுகிறார்கள்.

டாக்டர் கலைஞர் மீது கூறப்படுகிற குற்றச்சாட்டுகள் அனைத்தையும் ஒரு காகிதத்தில் குறித்துக்கொண்டு, இவைக்கு விலக்காக நான் அறிந்த—எனக்கு அறிமுகமான—கேள்விப்பட்ட எந்தத் தலைவராவது இருந்திருக்கிறா

என்று சிந்தித்தேன். எனக்குத் தெரிந்தவரை எவரும் இல்லை. அந்தத் தலைவரைப் பின்பற்றியவர்களைக்கூடக் கேட்டிருக்கிறேன். அவைக்கு அவர்கள் அளித்த பதில்:—

"இவையெல்லாம் மனிதனுடைய வலிவற்ற தன்மைகள். (Human Weaknesses.) நாம் அவர்கள் உழைப்பை மட்டுந்தான் கவனிக்க வேண்டுமே தவிர, வாழ்வைப் பரிசீலிக்கக்கூடாது."

இதை நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், ஒரு காலத்தில் செய்தி இதழ்களில் விளம்பரப்படுத்தப்பட்ட அந்தத் தலைவர்களுடைய தூய்மைக்கும் அவர்களிடம் இருந்த தீமைகளுக்கும் உள்ள வேறுபாட்டைச் சுட்டிக் காட்டி நான் விளக்கம் கேட்டபோது யார் யார் மேலே உள்ளபடிச் சொல்லி என்னை ஆறுதல் பெறச் செய்தார்களோ அவர்களே இப்படியெல்லாம் சொல்லி இப்போதைய எதிர்ப்புப்பணிகளை இயக்கிக் கொண்டிருக்கின்றனர்.

சொல்லப்பட்ட குற்றச் சாட்டுகளை எதிர்க்காமலோ மறைக்காமலோ ஏடுகளில் விளக்கங்களை வெளியிட்டும் சட்ட மன்றத்திலேயே எடுத்துப் பேச வாய்ப்பளித்தும் அவைக்குப் பதில் கூறிய ஒரே தலைவர் இந்தியத் துணைக் கண்டத்திலேயே டாக்டர் கலைஞர் ஒருவர்தானே தவிர வேறு எவருமல்ல.

எதிர்ப்புகளைத் தூண்டுபவை உள்ளத்தில் உருவானதொரு எரிச்சலே தவிர, ஊரெல்லாம் பரப்பிவரும் காரணங்கள் அல்ல. எதிர்ப்பில் தீவிரமாக இருப்பவர்களின் பெயர்களை ஒரு காகிதத்தில் குறித்துக்கொண்டு நான் அடுத்துச் சொல்லப் போவதைக் கவனியுங்கள். அப்போது தான் புரியும் அவர்கள் ஏன் எதிர்க்கிறார்கள் என்பது.

நான் ஒரு சில வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கிறேன். இலங்கை, ரோமானியா, ஹங்கேரி, சுவிட்சர்லாந்து, மேற்கு ஜர்மனி—இவைதாம் அந்த நாடுகள்.

அந்த நாடுகளில் நாமாகப் பார்க்க விரும்புபவைக்கும் அந்த நாட்டுக்காரர்கள் நமக்குக் காட்ட விரும்புபவைக் கும் வேறுபாடு உண்டு. வெளிநாடு செல்பவர்கள் தங்கள் தங்கள் மனவுணர்வுகளுக்கு ஏற்ப இயங்குவார்கள். எந் தெந்த விஷயங்களுக்காக இங்கே நாம் ஏங்கித் தவிக்கி ருேமோ அவற்றை எளிதில் தெரிந்து கொள்ளவும் அனுப விக்கவுமே இங்கேயிருந்து போகிறவர்கள் தவிப்பார்கள்— துடிப்பார்கள். அவற்றையே தங்கள் கண்ட காட்சிகளாக வும், கொண்ட கருத்துக்களாகவும் கட்டுரைகள் தீட்டு வதும் அதேபோன்ற மனப்போக்குள்ளவர்கள் அவற்றை விரும்பிப் படிப்பதையும் நாம் இங்கே காணுகிருேம்.

ஆனுல்.........அந்த நாட்டார் இவற்றையெல்லாம் நமக்குக் காட்ட விரும்புவதில்லே. அதற்குக் காரணம் மனித இயல்புகள் இடத்துக்கு இடம் மாறுபடுபவை அல்ல. சில நாடுகளில் அவை கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன; சில நாடுகளில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருக்கின்றன. தட்பவெப்ப மாறுபாடுகள் தான் இந்த வேறுபாட்டுக்குக் காரணம்.

எந்த நாட்டுக்கு நாம் சென்ருலும் அந்த நாட்டார் நான்கு இடங்களே நமக்குக் காட்ட முன் வருகிருர்கள். தொல் பொருள் நிலேயங்கள் (Museum)—பல்கலேக் கழகங் களும் நூல் நிலேயங்களும் (Universities and Libraries)— நாடாளு மன்றம் (Parliament)—தொழிற் கூடங்கள்(Industries).

அவர்கள் யார், எப்படிப்பட்டவர்கள், எந்தெந்த அடிப்படைகளில் உருவாகி இணேந்தவர்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றன அந்தத் தொல்பொருள் நிலே யங்கள்.

அந்த நாட்டு மக்கள் சமுதாயத்தின் வளர்ச்சியை விளக்குகின்றன பல்கலேக் கழகங்களும் நூல் நிலேயங் களும்.

அவர்கள் நாட்டு நிர்வாகம் எப்படிப்பட்டது என்பதை உணர்த்துகின்றன நாடாளுமன்ற அமைப்புகள்.

அவர்களுடைய வாழ்வின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன தொழிற்கூடங்கள்.

ரோமானியா என்பது ஒரு கம்யூனிஸ்டு நாடு. ஆதி முதல் இந்தத் தேதி வரை உலகில் நடந்த அத்தனைப் போர்களும் போராட்டங்களும் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே நடந்தவைதாம் என்று வரலாற்றுக்கு வடிவம் கொடுப்பவர்கள் அவர்கள். அந்த நாட்டுக்கு நாங்கள் சென்றிருந்தோம். அங்கே வாழுகிற மக்கள் 'பண்டைய ரோமானிய பரம்பரையினர் நாங்கள்' என்று பெருமைப்படுகின்றனர். ஜூலியஸ் சீசரின் வழி வந்தோர் என்று சொல்லிக்கொள்ளுவதில் ஒரு சுகம் காணுகின்றனர். அங்கே இருந்த தொல்பொருள் நிலையத்தில் ஜூலியஸ் சீசரும் அவர் காலத்து ஆண்களும் பெண்களும் அணிந்திருந்த ஆடைகளையும் அணிகளையும் எங்களுக்குக் காட்டினர். அவற்றை மட்டும் பார்த்து முடிக்கவே எங்களுக்கு மூன்று மணி நேரத்துக்குமேல் ஆயிற்று.

ஆனால்......இங்கே......கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தில் தோன்றித் தொடர்ந்த நமக்கு......அடுத்த நாட்டானுக்குக் காட்ட இருப்பவை......? இரவல் பெற்ற கடவுள்கள், எண்ணங்கள், இலக்கியங்கள், வரலாற்று 'புருஷர்கள்', ஆதிக்கங்கள்—இவற்றை ஏற்றுக்கொண்டதோடு நாம் நிறுத்திவிடவில்லை; போற்றிப் பூஜை செய்துகொண்டிருக்கிறோம்.

'உங்களுக்கென்று ஒன்றுமே கிடையாதா?' இப்படி அழுத்தமாகக் கேட்பவர்களுக்கு நம்மால் காட்ட முடிந்தவை......காய்ந்த வயிறுகள்—காலாவதியான கருத்துக்கள்—கசங்கிப் போன சிந்தனைகள்—காலத்தால் அழிக்கப்பட்ட கட்டிடங்கள்!

இந்த வெட்கங்கெட்ட நிலைமைக்கு விடுதலை தந்தார் டாக்டர் கலைஞர். பேராசிரியர், மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை காலத்திலிருந்து பன்மொழிப் புலவர் கா. அப்பா துரையார் காலம்வரை தமிழுக்கும் தமிழருக்குமே தங்களைத் தத்தம் செய்துகொண்ட அறிஞர்களின் ஆராய்ச்சி முடிவு களுக்கு வடிவங்களை அமைத்தார். தமிழ்த் தொண்டு புரிந்த அனைவருக்கும் சிலைகளெடுக்கப்பட்டன. தமிழர் வாழ்வைச் செப்பனிட்ட வள்ளுவருக்குக் கோட்டம் அமைக்கப்பட்டது. தமிழர் வாழ்வைச் சித்தரித்த சிலப் பதிகாரத்தை நினைவுபடுத்த பூம்புகார் உருவாக்கப்பட்டது. தமிழர் சமுதாய எழுச்சிக்கு வித்திட்டு வளர்த்த அண்ணா வும் பெரியாரும் தங்களைக் கவனித்துக் கொண்டே வாழ்வை நடத்தும்படி ஊர்தோறும் உணர்த்துகின்றனர்.

'எங்கள் சரக்குகளுக்கு இடமில்லாமல் போய்விடுமே!' இந்த ஏக்கந்தான் எரிச்சலாகி இயங்குகிறது. செய்த நன்மைகளைவிட செல்லாக்காசுகளாக்கப்பட்டவைதான் அவர்களுக்குச் சீற்றத்தை உண்டாக்குகின்றன. தமிழர் சமுதாயத்தின் இதயங்கள் தெளிவுபெற்றால் தங்களுடைய ஆதிக்கம் அற்றுப் போய்விடுமே என்பதால் உண்டான அலறல்தான் இன்று தோன்றியிருக்கும் எதிர்ப்பு.

இந்தியத் துணைக்கண்டம் முழுதும் தங்களுக்கிருக்கும் இணைப்புகளை இயக்குகின்றனர். ஏடுகள் எதிர்ப் பிரசாரம் புரிகின்றன. தொழிலைப் பாதுகாத்துக் கொள்ள நினைப் போரும் தங்களுக்கு ஏற்படும் தொந்தரவுகளிலிருந்து தப்பித்துக்கொள்ள முயல்வோரும் எடுபிடிகளாகி தங்கள் எஜமானர்களுக்கு ஏவல் புரிந்து வருகின்றனர்.

டாக்டர் கலைஞரின் சாதனைகளால் சமுதாயத்தின் வேதனைகள் விலகினாலும் இந்தச் சோதனைகள் அவரைச் சூழ்ந்துகொள்ள முயற்சிக்கின்றன. இயங்குகிற எவருக் கும் ஏற்படுபவைதாம் அவை. இந்த நேரத்தில் எதை எதையோ நினைத்து எண்ணங்களைச் சிதறவிடுவதைக் கட்சித் தோழர்கள் கைவிட வேண்டும். வயப்படுத்த

முயலுவோர் வண்ண வண்ண வலைகளை வீசுவார்கள். இதயங்களை இரும்பாக்கிக் கொள்ளுங்கள். எண்ணங்களை வாட்களாக்கிச் சுழற்றுங்கள். பகை பறந்தோட வேண்டும்.

இப்படிப்பட்டதொரு சூழ்நிலையில் டாக்டர் கலைஞரை உங்கள் முன் நிறுத்தி எடைபோட்டுக் காட்ட விரும்பு கிறேன்.

இந்திய அரசியலை நீங்கள் நன்கு கவனித்திருப்பீர்களோ மாட்டீர்களோ, ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டு காலத் தில் வடக்கு மேற்கைப் பார்த்த காலம் ஒன்றிருந்தது; வடக்கு கிழக்கைப் பார்த்த காலம் ஒன்றிருந்தது; வடக்கு வடக்கையே பார்த்த காலம் ஒன்றிருந்தது. 1969க்குப் பிறகுதான் வடக்குத் தெற்கைப் பார்க்கத் தொடங்கியது.

அதிகார பீடங்களிலும் ஆதிக்கப் பொறுப்புகளிலும் இருந்த மனிதர்களையும் அவர்களுடைய முடிவுகளையும் ஒதுக்கிவிட்டு, அடித்தளத்திலிருக்கும் மக்களுடைய கவனத்தையும் கருத்துக்களையும் மட்டுந்தான் நான் குறிப் பிட்டுக் காட்டுகிறேன். சராசரி மனிதனுடைய கவனம் எப்போது—எப்படி இயங்கிற்று என்பதன் விளக்கந்தான் இது. முஸ்லிம் லீக் வடநாட்டிலே தோன்றி இயங்கியபோது வடக்கு மேற்கைப் பார்க்கத் தொடங்கியது. இந்து மகா சபை ஏற்பட்டு வளர்ந்தபோது வடக்கு வடக்கையே பார்த் துக் கொண்டது. கம்யூனிஸ்ட் கட்சி செழித்துச் செல்வாக் குப் பெற்றபோது வடக்கு கிழக்கைக் கவனிக்க ஆரம்பித் தது. டாக்டர் கலைஞர் ஆட்சி உருவாகி அதற்கு ஒரு மெரு கேறிய பிறகுதான் வடக்கு தெற்கை அறிந்து ஆராயத் தொடங்கிற்று.

இந்திய அரசியலைத் தராசாக்கி ஒரு தட்டில் இந்திரா காந்தி அம்மையாரை வைத்து, அடுத்த தட்டில் வைக்கப் படும் தகுதி எவருக்காவது இருக்கிறதா என்று எல்லா மாநிலங்களிலும் தேடி எல்லாத் தலைவர்களையும் ஆராய்ந் தால், அதற்குள்ள தகுதி டாக்டர் கலைஞர் ஒருவருக்குத்

தான் இருக்கமுடியுமே தவிர வேறு எவருக்கும் இருக்காது. நிலப்பரப்பின் அளவு வேண்டுமானால் இந்திராவைப் பெரிதுபடுத்திக் காட்டுமே தவிர நிலைமைக்கான தகுதிகள் கலைஞருக்குத்தான் அதிகம்.

இதை நான் வேடிக்கைக்காகவோ விளம்பரத்துக் காகவோ சொல்லவில்லை. இந்திராவின் அரசியலுக்கும் கலைஞருடைய அரசியலுக்கும் வேறுபாடு இருக்கிறது. கலைஞர் முன்னாலே நடந்து வந்தவர்; இந்திரா பின்னா லிருந்து தள்ளப்பட்டு வந்தவர். அண்ணா பகுத்தறிவு மன்றத்தைத் திறந்து வைத்துவிட்டு நானும் கலைஞரும் உங்களை எல்லாம் சந்திக்க வந்து கொண்டிருந்தோம். அவர் நடந்து வந்தார்; என்னைப் பின்னால் தொடர்ந்த கூட்டம் தள்ளிக்கொண்டு வந்தது. நானும் முன்னால்தான் நடந்தேன்; அவரும் முன்னால்தான் நடந்தார். அவர் தானாகவே நடந்தார்; நான் தள்ளப்பட்டு நடந்தேன்.

இந்திரா அம்மையார் எதுவாகவும் ஆக்கப்பட்டவரே தவிர அவராக ஆனவர் அல்ல. பொதுவாழ்வில் புகழோங்கி வாழ்ந்த பண்டிதர் ஜவஹர்லால் நேருவின் மகளாகத்தான் உலகம் இந்திராவை மதித்தது. பிறகு காங்கிரஸ் தலைவ ராக ஆக்கப்பட்டார்; அமைச்சராக நியமிக்கப்பட்டார்; முதலமைச்சராக காமராஜர் அவரை ஆக்கிவைத்தார். வாழ் வைப் பெறுவதற்கோ வலிவுபடுவதற்கோ அவருடைய உழைப்போ முயற்சியோ உதவவில்லை. ஆனால் கலைஞர்......பொது வாழ்வில் புகுந்த காலத்திலிருந்து இப்போது முதல்வராக அமர்ந்த காலம்வரை ஒவ்வொரு அங்குலத்திலும் அவருக்கு உழைப்பு இருந்தது; ஒவ்வொரு கட்டத்திலும் சமுதாயம் அவரை அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தது; இப்போது அவருடைய ஒவ்வொரு அசைவும் உற்றுநோக்கப்படுகிறது.

அதனால்தான் கலைஞர் நடந்து வந்தவர்; இந்திரா காந்தி பின்னாலிருந்து தள்ளப்பட்டு வந்தவர் என்று குறிப் பிட்டேன். அவருடைய தந்தையார் நேருவின் நிழலிலே

வாழ்ந்தவர்களும், அவருடைய நினைவுகளைக் கொண்டு தங்களை நிலைநாட்டிக் கொண்டவர்களும் இணைந்து உதவா திருந்தால் இந்திரா இருக்கும் இடம் தெரியாமலே காணுமல் போயிருப்பார்.

இந்திராவுக்குப் பக்கத்திலே அனைத்து இந்திய ரேடியோ இருக்கிறது. கருணாநிதிக்கு......அவர் குரலும் அவர்பால் அன்புள்ளோர் குரலுந்தான் இருக்கின்றன. இந்திராவுக்குப் பக்கத்தில் பெரிய பெரிய இராஜதந்திரி கள் இருக்கின்றனர். எனக்குத் தெரிந்தவரை கலைஞ ருடைய இராஜதந்திரந்தான் கழகத்தைக் காப்பாற்று கிறது. இப்போது குடியரசுத் தலைவர் வெளியிட்டுவரும் உத்தரவுகளின்படி எந்தச் செய்திப் பத்திரிகையும் இந்திராகாந்தி அம்மையாரை செய்திகள் வழியாகவோ அல்லது சிந்தனைகள் வழியாகவோ எதிர்க்கவோ விமர் சிக்கவோ முடியாது; நாடாளுமன்றத்தில் பேசப்படும் எதிர்ப்புப் பேச்சுக்களை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க முடியாது. ஆனால்...எல்லாப் பத்திரிக்கைகளும் கலைஞரைப் பக்கம் பக்கமாகக் கண்டிக்கலாம் என்பதுகூட அல்ல— எழுத்துக்களால் துண்டாடலாம். சட்டமன்றத்தில் எதிர்க் கட்சி நண்பர்கள் தம் இஷ்டத்துக்கு எதெதையோ பேசி விட்டு அவற்றைக் கொட்டை எழுத்துக்களில் பத்திரிகை களில் வெளியிட்டு விஷத்தையும் விஷமத்தையும் பரப்ப லாம்.

இவ்வளவு பாதுகாப்புகள் திருமதி இந்திரா காந்தி அம்மையாருக்கு இருக்கின்றன. ஆனால்......கலைஞருடைய அரசியல் பரமபதப் படத்தைப்போலக் காட்சி அளிக் கிறது. பாம்புகளைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டே ஒவ்வொரு ஏணியாக ஏறித் தீர வேண்டி இருக்கிறது.

இருந்தாலும் டாக்டர் கலைஞருடைய அரசையும் அரசியலையும் எதிர்த்துத்தான் திருமதி இந்திராகாந்தி அம்மையாரின் படை வீடுகள் இயங்கி வருகின்றன.

நாலைந்து மாதங்களுக்கு முன்னால் தமிழக சர்க்கார் செய்திப் பத்திரிக்கைகளில் ஒரு விளம்பரத்தை வெளியிட்டிருந்தது. இதுவரை தமிழக மக்களுக்கு எவை எவை செய்யப்பட்டிருக்கின்றன என்ற பட்டியல்தான் அந்த விளம்பரம். இரண்டு நாட்களுக்குப் பிறகு டில்லி சர்க்கார் தன்னுடைய விளம்பரமாக ஒரு பட்டியலை அதே பத்திரிக்கைகளில் வெளியிட்டது. அதில் என்னென்ன செய்யப் போகிறோம் என்பதை வரிசைப்படுத்தி இருந்தார்கள்.

செய்தவை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய செய்திகளாக ஆகின்றன. ஆனால்...இனிமேல் செய்ய இருப்பவை...அவை வெறும் அறிக்கைகள்—முடிவுகள்—ஆசை காட்டுவதற்காக வீசப்படும் வலைகள்! நாட்டு மக்களுக்குத் தேவைப்படும் நல்ல பணிகளையெல்லாம் திரட்டிச் சேகரித்து உருட்டி உருவாக்கி இருந்தது டில்லிசர்க்கார். பாலை ஒதுக்கி விட்டு அதில் படருகிற ஆடையை மட்டும் எடுத்துக் கொடுத்து, இந்தப் பாலில் தண்ணீரே கலக்கவில்லை என்றால் எவராவது நம்புவார்களா?

இந்திரா அம்மையாரை இதற்காக நான் குறை கூறவில்லை. அவருக்கேற்பட்டிருக்கும் நெருக்கடி அப்படிப் பட்டது. அரசியல் அவரை விரட்டித் துரத்துகிறது. எதையாவது சொல்லி எப்படியாவது தப்பிக்க முடியுமா என்று நினைக்கிறார். இல்லாதவனுக்கு வாழ்வு என்கிறார்—தப்பிக்க முடியவில்லை; ஏழைக்கு ஏற்றம் என்கிறார்—தப்பிக்க முடியவில்லை; உழவனுக்கே நிலம் என்கிறார்—தப்பிக்க முடியவில்லை. அவர் ஓட ஓடத் துரத்துகிறது நாட்டின் அரசியல்—அது துரத்தத் துரத்த ஓடுகிறார் அந்த அம்மையார்.

கலைஞர் சாதித்தவைகளைப் பேசுகிறார்—அம்மையார் நிலைமையைச் சமாளிப்பதற்காகப் பேசுகிறார். எத்தனை விளக்கங்கள்—எப்படிப்பட்ட விநயங்கள்—பேசப்படுகிற ஒழுங்குமுறைகள்—புகுத்தப்படுகிற பொல்லாங்குகள்—மக்களாட்சியை ஒழித்துக் கட்டிவிட்டு மரபுகளையும் இயல்பு

களையும் வெளிநாட்டு நிருபர்களுக்கு விரிவுரை ஆற்றுகிறார். இதைத் தட்டிக் கேட்க எவருமில்லை—எல்லோரும் அவரைத் தாலாட்டிக் கொண்டிருக்கின்றனர்.

டாக்டர் கலைஞர் முதலமைச்சராக ஆவதற்கு முன்னால் தமிழகத்தின் குமுறல்கள் எப்படி எப்படி அமைந்திருந்தன என்பது எல்லோருக்கும் தெரியும். வடக்கு வாழுகிறது—தெற்கு தேய்கிறது; சிந்திரி, சித்தரஞ்சன், பக்ரா நங்கல், பிலாய், துர்காபூர், ரூர்கேலா—இப்படிப்பட்ட பெயர்களையெல்லாம் சொல்லி தமிழ்நாட்டு மக்கள் இடுப்பொடிந்து கிடப்பதை எண்ணித் தேம்பிக் கொண்டிருந்தோம். வடக்கு நமக்கு ஒரு வைரியாக மாறி மிரட்டிக் கொண்டிருந்தது. கலைஞர் ஆட்சிபீடத்தில் ஏறிய பிறகு நிலைமை மாறிவிட்டது. தெற்கு வடக்கைப்பார்த்துப் பொருமிய காலம் மறைந்து வடக்கு தெற்கைப் பார்த்துப் பொருமைப்படுகிறது இப்போது. குடிசைமாற்று வாரியம்-வடக்கே கிடைப்பதை விட மலிவான விலையில் உணவு—தாழ்த்தப்பட்டோருக்குக் கிடைத்துள்ள உயர்வுகள்—உழுபவனுக்கே உரிமையாக்கப்பட்ட நிலங்கள்—ஊனமடைந்தோருக்குச் செய்யப்பட்ட உதவிகள்—எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை இழந்த விதவைகளுக்கு வாழ்வில் உருவாக்கிய பிடிப்பு—விழிகள் பழுதானவர்களுக்கு அளிக்கப்பட்ட ஒளி—அங்கே எண்ணிக்கூடப் பார்க்க முடியாதவை இங்கே ஏற்பட்டதை நினைத்து ஏங்குகிறது வடக்கு. அங்கிருந்து வருபவர்கள் எவராக இருந்தாலும் கலைஞரை வந்தனை செய்கிறார்கள்—இங்கே இருக்கும் எடுபிடிகள் மட்டும் நிந்தனைகளை அள்ளித் தெளிக்கிறார்கள்.

இவ்வளவு விரைவாக இவையெல்லாம் ஏற்பட என்ன காரணம்? டாக்டர் கலைஞர் முதலமைச்சராக நீடிப்பதற்கு முன்னால் பலர் முதலமைச்சராகத் தமிழகத்தை நிர்வகித்திருக்கிறார்கள். ஆச்சாரியார்—ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார்—குமாரசாமி ராஜா—காமராஜர்—பக்தவத்சலம்—இவர்கள் எல்லாம் தமிழகத்தின் முதல்வர்களாக இருந்

தார்கள். இவர்களால் சமுதாயத்தின் தேவைகளைச் சரிவர நிறைவேற்ற இயலவில்லை. அரசியல் சாசனத்தின்படி உருவாக்கப்பட்ட நிர்வாகக் கட்டுப்பாடு மட்டும் இல்லை அதற்குக் காரணம். கட்சி காரணமாகவும் அவர்கள் கட்டுக்குள் இயங்க வேண்டி இருந்ததால் நினைத்தாலுங்கூட நிறைவேற்ற இயலாமல் அவர்கள் நிலை இருந்தது.

அதனால்தான் ''ஆகட்டும் பார்க்கலாம்,'' என்ற சொற்றொடர் அரசாங்க பதிலாக இடம் பெற்றது. இப்போது இருக்கும் எந்த அமைச்சரும், 'ஆகட்டும் பார்க்கலாம்', என்று சொல்வதே இல்லை; 'ஆயிற்று பார்த்தீர்களா!' என்று எதையும் செய்து காட்டுகிறார்கள். இந்த நிலைக்கு என்ன காரணம்? இயங்க வேண்டியவர்களுக்கு இசைவு தர வேண்டியவர் இங்கேயே இருக்கிறார். அதுவும் ...எதுவும் நடக்கவேண்டும் என்று துடிக்கிறாரே தவிர எதையும் நிறுத்தவேண்டும் என்று நினைப்பதில்லை.

சோறு?...காமராஜர், 'ஆகட்டும் பார்க்கலாம்'; கருணாநிதி, 'ஆயிற்று பார்த்தீர்களா!'

வாழ்வா?...காமராஜர், 'ஆகட்டும் பார்க்கலாம்'; கருணாநிதி, 'ஆயிற்று பார்த்தீர்களா!'

குழந்தைகளைக் குறைவாகப் பெறவேண்டுமா?... காமராஜர் 'ஆகட்டும் பார்க்கலாம்'; கருணாநிதி, 'ஆயிற்று பார்த்தீர்களா!'

'ஆகட்டும் பார்க்கலாம்,' என்ற பதிலைக் கேட்டுக் கேட்டு அலுத்துப்போன மக்கள், 'ஆயிற்று பார்த்தீர்களா!' என்ற செயலை உணர்த்தும் சொல்கேட்டு உற்சாகம் அடையச் செய்த தலைவர் டாக்டர் கலைஞர் ஒருவர்தான். அங்கேயே—அப்போதே எதற்கும் முடிவெடுக்கவும், முடிவுக்கு வந்தவைகளை முடித்துக்காட்டவும் தேவையான ஆற்றல் எப்படியோ அவரிடம் நிறைந்து எப்போதும் கைகொடுக்கிறது அவருக்கு.

இத்தனை ஆற்றல்களையும் ஆற்றப்பட்டவையையும் கேட்ட பிறகு நமக்கு ஒரு ஆசை சாதாரணமாக உண்

டாகும். எனக்கே கூட ஏற்பட்டிருக்கிறது அது. அண்ணா மறைந்த சிலபல நாட்களில், 'அவரைப் போல இவரும் இருக்கலாமே,' என்று ஒப்பிட்டுப் பார்ப்பதில் நம் உள்ளங்கள் ஈடுபட்டிருந்தன. 'இருக்கலாமே' என்ற அடக்கமான அந்தச் சொல், 'இருக்கக் கூடாதா?' என்ற இடக்கான உருவெடுத்து, 'ஏன் இருக்க வில்லை?' என்ற எதிர்ப்புக் குரலாகத் தன்னை உருமாற்றிக் கொண்டது. தெளிவு எப்போதும் திடீரென ஏற்படுவதில்லை.

உலக வரலாற்றில் எந்த ஒரு தலைவரும் அதற்கு முன் இருந்தவர்களைப்போல இருந்ததில்லை; இருக்கவும் முடியாது; அப்படி இருந்தால் இயங்கவே முடியாது. எவரிடமிருந்து எதை எதிர்பார்க்க வேண்டும் என்று சமுதாயம் விரும்புகிறதோ அதன்படித்தான் அவர் நடந்துகொள்ள வேண்டும்; அதற்கு ஏமாற்றம் தந்தால் ஏற்கனவே உருவான மதிப்பு இல்லாதொழிந்துவிடும். வரையறுப்பவரைப் போல நிறைவேற்றுபவர் நடந்துகொள்ளக் கூடாது; வழி காட்டுபவரைப்போல வகைப்படுத்துபவர் இருக்க நினைக்கக்கூடாது. ஏற்றிருக்கும் பொறுப்புகள் மட்டுமல்ல காலத்துக்கு காலம் உருவாகிற முரண்பாடுகளும் சூழ்நிலைக்குச் சூழ்நிலை அமைந்து விடுகிற மாறுபாடுகளும் சமுதாயத்தை நடத்திச் செல்லுகிற தலைவர்களை அவற்றுக்கேற்ப இயங்கத் தூண்டும்; எவருடைய உருவாகவும் இருக்கச் செய்யாது.

இராஜராஜ சோழனைப்போல இராஜேந்திர சோழன் இருந்ததில்லை; இராஜேந்திர சோழனைப்போலக் கரிகால் பெருவளவன் இருந்ததில்லை. கார்ல் மார்க்ஸைப்போல லெனின் இருந்ததில்லை; லெனினைப்போல ஸ்டாலின் இருந்ததில்லை; ஸ்டாலினைப் போல குருஷேவ் இருந்ததில்லை. குருஷேவைப்போல பிரச்னேவ் இருக்கவில்லை. காந்தியைப்போல நேரு இருந்தாரா? நேருவைப்போல லால்பகதூர் சாஸ்திரி இருந்தாரா? லால்பகதூர் சாஸ்திரியைப் போல இருக்கக்கூடத் தேவை யில்லை,

அவருடைய தகப்பனுர் ஜவஹர்லால் நேருவைப் போலவாவது இந்திரா காந்தி அம்மையார் இருக்கிருரா? இந்தக் காலத்தில் பெற்ற அப்பனைப் போலப் பிள்ளைகளே இருப்பதில்லை. பெரியாரைப் போல அண்ணு இல்லாத போது அண்ணுவைப் போல டாக்டர் கலைஞர் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் என்ன நியாயம் இருக்கிறது?

அவரைப் போல இவர் ஏன் இல்லை என்று கேட்பதை விட அவரளவு நன்மை சமுதாயத்துக்கு இவரால் கிடைக்கிறதா என்று பார்ப்பதுதான் புத்திசாலித்தனம். அண்ணுவுக்கிருந்த தயக்கத்தைக் கூடக் காட்டாமல் ஒவ்வொன்றையும் உடனுக்குடன் நிறைவேற்றி சமுதாயத்துக்கு நிறைவு தந்திருக்கிருர் டாக்டர் கலைஞர்.

அடுத்தவர்களுக்கெல்லாம் அவர் செய்த நன்மைகளை அனைத்தையும் நான் சொல்லிய பிறகு எனக்கு அவர் செய்த உதவிகளைக் குறிப்பிடாமல் என் பேச்சை முடிக்க நான் விரும்பவில்லை. நான் மனந்திறந்து பேசுகிறேன். எந்த அளவுக்கு அவரை நான் திட்டியிருந்தாலும் எனக்குக் கஷ்டம் ஏற்பட்ட போது கை கொடுத்த கை அவருடைய கைதான்.

அகவிலை உயர்வைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகம் நாடெங்கும் நடத்திய அரசாங்க அலுவலக மறியலில் நான் குடந்தையில் கலந்து கொண்டேன். என்னைக் கைது செய்ய உத்தரவிட்ட மாஜிஸ்ட்ரேட் பதினைந்து நாட்கள் 'ரிமாண்டில்' அனைவரையும் வைக்க உத்தரவிட்டபோது, ''உங்களுக்கு வேறு ஏதாவது வேண்டுமா?'' என்று கேட்டார். எதற்காக அதை அப்போது கேட்டார் என்பது அதுவரை சிறை சென்று பழகாத எனக்குப் புரியவில்லை. சிறைச்சாலைக்குள் அடைக்கப்பட்ட பிறகுதான் அதன் பொருளைப் புரிந்துகொண்டேன். குடந்தைத் தொகுதியில் நான் நாடாளும் மன்றத் தேர்தலில் போட்டியிட்டது அவருக்குத் தெரியுமாதலால் எனக்கு

அதிகமான வசதிகள் கிடைக்கும்படிச் செய்ய நினைத்தார் போலிருக்கிறது. அது எனக்கு அப்போது புரிய வில்லையாகையால் 'பி' வகுப்புக்கு அனுப்பப்படாமல் 'சி' வகுப்பிலேயே அடைக்கப்பட்டேன்.

திருச்சி மத்திய சிறையில் என்னோடு டாக்டர் கலைஞரும் 'பி' வகுப்பில் இருந்தார். பதினைந்து நாள் 'ரிமாண்ட்' காலம் முடிந்ததும் தண்டனைக்காக மறுபடியும் குடந்தைக்கு எங்களை அழைத்துச் சென்றார்கள். அப்போது டாக்டர் கலைஞர் குடந்தை நண்பர் கோ. சி. மணியிடம் சொல்லி, நல்ல வழக்கறிஞர் ஒருவரை ஏற்பாடு செய்யச் சொல்லி எப்படியும் எனக்கு 'பி' வகுப்பு கிடைக்கும்படிச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தண்டிக்கப்படாத போது 'சி' வகுப்பில் அடைக்கப்பட்ட நான் தண்டிக்கப்பட்ட பிறகு 'பி' வகுப்புக்கு அனுப்பப்பட்டேன். எனக்குத் தெரிவிக்காமலே அவர் செய்த ஏற்பாடு இது. நான் அவரை இதற்காகக் கேட்டுக் கொள்ளவுமில்லை—அவர் அதை என்னிடம் சொல்லவுமில்லை.

எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் என் இதயத்தால் இழக்க முடியாத நிகழ்ச்சி ஒன்று என் நினைவுகளில் நிரந்தரமாகத் தங்கி இருக்கிறது. நான் வேலையை இழந்தேன். கட்சி நிகழ்ச்சிகளுக்குக் காலத்தை ஒதுக்குவது என்ற நினைவு நிறைவேற வாய்ப்பில்லாததால் தவித்தது. வருமானத்துக்கு வழியில்லை. சென்னைக்குப் போனேன்—ஒரு வார இதழில் ஆசிரியனானேன். அதை நடத்தியவர்களோடு ஒத்துப் போகிற நிலை நீடிக்க வில்லை. ஒரு மாடி வீட்டின் மேலே ஓலை வேயப்பட்டிருந்த இடத்தில் என் குடும்பத்தோடு தங்கி இருந்தேன். அப்போது என் தாயார் மரணப் படுக்கையிலே இருந்தார்கள். அவர்கள் செத்துப் போனால் நான் மாடியிலிருந்து கீழே இறங்கித் தெருவில் துணிவிரித்துப் பணம் திரட்ட வேண்டியதுதான். அப்படி இருந்தது என் பொருளாதார நிலை அப்போது.

உடனே டாக்டர் கலைஞருக்கு தொலைபேசி வழியாகச் செய்தியைத் தெரிவித்தேன். வந்தார். நான்கு நாட்

களும் என் கூடவே இருந்து என் தாயாரின் கடைசி காரியத்தையும் செய்து முடித்து விட்டு, அதற்கு மேலும் ஆகிற செலவுக்கு காசு கொடுத்து விட்டு வீட்டுக்குத் திரும்பினுர்.

எனக்கு அண்ணன் தம்பிகள் இருக்கிருர்கள்; சுற்றத்தார் இருக்கிருர்கள்; என் தாயாரால் வாழ்வு பெற்று வளமை அடைந்தவர்கள் இருக்கிருர்கள்; நண்பர்கள் இருக்கிருர்கள்; அவர்கள் எல்லாம்......

அதை மட்டும் என் வாழ்நாள் முழுதும் மறக்க மாட்டேன். அந்த நேரத்தில் ஒரு மனிதரைப் பார்த்தேன்; வயதில் மூத்தவராக இருந்தால் என் அண்ணனேப் பார்த்தேன்; வயதில் குறைந்தவராக இருந்தால் என் தம்பியைப் பார்த்தேன்.

நான் அவரைத் திட்டியிருக்கலாம்; அவரோடு சண்டை போட்டிருக்கலாம்; ஆனுல் அன்று அவர் செய்த செயலே என்றும் மறக்க மாட்டேன்.

இன்ெனுரு நிகழ்ச்சி என் நினேவுக்கு வருகிறது. நான் சென்னே மருத்துவ மனேயில் நோய்வாய்ப்பட்டுப் படுத்திருந்தேன். ஓரிரு நாட்களாகியும் எவரும் என்னே வந்து பார்க்கவில்லே. செய்தி இதழில் கூட இதைப்பற்றித் தெரிவித்துங்கூட ஒருவரையும் காணுேமே என்ற கவலே தோன்றியது எனக்கு. தொலேபேசியை எடுத்தேன். டாக்டர் கலேஞரோடு பேசினேன். அப்போது அவர் அமைச்சராக இருந்தார். 'நான் மருத்துவமனேயில் படுத்திருக்கிறேனே தெரியுமா?' என்று கேட்டேன். 'தெரியாதே' என்ருர். 'இப்போது தெரிந்து கொள்ளுங்கள்; நான் மருத்துவ மனேயிலே படுத்திருக்கிறேன். எப்போது வந்து பார்க்கப் போகிறீர்கள்?' என்று கேட்டேன். 'நாளே மறுநாள் வருகிறேன்,' என்று சொன்னுர் என்று நினேக்கிறேன். 'இல்லே, நாளேயே வாருங்கள். காரணம், ஒரு மந்திரி என்னே வந்து பார்த்துவிட்டுப் போனுல் எனக்குக் கிடைக்

கும் மரியாதையே தனிப்பட்டதாக இருக்கும்,' என்றேன் நான்.

அடுத்த நாள் அந்த மருத்துவமனையையே படாதபாடு படுத்தி விட்டார். தொலைபேசி வழியாகக் காவல்துறையினருக்குத் தனியாகத் தன் வருகையைத் தெரிவித்து, அதே நேரத்தில் மருத்துவமனை அதிகாரிக்கும் செய்தியைத் தெரிவித்து அவர் வருவதற்குமுன் அனைவரும் தயாராக இருக்கும்படிச் செய்திருந்தார். 'யார் அந்த டி. கே. சீனிவாசன்?'என்று அவர்கள் எல்லாம் நான் படுத்திருக்கும் வார்டைத் தேடத் தொடங்கிவிட்டனர். அத்தனை நோயாளிகளும் இந்த அமர்க்களத்தால், இந்தப் பேர் கொண்ட நான் ஒருவன் அங்கே இருப்பதைப் புரிந்து கொண்டார்கள். அவர் வந்தார்—என்னைப் பார்த்தார்—திரும்பிப் போனார். மரியாதையும் வந்தது—ஆனால் திரும்பப் போய் விடாமல் இறுதிவரை என்னோடு தங்கி இருந்தது.

அதேபோல் இப்போது ஒரு வாரத்துக்கு முன்னால் மருத்துவமனையில் படுத்திருந்தேன். எதிர்பாராத விதமாக என் முன் வந்து நின்றார். 'எங்கே வந்தீர்கள்?' என்று கேட்டேன். 'உங்கள் உடலுக்கு நலிவாமே!' என்றார். 'நான் எவருக்கும் இதைத் தெரிவிக்கவில்லையே', என்றேன். 'செய்தி பத்திரிகைகளில் வெளியாகி இருந்தது', என்றார்.

நான் எந்த அளவுக்கு அவரை எதிர்த்திருந்தாலும் எவ்வளவு வைதிருந்தாலும் எனக்கென்று எதுவும் ஏற்படும்போது அவர்தான் தானாகவே முன்வந்து எந்த உதவியையும் செய்திருக்கிறார்.

இவைக்காக நான் அவரைப் பாராட்டவில்லை—அது எப்போதும் என் பழக்கமல்ல. தரமும் தகுதியும் உள்ளவர் என்பதால் மட்டுமல்ல—தமிழையும் தமிழரையும் தன் உணர்வாக நினைப்பவர், அவைக்காக உழைப்பவர் என்பதால்தான் அவரைப் பாராட்டுகிறேன்.

தமிழக அரசியல் வாதிகளுக்கு ஒன்றே ஒன்றைக் கூறுகிறேன். மறந்து விடாதீர்கள். எந்தக் கட்சியாக இருந்தாலும்—பழைய காங்கிரசாக இருந்தாலும் புதிய காங்கிரசாக இருந்தாலும்—திராவிடர் கழகமாக இருந்தாலும் கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும்—எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, நினைவில் வைத்துக்கொள்ள வேண்டுகிறேன். 'கலைஞர் தலைமையை தமிழகம் இன்று அலட்சியம் செய்தால் ஒரு கழைக் கூத்தாடியைத் தலைவராகப் பெற்று கடைகெட்ட நிலைமைக்கு உள்ளாக வேண்டி வரும்' என்று கூறி விடை பெறுகிறேன்.



வானொலியில் தத்துவமேதை

# வாழ்வு உணர்த்துகிறது

(சென்னை வானொலியில் 'குறளமுதம்' தொடரில் ஒலிபரப்பப்பட்ட மூன்று குறள் விளக்கங்கள்.)

## 1

'எண்பொருள் ஆகச் செலச்சொல்லித் தான் பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு.'

அறிவு மனிதனுக்கு மட்டுந்தான் இருக்கிறது என்ற எண்ணத்தை இன்றைய விஞ்ஞான வளர்ச்சி மாற்றிவிட்டது. இயங்குகிற உயிரினங்களில் பெரும்பாலானவை அறிவைப் பெற்றிருக்கின்றன. அறிவின் அளவில் வேண்டுமானுல் கூடுதலோ குறைவோ இருக்கலாமே தவிர மனிதனைத் தவிர மற்ற எவைக்கும் அடியோடு அறிவே இல்லையென்று எவரும் எண்ணிவிடக் கூடாது.

தேவைகளைத் தேடவும் தேடியவற்றைக் கொண்டு வாழவும் அறிவு அனைத்து உயிர்களுக்கும் பயன்படுகிறது.

மனிதனுக்குள்ள அறிவுக்கோ மாபெரும் பொறுப்பு இருக்கிறது; மற்றவைக்கு அது இல்லை. மனிதன் இயக்குபவன்; மற்றவை இயங்குபவை. அதுமட்டுமல்ல, மனிதன் தன் அறிவால் அனைத்தையும் இயக்குபவன்; மற்றவை உணர்வுகளால் இயங்குபவை.

இருக்கின்ற அறிவைக் கொண்டு இருந்துவிட்டுப் போகிறவனல்ல மனிதன். இயக்குகிற நிலை எவருக்கு ஏற்பட்டா

லும் அதற்கென்று தனிப்பட்ட பயிற்சி தேவை. இயங்கு பவைக்கு அது தேவையில்லை. பழக்கமே பயிற்சியாகி விடுகிறது.

அறிவுக்குள்ள பல பணிகளில் கேட்பதும் சொல்லு வதும் ஒன்று. இந்த இரண்டுமே தனிமனிதனுக்கும் சமு தாயத்துக்கும் உள்ள இணைப்புகளாக இருக்கின்றன. யாரிடமோ கேட்கிறோம். எவருக்கோ சொல்லுகிறோம். கேட்பதை நாம் புரிந்துகொண்டால் ஒருவர் இருவராகி றோம்; நாம் சொல்லுவதை அடுத்தவர் புரிந்துகொண் டால் இருவர் மூவராகிறோம். நம்மிடம் இல்லாததை நாம் ஏற்றுக் கொள்ளும்போதும், நம்மிடம் உள்ளதை மற்றவர் ஏற்றுக்கொள்ளும்போதும் ஒரு பிணைப்பு ஏற்படுகிறது. அறிவுக்கு இந்தத் திறமை ஏற்பட்டால் சமுதாய உணர்வுக் கும் ஒற்றுமைக்கும் பெரிதும் பயன்படும்.

சொல்லுவதை அப்படியே பதியவைத்துக் கொள்ளு வது ஒலிப்பதிவு இயந்திரம்; பதிந்திருப்பதை அப்படியே வெளிப்படுத்துவது ஒலிபெருக்கிக் கருவி. மனித அறிவு ஒலிப்பதிவு இயந்திரமாகவும் இருக்கக்கூடாது; ஒலிபெருக் கிக் கருவியாகவும் இருக்கக்கூடாது.

சேகரிப்பதற்குச் சிரமப்படவேண்டும். அதை பகுத்துத் தொகுத்து முடிவெடுத்து ஏற்போருக்கு ஏற்றபடி வெளியிட வேண்டும்; அதற்கும் சிரமம் தேவை.

வயிறு பசித்தால் எதிரே இருப்பதை எல்லாம் எவரும் எடுத்துச் சாப்பிடமாட்டார்கள். தகுந்ததைத் தேர்ந் தெடுப்பார்கள். தேர்ந்தெடுத்ததையும் அப்படியே எடுத்து விழுங்குவதில்லை. அறுத்தோ சமைத்தோ சாறெடுத்தோ சாப்பிடுகிறோம். அப்படியே விழுங்காமல் பல்லால் அரைத்து உமிழ்நீரால் நனைத்துப் பதமாக்கி உள்ளே அனுப்புகிறோம். நாம் உள்ளே அனுப்பியதை வயிறும் அப்படியே எல்லா அங்கங்களுக்கும் அனுப்பி வைப்ப தில்லை. தேவைப்படுபவைகளை மட்டும் பிரித்து உபயோகப்

படும் அளவுக்கு உருமாற்றி அங்கங்களுக்கு அனுப்பி வைக்கிறது; தேவை இல்லாதவை ஒதுக்கப்படுகின்றன.

உடலுக்குமட்டும் பயன்படும் வயிற்றுக்கே இத்தனைப் பொறுப்பு என்றால் உலகுக்குப் பயன்படும் அறிவுக்கு எத்தனை மடங்கு அதிகப் பொறுப்பு இருக்க வேண்டும்?

'நீ சொல்லுவது எனக்குப் புரியவில்லை,' என்பது சோம்பல்.

'நான் சொல்லுவது உனக்குப் புரியாது,' என்பது ஆணவம்.

அறிவுக்குச் சோம்பலும் கூடாது; ஆணவமும் கூடாது. அடுத்தவர் சொல்லுபவைகளின் அடிப்படைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். கேட்பவர் புரிந்து கொள்ளும்படி சொல்லும் திறமை வேண்டும்.

இதைத்தான் வள்ளுவர்,

'எண்பொருள் ஆகச் செலச்சொல்லி தான் பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு',

என்றார்.

நன்றி. 'வானொலி.'

# 2

'உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு'

மனித அறிவு ஒரு சக்தியுள்ள கருவி. அப்படிப்பட்ட கருவியைப் பெற்றிருப்பதனுல்தான் மனிதனுல்மட்டும் தன்னுடைய வாழ்வை எளிதாக்கிக்கொள்ள முடிந்தது. எதிரே இருக்கும் வரம்புக்குள்மட்டும் இயங்கும் இயந்திர மாக அவன் வாழ்வு இருப்பதில்லை. வையகம் முழுதும் பரவி இப்பொழுது வானகம் நோக்கியும் உயர்ந்து வருகிறது.

எல்லாவிதச் சக்திகளையும் கட்டுப்படுத்திக் கையாளுகிற திறமையை அளிக்கும் மனித அறிவு எப்படிப் பயன்பட வேண்டும்? பெரும் செயல்களுக்கு அது உதவ வேண்டும். சிறிய செயல்களுக்கோ குறுகிய எல்லைகளிலோ மனித அறிவு ஆதிக்கஞ் செலுத்துவது அறிவை அவமானப் படுத்துவதாகும்.

மனிதனே தன்னுடைய அறிவின் பரப்பை எப்போதும் குறுக்கிக்கொள்ளுகிருன். தான் வளரவும் தன்னைச் சார்ந்தவர்கள் வாழவும் தன் அறிவைப் பயன்படுத்துகிருன். எல்லை குறுகும்போது எண்ணங்களும் குறுகி விடுகின்றன. சிந்தனை ஒரு சிறு வட்டாரத்துக்குள்ளே சிறைப்படுத்தப்படுகிறது. பயன்படுத்தப்படாத அறிவின் பகுதிகள் பழுதாகிப் போகின்றன. இதன் விளைவு......? பொதுவான உண்மைகள், அடிப்படைப் பண்புகள், இயற்கையின் தன்மைகள் இவைகளெல்லாம் அவனுக்குப் புரியாமல் போய்விடுகின்றன. அதன் காரணமாக நிகழ்ச்சிகளின் கைப்பாவையாக இயங்குகிற நிலை அவனுக்கு ஏற்படுகிறது. தோல்வியால்

துவண்டு போகிருன்; வெற்றி அவனிடம் வெறியை உண்டாக்குகிறது.

இவனுக ஏற்படுத்திக்கொண்ட சிறையிலிருந்து அறிவை விடுவித்து பரந்த சமுதாய நோக்கை மனிதன் அதற்கு அளிக்கவேண்டும். அனைத்துச் சமுதாயத்தையும் முன்னிறுத்தி அதில் தன்னை ஒரு அங்கமாக மனிதன் கருதத் தொடங்கினல் இயக்கங்களின் இயல்புகளும் அடிப்படைகளும் அவனுடைய அறிவுக்குப் புரியும். இவற்றைப் புரிந்தவன் தன்னை எதிலும் இழப்பதில்லை; புரியாதவன் இடைப்படும் ஒவ்வொன்றிலும் தன்னை இழந்துவிடுகிருன்.

நன்குணர்ந்த மருத்துவனுக்கு நோயாளியின்மீது அன்போ அருவெறுப்போ ஏற்படுவதில்லை. மருத்துவப் படிப்பிலேயே உடலைப்பற்றிய போதுமான அறிவைப் புகட்டி விடுகிருர்கள். அருவெறுப்பு அடையாமல் நோயாளியைப் பரிசோதிக்கிருன்; அவசரப்படாமல் மருத்துவம் செய்கிருன். இறுதி வெற்றி தோல்வியைப்பற்றி எந்தவிதக் கவலையும் அவனுக்கு ஏற்படுவதில்லை. அதேபோல உலகத்தோடு அறிவு தழுவி இருந்தால் தன்னந்தனியாகப் பிரித்துப்பார்க்கிற எண்ணமோ பிரிவு பிரிவாக எதையும் அனுபவிக்கிற நிலைமையோ அதற்கு ஏற்படாது.

அறிவு தேக்கிவைக்கப்படக் கூடாது; அதன் எல்லைகளைக் குறுக்கிவிடவும் கூடாது. உலகம் முழுதும் அதற்குக் களமாக அமையவேண்டும். அப்போதுதான் சிறுசிறு பகுதிகளில் ஏற்படும் பாதிப்புகள் அதைத் தாக்கா.

எந்தக் காரியத்தையும் ஏற்று நடத்துபவர்கள் இடையில் குறுக்கிடும் எதனுலும் பாதிக்கப்படமாட்டார்கள். அவர்களுடைய கவனமெல்லாம் முடிவின்மேல் இருக்குமே தவிர இடையில் ஏற்படுபவைமீது திரும்பாது. முழுச் சமுதாயத்தின் வளர்ச்சியிலும் மலர்ச்சியிலும் அறிவு ஈடுபட்டால் அது அந்த குறிக்கோளை நிறைவேற்றுவதில்

முனைந்திருக்குமே தவிர தன்னை இழக்கவோ மறக்கவோ செய்யாது. இழக்கும்போதும் மறக்கும்போதும் நிகழ்பவை தாம் மலர்தலும் கூம்பலும்.

அதனால் தான் வள்ளுவர்,

'உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு'

என்றார்.

நன்றி. 'வானொலி.'

# 3

'எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு'

மனிதர்கள் ஏதோ ஒரு அத்துவானக் காட்டில், ஆள் நடமாட்டமில்லாத இடத்தில் தோன்றியவர்கள் அல்ல; சமுதாயத்தில் ஏற்படும் தொடர்புகளின் விளைவுகள். மனிதனுடைய தோற்றமே தொடர்பின் விளைவுதான். தோன்றிய பிறகுகூட மனிதன் ஊன்றிய செடிபோல வளருவதில்லை. சமுதாயத்தின் ஒத்துழைப்பால்தான் வளருகிறான். அவனுடைய ஒவ்வொரு அசைவுக்கும் சமுதாயத்தின் ஏதோ ஒரு பகுதியிலிருந்து ஒத்துழைப்பு கிடைக்கிறது. வளர்ந்தவன் வாழ்வதுகூட சமுதாய உதவியால்தான். பசியைப் போக்க உழவனும், மானத்தைக் காக்க நெசவாளியும், தட்பவெப்பங்களிலிருந்து பாதுகாக்கக் கொத்தனும், இன்னும் ஏற்படுகின்ற தேவைகளுக்கெல்லாம் அவைக்கென்றிருப்போரும் துணைபுரிகின்றனர்.

அதுமட்டுமல்ல. சமுதாயத்தைவிட்டுப் பிரிந்து தனித்திருப்போர் வாழ்வதில்லை—இருக்கிறார்கள். இஷ்டத்துக்கு அலைகிறார்கள்; தென்பட்டதைத் தின்கிறார்கள்; தினவெடுத்தால் தீர்த்துக் கொள்ளுகிறார்கள். இயக்கம் வாழ்வாகாது. ஒரு சில உணர்ச்சிகள் தலையெடுக்கும்போது அவற்றைத் தணித்துக் கொள்ளுவதும் வாழ்வாகாது. உடம்பில் நமைச்சல் ஏற்படுகிறது; சொரிந்து கொள்ளுகிறோம்; சுகமாகவும் இருக்கிறது. அது வாழ்வாகி விடுகிறதா?

சிலர் ஆழ்கடலைப் பார்த்துக்கொண்டிருந்தால் அமைதி ஏற்படுகிறது என்கிறார்கள். இன்னும் சிலர் விண்ணிலிருக்கும் தாரகைகள் எண்ணங்களிலே ஒளி விடுகின்றன என்கிறார்கள். வேறு சிலர் வட்டமிடும் பறவைகளிலும் வானில் மிதக்கும் மேகங்களிலும் வயப்பட்டு விடுகிறார்கள். தன்னை மறந்த நிலைகள் இவை. எத்தனை நாழிகைக்குத் தன்னை மறந்திருக்க முடியும்? தன்னை நினைக்கும்போது சமுதாயத் தொடர்பு தேவைப்படுகிறது.

நம் வாழ்வு என்பது ஒரு தோணி. அது மிதக்க வேண்டிய பரப்பு சமுதாயந்தான். சமுதாய உணர்வற்று வாழுவது வாழ்வாகாது. நம்மை உருவாக்கிய, நமக்கு உரமூட்டிய சமுதாயத்தோடு ஒன்றியிருக்கக் கடமைப் பட்டது நம்முடைய அறிவு.

'சமுதாயத்தின் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. அத்தோடு எப்படி ஒத்துப் போவது?'—இப்படிக் கேட்கும் சிலர் இருக்கின்றனர்.

சில பழக்கங்களுக்கும் நடைமுறைகளுக்கும் எண்ணங் களுக்கும் சமுதாயம் கட்டுப்பட்டிருக்கிறது. அவற்றில் அதற்குள்ள நம்பிக்கை ஆழ வேர்விட்டிருக்கிறது. அதோடு இணைந்து பழகி மெள்ள மெள்ளத்தான் அவற்றை நீக்க வேண்டும். இணைந்து பழகாவிட்டால் நம்மீது சமு தாயத்துக்கு நம்பிக்கை ஏற்படாது. நம்பிக்கை இல்லா விட்டால் நம் சொல்லுக்குக் கட்டுப்படாது.

'என் அறிவு இந்த உலகத்தையே நம்ப வேண்டாம் என்கிறது. இன்னொரு உலகுக்கு அச்சாரம் கொடுக்கச் சொல்லுகிறது. நான் சமுதாயத்துக்கு அப்பாற்பட்ட வன்'—இப்படியெல்லாம் நினைப்பவன் ஏதும் அறியாத வன். சமுதாய உணர்வு அற்றவன். தூக்கிக் கொஞ்சுகிற பருவத்திலிருந்து தூக்கிப் போடுகிற காலம் வரை அவ னுக்கு உறுதுணையாக இருக்கும் சமுதாயத்தை தூக்கி எறிய நினைப்பது அறியாமை.

சிலர், 'இந்தச் சமுதாயத்திலே குறை இருக்கிறது. அதை ஒழித்துக்கட்ட வேண்டும்,' என்கின்றனர். அதே வெறுப்பு சமுதாயத்துக்கு இவர்கள் மேல் ஏற்பட்டிருந்தால் பிறந்தபோதே கழுத்தை நெரித்துக் கொன்றிருக்கும்.

அதோடு ஒத்துப்போனுல்தான் சமுதாயத்தைத் திருத்த முடியும். எதிர்ப்புக்கு எந்த இதயமும் கட்டுப்படுவதில்லே.

சமுதாயத்தை ஒதுக்குபவன் பித்தன்

சமுதாயததிலிருந்து ஒதுங்குபவன் எத்தன்.

அறிவுக்குப் பித்துப்பிடிக்கவும் கூடாது; அது எத்து வேலேகளேச் செய்வதும் கூடாது.

எப்படி உலகம் இருக்கிறதோ அதை ஒட்டி நம் அறிவும் இருக்கவேண்டும்; அதுவும் உலகத்தோடு ஒட்டி இருக்கவேண்டும்; இயங்கவும் வேண்டும்.

அதனுல்தான் வள்ளுவர்,

'எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு'

என்ருர்.

—நன்றி. 'வானெலி.'

# உணர்வுகளும் உண்மைகளும்

வழித்துணை நண்பர்களாக இணைந்து காலப்போக்கில் திராவிட முன்னேற்றகக் கழகத்தின் வரம்புக்குள் வந்தவர்களுக்கு நம்முடைய தலைவர்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதால் என்னை விரைவுபடுத்தி இந்தக் கட்டுரைத் தொகுப்பை வெளியிடச் செய்திருக்கிறார் நண்பர் வீ. இராஜகோபாலன் M.A., B. O. L. அவர் எனக்கு நண்பரானதற்குக் காரணமே பாவத்துக்குப் பலியாக மறுத்த காரணத்தால் சோகத்துக்கு இரையானவர் என்பதுதான்.

தொன்றுதொட்டு இன்றுவரை கால ஓட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் தங்களைக் காட்டிக் கொள்ளுகிற—ஒன்றுக்கொன்று தொடர்புள்ள—நிகழ்ச்சிகளின் விவரங்களோ விளக்கங்களோ கொண்டது அல்ல இந்தத் தொகுப்பு. ஒரு சுருக்கந்தான்—ஆர்வம் ஏற்பட்டால் அவை அனைத்தையும் தேடத் தூண்டும்.

தமிழக அரசியலில் திராவிடர் இயக்கங்கள் மறுப்புக்கும் வெறுப்புக்கும் ஆளானவை. காரணம்...? அரசியல் ஆதிக்கம் ஏற்படுத்திய அச்சங் காரணமாக மூளைக்குள் புதைத்துப் பாதுகாக்கப்பட்ட கருத்துக்கள் கட்டுக்குள் அடங்காமல் வெடித்து வெளியேறியபோது...இடைப்பட்ட காலத்தில் அவைக்கு அறிமுகமாகாமல் வளர்ந்த சமுதாயம் திகைத்தது; பெரும்பாலோர் திணறினர். பழக்கங்களுக்குப் பணிந்து போவதையே தம் வழக்கமாகக் கொண்டவர்களுக்கு இது ஒரு பயங்கரமாகத் தோன்றிற்று. அதுவரை இடம் பெற்றிருந்த கருத்துக்களால் உயர்ந்தவர்கள் அடுத்து தமக்கேற்பட இருக்கும் தாழ்வை எண்ணி ஆத்திரப்பட்டனர்.

எல்லைகளுக்கு இதயங்களைக் கட்டுப்படுத்த முயன்றவர்களுக்கும் இதயங்களுக்கு எல்லைகளைக் கட்டுப்படுத்த

உழைத்தவர்களுக்கும் இடையே ஏற்பட்ட போராட்டங்கள் தாம் திராவிட இயக்க வரலாறு.

உலகம் ஒரு உண்மையை அனைவருக்கும் உணர்த்து கிறது.

எல்லைகளில் ஆதிக்கஞ் செலுத்தியவர்கள் இருந்த காலத்தோடு மறக்கப்பட்டனர். இதயங்களைக் கைப்பற்றி யவர்கள் இன்றுவரை சமுதாயத்தால் பாதுகாக்கப்படு கின்றனர்.

கட்டுரைகளைவிட கதைகளுக்கு ஒரு கவர்ச்சி இருக் கிறது. கொத்துவேலை செய்பவர்களை கூலி தருவதோடு சமுதாயம் துண்டித்து விடுகிறது; சிற்பிகள் அதன் சிந்தை யில் சிலையாகி விடுகிறார்கள். உரத்துக் கூச்சல் போடுபவர் களைவிடத் தொண்டையை இழைத்து இசைப்பவர்கள் எவரையும் தம்பால் இழுத்துக் கொள்ளுகிறார்கள்.

அறிவை அடுக்கி வைப்பவர்களைவிட இதயத்தை எழுத்துக்களாக்குவோர்தாம் சாகாத இலக்கியங்களைச் சமைத்திருக்கிறார்கள்.

தன் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாதவர்களாக மட்டு மல்லாமல் எதிர்த்துப் போராடுபவர்களாகவும் இருந்த மக்க ளிடையே ஆண்டவனையும் மதத்தையும் தாக்கிப் பேசிய அமெரிக்க நாட்டுப் பேச்சாளன் இங்கர்சால் புகழோடு பொருளையும் திரட்ட முடிந்ததற்குக் காரணமே அவன் சமுதாயத்தின் இதயத்துக்காக வாதாடியதுதான்!

கொடுமைகளைத் தாங்க முடியாத இதயங்கள்தாம் கொதிப்பேறி மக்களைத் தட்டி எழுப்பின.

ஏதன்ஸ் நகரத்தில் எல்லாமே அளவுக்குமீறி வளர்ந் திருப்பதைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாமல் போன தால்தான் அவற்றை வகைப்படுத்த முயற்சித்தான் பிளே டோவின் உரையாடல்களின் கதாநாயகன் சாக்ரடீஸ்.

ரோம சாம்ராஜ்யத்தின் அடிமைகளாகவும் அடக்கப் பட்டவர்களாகவும் வாழ்ந்து அவதிப்பட்ட யூதர்களின்

நிலைமையைச் சகிக்க முடியாமல் போனதால்தான் உரிமைக்காகப் போராடி, உள்ளம் எதுவாக இருந்தாலும் தன் உருவத்தைப் பதித்தார் இயேசு.

அரபு நாட்டின் ஆதிக்கவாதிகளின் அக்கிரமங்களுக்கும் அட்டூழியங்களுக்கும் பலியாகி தங்கள் வாழ்வை எரித்துக்கொண்ட ஏழை எளிய மக்களின் நிலைகண்டு பொறுக்க முடியாததால்தான் இன்னல்களையே தன் வாழ்வாக ஏற்ருர் நபி நாயகம்.

இங்கிலாந்து நாட்டில் இயந்திரங்களின் வளர்ச்சி ஏழைப் பாட்டாளி மக்களின் வாழ்வைப் பறித்துக்கொண்டது காணச் சகிக்காததால்தான் அவர்கள் எல்லோருக்காகவும் தன்னுடைய எல்லாவற்றையும் மறந்தான்—இழந்தான்—இறுதியில் அழிக்க முடியாத உருவமாகக் காலத்தைக் கைப்பற்றினுன் கார்ல் மார்க்ஸ்.

எல்லைகள் அளவில் பரந்தவை—இதயங்கள் ஆற்றலில் மகத்தானவை.

எல்லைகளைக் கைப்பற்றியவர்கள் வரலாற்றில் இடம் பெற்ருர்கள்; இதயங்களில் நுழைந்தவர்கள் சமுதாயத்தின் வாழ்வாகவே ஆகிவிட்டார்கள்.

எல்லைகள் ஆசைகளைத் தூண்டுபவை; இதயங்கள் அன்பை வளர்ப்பவை.

ஆசை ஆதிக்கத்துக்கு வழிகோலுகிறது; அன்பு அடக்கத்தை உருவாக்குகிறது.

ஆதிக்கத்துக்கே உரித்தான ஆரவாரத்துக்கு மக்கள் அடிமைகளாகிற நிலை மாருவிட்டால்...? அன்பு அடக்கம் என்பவையெல்லாம் அர்த்தமற்ற எழுத்துக்களாகி அகராதிகளுக்குள் அடைபட்டுத்தான் கிடக்க முடியும்.

இதுதான் விதி—இதற்கு விலக்கு இருக்கவே முடியாது.

அன்புள்ள

**டி. கே. சீனிவாசன்**

திருச்சிராப்பள்ளி கோதண்டபாணி சீனிவாசன் — 14-11-1922-ல் பிறந்தார். திருச்சி, பசுமலை, இராமநாதபுரம் ஆகிய ஊர்களில் படித்தார். தென்னக இரயில்வேயில் எழுத்தராகத் திருச்சியில் பணியாற்றினர். அரசியல் காரணமாக அதிலிருந்து வெளியேறினர்.

நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆன இந்தத் தொடர்ச்சியோடு தொடர்ந்தவர். இரயில்வேயில் பணியாற்றிய போது தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளாமல் கட்சி நடத்திய எல்லாப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர். வேலையிலிருந்து விலகிய பிறகு அகவிலை எதிர்ப்புப் போராட்டத்தில் குடந்தையில் கலந்து கொண்டு அதனுல் திருச்சி சிறையில் மூன்று மாத காலம் கடுங்காவல் தண்டனை அனுபவித்தவர்.

குடந்தை நாடாளுமன்றத் தொகுதி வேட்பாளராக 1962ம் ஆண்டு போட்டியிட்டுத் தோற்ருர்.

இப்பொழுது நாடாளுமன்ற மேலவை உறுப்பினர்.

“பொன்னி” இதழில் எழுத்தாளர்; “ஞாயிறு” இதழில் இணை ஆசிரியர்; “தாய் நாடு” இதழில் ஆசிரியர்.